# திருக்குறள்

## மு. வரதராசனார் உரை

# பொருளடக்கம்

## அறத்துப்பால்


1. பாயிரவியல் அதிகாரம்: 1 முதல் 4 வரை
2. இல்லறவியல் அதிகாரம்: 5 முதல் 34 வரை
3. துறவறவியல் அதிகாரம்: 35 முதல் 37 வரை
4. ஊழியல் அதிகாரம்: 38


## பொருட்பால்


1. அரசியல் அதிகாரம்: 39 முதல் 63 வரை
2. அமைச்சியல் அதிகாரம்: 64 முதல் 73 வரை
3. அரணியல் அதிகாரம்: 74 முதல் 75 வரை
4. கூழியல் அதிகாரம்: 76
5. படையியல் அதிகாரம்: 77 முதல் 78 வரை
6. நட்பியல் அதிகாரம்: 79 முதல் 95 வரை
7. குடியியல் அதிகாரம்: 96 முதல் 108 வரை


## இன்பத்துப்பால்


1. களவியல் அதிகாரம்: 109 முதல் 115 வரை
2. கற்பியல் அதிகாரம்: 116 முதல் 133 வரை

# திருக்குறளை எப்படிப் படிப்பது?

எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

1. யார் சொல்வதையும், உண்மை என்று நம்பக்கூடாது.
2. கேள்விகள் கேட்க, கற்றுக் கொள்ள வேண்டும்.
3. என்ன கேள்விகள்?
    1. இது உண்மையா?
    2. ஏன்? எப்பொழுது?
    3. எப்படி? எங்கு?
    4. ஆதாரம் எது? உண்மையான ஆதாரமா?
    5. பிற கேள்விகள்? என்ன கேட்கலாம்?

சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

1. எவை பயன் உடையவை? எவை பயன் இல்லாதவை? ஏன்?
2. பயன் உடையவை: ஆராய்ந்து, தெளிய வேண்டும்
    1. எது எனக்கு நல்ல வழியில் உயர்வைத் தரும்?
    2. எது எனக்கு நல்லது?
3. பயன் இல்லாதவை: ஆராய்ந்து, தெளிய தேவை-இல்லாதவை. எனக்குத் தெரியாது என்று ஒதுக்கி விட வேண்டும். அதைப் பற்றிப் பேசுவதையும், கேட்பதையும் தவிர்க்க வேண்டும்.

கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

1. கற்றுக் கொள்ள வேண்டும். (எதை? ஏன்? எப்படி? யாரிடம்?)
2. நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும்.
3. நன்றாக கற்று (ஆராய்ந்து, முயற்சி செய்து, பயிற்சி செய்து), தெளிய வேண்டும்.
4. கற்றதை தினமும் பயன்படுத்த வேண்டும். அதன் வழியில் நடக்கவேண்டும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக்கொண்டு, குறள்களின் பொருள்களைத் தானே ஆராய வேண்டும் என்பது என் விருப்பம்.

## திருக்குறள் - உற்சாகம் ஊட்டும் வரிகள் - தினமும்

உள்ளத்து அனையது, உயர்வு.
அசாவாமை வேண்டும்;

என் உயர்வு, என்னிடம் உள்ளது. நல்ல எண்ணத்தோடு, நல்ல செயலை, நல்ல முயற்சியோடு நான் செய்தால், என் உயர்வு நிச்சயம். மன உறுதியோடு முயற்சி செய்வேன்.

முயற்சி, திருவினை ஆக்கும்.
முயற்சி, தன்-மெய்-வருத்தக் கூலி-தரும்.
பெருமை, முயற்சி தரும்.

மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை;
அகம்-தூய்மை, வாய்மையால் காணப்படும்.
மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்;
பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்;
பொறுமை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

நல்லதை நினைப்பேன். நல்லதை பேசுவேன்.
அளவாக பேசுவேன். நல்லதை செய்வேன்.
பணிவையும், பொறுமையையும் வளர்த்துக் கொள்வேன்.

அற்றார் அழி-பசி தீர்த்தல்!

பசியால் வாடுபவர்க்கு/இல்லை என்று கேட்பவர்க்கு, என்னால் முடிந்ததை கொடுப்பேன்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்;
நெடு-நீர், மறவி, மடி, துயில்;
புறம்-கூறான் என்றல் இனிது.
பொறாமை, பேராசை, கோபம், கடும் சொல் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.
காலம் தாழ்த்தி செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் - இவைகளை முயற்சி செய்து தவிர்ப்பேன்.

அற்றால், அளவு-அறிந்து உண்க!
பசித்தால், உடலுக்கு நலம் தருவதை, அளவாக சாப்பிடுவேன்.
உடலுக்கு நலம் தராத உணவை, தவிர்ப்பேன்.

# நன்றி

1. தமிழ் இணையக் கல்விக்கழகம்
2. தமிழ் இணையக் கல்விக்கழகம் - திருக்குறள்
3. தமிழிணையம் - மின்னூலகம்
4. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்
5. அழகி - மென்பொருள் செயலி

இந்த முயற்சி, அனைவரும் திருக்குறளை
1. எளிதில் படிக்க
2. நகல் எடுக்க
3. ஒரு அதிகாரத்தை மட்டும் நகல் எடுத்து படிக்க
4. தாளில் படிக்க வசதியாக, எழுத்து அளவு பெரியதாக

1. திருக்குறள் முழுவதும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வலைத்தளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.
2. சில இடங்களில், படிப்பதற்கு எளிதாக மாற்றப்பட்டு உள்ளது.

# நன்றி

1. திருக்குறளுக்கு உரை எழுதிய, உரை ஆசிரியர்கள் அனைவருக்கும்.
2. இனி காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப, தமிழிலும், ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் உரை எழுதப்போகும் ஆசிரியர்கள் அனைவருக்கும்.

நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை, போற்றி ஒழுகப்-படும்.

# திருக்குறள் அதிகாரங்கள்


1. கடவுள் வாழ்த்து ........ 1
2. வான் சிறப்பு ........ 3
3. நீத்தார் பெருமை ........ 5
4. அறன் வலியுறுத்தல் ........ 7
5. இல்வாழ்க்கை ........ 9
6. வாழ்க்கைத்துணை நலம் ........ 11
7. புதல்வரைப் பெறுதல் ........ 13
8. அன்பு உடைமை ........ 15
9. விருந்து ஓம்பல் ........ 17
10. இனியவை கூறல் ........ 19
11. செய்ந்நன்றி அறிதல் ........ 21
12. நடுவு நிலைமை ........ 23
13. அடக்கம் உடைமை ........ 25
14. ஒழுக்கம் உடைமை ........ 27
15. பிறன் இல் விழையாமை ........ 29
16. பொறை உடைமை ........ 31
17. அழுக்காறாமை ........ 33
18. வெஃகாமை ........ 35
19. புறம் கூறாமை ........ 37
20. பயன் இல சொல்லாமை ........ 39
21. தீவினை அச்சம் ........ 41
22. ஒப்புரவு அறிதல் ........ 43
23. ஈகை ........ 45
24. புகழ் ........ 47
25. அருள் உடைமை ........ 49
26. புலால் மறுத்தல் ........ 51
27. தவம் ........ 53
28. கூடா ஒழுக்கம் ........ 55
29. கள்ளாமை ........ 57
30. வாய்மை ........ 59
31. வெகுளாமை ........ 61
32. இன்னா செய்யாமை ........ 63
33. கொல்லாமை ........ 65
34. நிலையாமை ........ 67
35. துறவு ........ 69
36. மெய் உணர்தல் ........ 71

37. அவா அறுத்தல் ........ 73
38. ஊழ் ........ 75
39. இறைமாட்சி ........ 77
40. கல்வி ........ 79
41. கல்லாமை ........ 81
42. கேள்வி ........ 83
43. அறிவுடைமை ........ 85
44. குற்றம் கடிதல் ........ 87
45. பெரியாரைத் துணைக்கோடல் ........ 89
46. சிற்றினம் சேராமை ........ 91
47. தெரிந்து செயல் வகை ........ 93
48. வலி அறிதல் ........ 95
49. காலம் அறிதல் ........ 97
50. இடன் அறிதல் ........ 99
51. தெரிந்து தெளிதல் ........ 101
52. தெரிந்து வினையாடல் ........ 103
53. சுற்றம் தழால் ........ 105
54. பொச்சாவாமை ........ 107
55. செங்கோன்மை ........ 109
56. கொடுங்கோன்மை ........ 111
57. வெருவந்த செய்யாமை ........ 113
58. கண்ணோட்டம் ........ 115
59. ஒற்று ஆடல் ........ 117
60. ஊக்கம் உடைமை ........ 119
61. மடி இன்மை ........ 121
62. ஆள்வினை உடைமை ........ 123
63. இடுக்கண் அழியாமை ........ 125
64. அமைச்சு ........ 127
65. சொல் வன்மை ........ 129
66. வினைத் தூய்மை ........ 131
67. வினைத் திட்பம் ........ 133
68. வினை செயல் வகை ........ 135
69. தூது ........ 137
70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல் ........ 139
71. குறிப்பு அறிதல் ........ 141
72. அவை அறிதல் ........ 143
73. அவை அஞ்சாமை ........ 145

74. நாடு ........ 147
75. அரண் ........ 149
76. பொருள் செயல் வகை ........ 151
77. படை ........ 153
78. படைச் செருக்கு ........ 155
79. நட்பு ........ 157
80. நட்பு ஆராய்தல் ........ 159
81. பழைமை ........ 161
82. தீ நட்பு ........ 163
83. கூடா நட்பு ........ 165
84. பேதைமை ........ 167
85. புல்லறிவு ஆண்மை ........ 169
86. இகல் ........ 171
87. பகைமாட்சி ........ 173
88. பகைத் திறம் தெரிதல் ........ 175
89. உட்பகை ........ 177
90. பெரியாரைப் பிழையாமை ........ 179
91. பெண்வழிச் சேறல் ........ 181
92. வரைவு இல் மகளிர் ........ 183
93. கள் உண்ணாமை ........ 185
94. சூது ........ 187
95. மருந்து ........ 189
96. குடிமை ........ 191
97. மானம் ........ 193
98. பெருமை ........ 195
99. சான்றாண்மை ........ 197
100. பண்பு உடைமை ........ 199
101. நன்றி இல் செல்வம் ........ 201
102. நாண் உடைமை ........ 203
103. குடி செயல் வகை ........ 205
104. உழவு ........ 207
105. நல்குரவு ........ 209
106. இரவு ........ 211
107. இரவு அச்சம் ........ 213
108. கயமை ........ 215

# 1. கடவுள் வாழ்த்து

1 அகரம்-முதல, எழுத்து-எல்லாம்; ஆதி-
பகவன் முதற்றே, உலகு.

2 கற்றதனால் ஆய பயன்-என்கொல்; வால்-அறிவன்
நல்-தாள் தொழாஅர் எனின்?

3 மலர்மிசை ஏகினான் மாண்-அடி சேர்ந்தார்,
நிலமிசை நீடு-வாழ்வார்.

4 வேண்டுதல், வேண்டாமை இலான்; அடி-சேர்ந்தார்க்கு
யாண்டும், இடும்பை-இல.

5 இருள்-சேர் இரு-வினையும் சேரா; இறைவன்
பொருள்-சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6 பொறி-வாயில் ஐந்து-அவித்தான்; பொய்-தீர் ஒழுக்க
நெறி-நின்றார், நீடு-வாழ்வார்.

7 தனக்கு-உவமை இல்லாதான் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
மனக்-கவலை மாற்றல் அரிது.

8 அற-ஆழி அந்தணன் தாள்-சேர்ந்தார்க்கு-அல்லால்,
பிற-ஆழி நீந்தல் அரிது.

9 கோள்-இல் பொறியில் குணம்-இலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10 பிறவிப் பெருங்-கடல் நீந்துவர்; நீந்தார்,
இறைவன் அடி சேராதார்.

1. எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

2. தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

3. அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

4. விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

5. கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

6. ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.

7. தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

8. அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது.

9. கேட்காத செவி பார்க்காத கண் முதலியனபோல் எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

10. இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது.

# 2. வான் சிறப்பு

11 வான்-நின்று உலகம், வழங்கி வருதலால்,
தான்-அமிழ்தம்-என்று உணரல்-பாற்று.

12 துப்பார்க்குத் துப்பு-ஆய துப்பு-ஆக்கி; துப்பார்க்குத்
துப்பு-ஆய தூஉம்; மழை.

13 விண்-இன்று-பொய்ப்பின்; விரிநீர் வியன்-உலகத்து-
உள் நின்று-உடற்றும்; பசி.

14 ஏரின் உழாஅர், உழவர்; புயல்-என்னும்
வாரி வளம்-குன்றிக்கால்.

15 கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய்; மற்று-ஆங்கே
எடுப்பதூஉம்; எல்லாம் மழை.

16 விசும்பின் துளி, வீழின்-அல்லால்; மற்று-ஆங்கே
பசும்-புல் தலை காண்பு-அரிது.

17 நெடுங்-கடலும் தன்-நீர்மை குன்றும்; தடிந்து-எழிலி
தான்-நல்காது ஆகி-விடின்.

18 சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல், வானோர்க்கும், ஈண்டு.

19 தானம், தவம் இரண்டும் தங்கா வியன்-உலகம்;
வானம் வழங்காது எனின்.

20 நீர்-இன்று அமையாது உலகு-எனின்; யார்யார்க்கும்
வான்-இன்று அமையாது ஒழுக்கு.

11. மழை பெய்ய உலகம் வாழ்ந்துவருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.

12. உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

13. மழை பெய்யாமல் பொய்படுமானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.

14. மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், (உணவுப் பொருள்களை உண்டாக்கும்) உழவரும் ஏர்கொண்டு உழ மாட்டார்.

15. பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்.

16. வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது.

17. மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

18. மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகத்தில் வானோர்க்காக நடக்கும் திருவிழாவும் நடைபெறாது; நாள் வழிபாடும் நடைபெறாது.

19. மழை பெய்யவில்லையானால், இந்தப் பெரிய உலகத்தில் பிறர்பொருட்டுச் செய்யும் தானமும், தம் பொருட்டுச் செய்யும் தவமும் இல்லையாகும்.

20. எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

# 3. நீத்தார் பெருமை

21 ஒழுக்கத்து நீத்தார்-பெருமை, விழுப்பத்து
வேண்டும்; பனுவல் துணிவு.

22 துறந்தார் பெருமை துணைக்-கூறின்; வையத்து
இறந்தாரை எண்ணிக்-கொண்டற்று.

23 இருமை, வகை-தெரிந்து ஈண்டு அறம்-பூண்டார்;
பெருமை பிறங்கிற்று, உலகு.

24 உரன்-என்னும் தோட்டியான், ஓர்-ஐந்தும்-காப்பான்;
வரன்-என்னும் வைப்பிற்கு, ஓர்-வித்து.

25 ஐந்து-அவித்தான்-ஆற்றல்; அகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும், கரி.

26 செயற்கு-அரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கு-அரிய செய்கலாதார்.

27 சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின்-
வகை தெரிவான்கட்டே; உலகு.

28 நிறை-மொழி மாந்தர் பெருமை; நிலத்து
மறை-மொழி காட்டிவிடும்.

29 குணம்-என்னும் குன்று-ஏறி நின்றார், வெகுளி
கணம்-ஏயும், காத்தல் அரிது.

30 அந்தணர் என்போர் அறவோர்; மற்று-எவ்-உயிர்க்கும்
செந்-தண்மை பூண்டு-ஒழுகலான்.

21. ஒழுக்கத்தில் நிலைத்துநின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.

22. பற்றுகளைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

23. பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

24. அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.

25. ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

26. செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

27. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தன் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

28. பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.

29. நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

30. எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

# 4. அறன் வலியுறுத்தல்

31 சிறப்பு-ஈனும்; செல்வமும்-ஈனும்; அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ, உயிர்க்கு.

32 அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.

33 ஒல்லும்-வகையான் அறவினை, ஓவாதே
செல்லும்-வாய் எல்லாம் செயல்.

34 மனத்துக்கண் மாசு-இலன் ஆதல்; அனைத்து-அறன்;
ஆகுல நீர, பிற.

35 அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்-சொல்; நான்கும்
இழுக்கா இயன்றது, அறம்.

36 ‘அன்று-அறிவாம்’ என்னாது, அறம்-செய்க; மற்று-அது
பொன்றுங்கால் பொன்றாத்-துணை.

37 ‘அறத்து-ஆறு-இது’ என-வேண்டா; சிவிகை
பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை.

38 வீழ்-நாள் படாஅமை நன்று-ஆற்றின்; அஃது-ஒருவன்
வாழ்-நாள் வழி-அடைக்கும் கல்.

39 அறத்தான் வருவதே இன்பம்; மற்று-எல்லாம்
புறத்த; புகழும் இல.

40 செயற்பாலது ஒரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

31. அறம், சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்; ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது?

32. ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை; அறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை.

33. செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.

34. ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

35. பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறமாகும்.

36. இளைஞராக உள்ளவர் பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்யவேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.

37. பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.

38. ஒருவன் அறம் செய்யத் தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தைச் செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

39. அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும்; அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை.

40. ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறமே, செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

# 5. இல்வாழ்க்கை

41 இல்வாழ்வான் என்பான் இயல்பு-உடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

42 துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்;
இல்வாழ்வான் என்பான் துணை.

43 தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்; என்று ஆங்கு-
ஐம்புலத்து-ஆறு, ஓம்பல் தலை.

44 பழி-அஞ்சிப் பாத்து ஊண்-உடைத்தாயின்; வாழ்க்கை
வழி-எஞ்சல், எஞ்ஞான்றும், இல்.

45 அன்பும், அறனும் உடைத்து-ஆயின்; இல்வாழ்க்கை
பண்பும், பயனும் அது.

46 அறத்து-ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்; புறத்து-ஆற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?

47 இயல்பினான், இல்வாழ்க்கை-வாழ்பவன் என்பான்;
முயல்வாருள் எல்லாம் தலை.

48 ஆற்றின் ஒழுக்கி, அறன்-இழுக்கா இல்வாழ்க்கை;
நோற்பாரின் நோன்மை-உடைத்து.

49 அறன்-எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்-பழிப்பது இல்-ஆயின் நன்று.

50 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்; வான்-உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

41. இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.

42. துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்.

43. தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.

44. பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும்போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

45. இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

46. ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன?

47. அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன்- வாழ முயல்கின்றவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான்.

48. மற்றவரையும் அறநெறியில் ஒழுகச் செய்து, தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரைவிட மிக்க வல்லமை உடைய வாழ்க்கையாகும்.

49. அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும்; அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

50. உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்.

# 6. வாழ்க்கைத்துணை நலம்

51 மனைத்-தக்க மாண்பு-உடையள்-ஆகி, தற்-கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.

52 மனை-மாட்சி, இல்லாள்கண் இல்-ஆயின்; வாழ்க்கை
எனை-மாட்சித்து-ஆயினும், இல்.

53 இல்லது-என், இல்லவள் மாண்பு-ஆனால்? உள்ளது-என்,
இல்லவள் மாணாக்கடை?

54 பெண்ணின் பெருந்தக்க யா-உள? கற்பு-என்னும்
திண்மை உண்டாகப் பெறின்?

55 தெய்வம் தொழாஅள், கொழுநன், தொழுது-எழுவாள்;
'பெய்' என, பெய்யும் மழை.

56 தற்காத்து, தற்-கொண்டாற்-பேணி, தகை-சான்ற
சொற்காத்து, சோர்வு-இலாள்; பெண்.

57 சிறை-காக்கும் காப்பு, எவன்-செய்யும்? மகளிர்
நிறை-காக்கும் காப்பே, தலை.

58 பெற்றாற்-பெறின் பெறுவர், பெண்டிர்; பெருஞ்-சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

59 புகழ்-புரிந்த இல்-இலோர்க்கு இல்லை; இகழ்வார்-முன்
ஏறு-போல் பீடு- நடை.

60 'மங்கலம்' என்ப, மனைமாட்சி; மற்று-அதன்
நன்கலம், நன்-மக்கட்-பேறு.

51. இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத் துணை ஆவாள்.

52. இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால். ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

53. மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவள் நற்பண்பு இல்லாதவளானால் வாழ்க்கையில் இருப்பது என்ன?

54. இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?

55. வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும்!

56. கற்புநெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

57. மகளிரைக் காவல் வைத்துக் காக்கும் காப்புமுறை என்ன பயனை உண்டாக்கும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது.

58. கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப் பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறுவர்.

59. புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு, இகழ்ந்து பேசும் பகைவர்முன் காளைபோல் நடக்கும் பெருமித நடை இல்லை.

60. மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்றும் கூறுவர்.

# 7. புதல்வரைப் பெறுதல்

61 பெறுமவற்றுள் யாம்-அறிவது-இல்லை; அறிவு-அறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

62 எழு-பிறப்பும் தீயவை தீண்டா; பழி-பிறங்காப்
பண்புடை மக்கட்-பெறின்.

63 தம்-பொருள் என்ப தம்-மக்கள்; அவர்-பொருள்
தம்தம் வினையால் வரும்.

64 அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம்-மக்கள்
சிறு-கை அளாவிய கூழ்.

65 மக்கள் மெய்-தீண்டல், உடற்கு-இன்பம்; மற்று-அவர்
சொல்-கேட்டல் இன்பம், செவிக்கு.

66 ‘குழல்-இனிது, யாழ்-இனிது’ என்ப; தம்-மக்கள்
மழலைச்-சொல் கேளாதவர்.

67 தந்தை, மகற்கு-ஆற்றும்-நன்றி; அவையத்து,
முந்தி இருப்பச் செயல்.

68 தம்மின், தம்-மக்கள் அறிவுடைமை; மா-நிலத்து
மன்-உயிர்க்கு எல்லாம் இனிது.

69 ஈன்ற-பொழுதின் பெரிது-உவக்கும்; தன்-மகனைச்
சான்றோன் எனக்-கேட்ட தாய்.

70 மகன், தந்தைக்கு-ஆற்றும் உதவி; ‘இவன் தந்தை
என் நோற்றான்கொல்!’ எனும் சொல்.

61. பெறத் தகுந்த பேறுகளில், அறியவேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர மற்றப் பேறுகளை யாம் மதிப்பதில்லை.

62. பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.

63. தம் மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர்; மக்களாகிய அவர்தம் பொருள்கள் அவரவருடைய வினையின் பயனால் வந்து சேரும்.

64. தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தைவிட மிக்க இனிமை உடையதாகும்

65. மக்களின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தருவதாகும்; அம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம் தருவதாகும்.

66. தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர்.

67. தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

68. தம் மக்களின் அறிவுடைமை, தமக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்.

69. தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள்.

70. மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்க கைம்மாறு, ‘இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ’ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

# 8. அன்பு உடைமை

71 அன்பிற்கும் உண்டோ, அடைக்கும்-தாழ்? ஆர்வலர்
புன்கண்-நீர் பூசல் தரும்.

72 அன்பு-இலார், எல்லாம் தமக்கு-உரியர்; அன்பு-உடையார்
என்பும் உரியர், பிறர்க்கு.

73 ‘அன்போடு இயைந்த வழக்கு’ என்ப; ‘ஆர்-உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு’.

74 அன்பு-ஈனும் ஆர்வம் உடைமை; அது-ஈனும்,
‘நண்பு’ என்னும் நாடாச்-சிறப்பு.

75 ‘அன்புற்று அமர்ந்த வழக்கு’ என்ப; ‘வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு’.

76 ‘அறத்திற்கே அன்பு சார்பு’ என்ப, அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

77 என்பு-இலதனை வெயில் போலக் காயுமே!
அன்பு-இலதனை அறம்.

78 அன்பு, அகத்து-இல்லா உயிர்-வாழ்க்கை; வன்பாற்கண்
வற்றல், மரம்-தளிர்த்தற்று.

79 புறத்து-உறுப்பு எல்லாம் எவன்-செய்யும்? யாக்கை
அகத்து-உறுப்பு அன்பு-இலவர்க்கு?

80 அன்பின் வழியது உயிர்நிலை; அஃது-இலார்க்கு
என்பு தோல்-போர்த்த உடம்பு.

71. அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

72. அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

73. அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

74. அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்; அஃது எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

75. உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

76. அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்; ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.

77. எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல், அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

78. அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

79. உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்?

80. அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

# 9. விருந்து ஓம்பல்

81 இருந்து, ஓம்பி இல்-வாழ்வது-எல்லாம்; விருந்து-ஓம்பி,
வேளாண்மை செய்தற்-பொருட்டு.

82 விருந்து புறத்ததாத் தான்-உண்டல், சாவா-
மருந்து-எனினும், வேண்டற்பாற்று அன்று.

83 வரு-விருந்து வைகலும், ஓம்புவான் வாழ்க்கை;
பருவந்து பாழ்படுதல் இன்று.

84 அகன்-அமர்ந்து செய்யாள் உறையும்; முகன்-அமர்ந்து
நல்-விருந்து ஓம்புவான் இல்.

85 வித்தும் இடல்வேண்டும் கொல்லோ? விருந்து-ஓம்பி,
மிச்சில் மிசைவான் புலம்.

86 செல்-விருந்து ஓம்பி, வரு-விருந்து பார்த்திருப்பான்;
நல்-விருந்து, வானத்தவர்க்கு.

87 இனைத்-துணைத்து என்பது-ஒன்று-இல்லை; விருந்தின்
துணைத்-துணை, வேள்விப் பயன்.

88 ‘பரிந்து-ஓம்பி, பற்று அற்றேம்’ என்பர்; விருந்து-ஓம்பி
வேள்வி தலைப்படாதார்.

89 உடைமையுள் இன்மை; விருந்து-ஓம்பல் ஓம்பா-
மடமை; மடவார்கண் உண்டு.

90 மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்-திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

81. வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவிசெய்யும் பொருட்டே ஆகும்.

82. விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று.

83. தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

84. நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.

85. விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

86. வந்த விருந்தினரைப் போற்றி, இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.

87. விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவு படுத்திக் கூறத்தக்கது அன்று; விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்.

88. விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர், பொருள்களை வருந்திக் காத்து (பின்பு இழந்து) பற்றுக் கோடு இழந்தோமே என்று இரங்குவர்.

89. செல்வ நிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்; அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.

90. அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்; அதுபோல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

# 10. இனியவை கூறல்

91 இன்-சொல்; ஆல்-ஈரம்-அளைஇ, படிறு-இல-ஆம்
செம்பொருள் கண்டார் வாய்ச்-சொல்.

92 அகன்-அமர்ந்து ஈதலின் நன்றே; முகன்-அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

93 முகத்தான்-அமர்ந்து, இனிது-நோக்கி, அகத்தான் ஆம்
இன்-சொலினதே; அறம்.

94 துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்; யார்மாட்டும்
இன்புறூஉம் இன்-சொலவர்க்கு.

95 பணிவு-உடையன், இன்சொலன் ஆதல்; ஒருவற்கு-
அணி; அல்ல, மற்றுப் பிற.

96 அல்லவை தேய, அறம் பெருகும்; நல்லவை-
நாடி, இனிய சொலின்.

97 நயன்-ஈன்று நன்றி-பயக்கும்-பயன்; ஈன்று-
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

98 சிறுமையுள் நீங்கிய இன்சொல்; மறுமையும்,
இம்மையும் இன்பம்-தரும்.

99 இன்-சொல் இனிது-ஈன்றல்-காண்பான்; எவன்கொலோ,
வன்-சொல் வழங்குவது?

100 இனிய உளவாக இன்னாத கூறல்;
கனி இருப்ப, காய் கவர்ந்தற்று.

91. அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

92. முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

93. முகத்தால் விரும்பி - இனிமையுடன் நோக்கி - உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

94. யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.

95. வணக்கம் உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும், மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

96. பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.

97. பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

98. பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்.

99. இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

100. இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

# 11. செய்ந்நன்றி அறிதல்

101 செய்யாமல் செய்த உதவிக்கு; வையகமும்,
வானகமும் ஆற்றல்-அரிது.

102 காலத்தினால் செய்த நன்றி, சிறிது-எனினும்;
ஞாலத்தின் மாணப்-பெரிது.

103 பயன்-தூக்கார் செய்த உதவி, நயன்-தூக்கின்;
நன்மை, கடலின்-பெரிது.

104 தினைத்-துணை நன்றி செயினும், பனைத்-துணையாக்
கொள்வர்; பயன் தெரிவார்.

105 உதவி வரைத்து-அன்று, உதவி; உதவி,
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

106 மறவற்க, மாசு-அற்றார் கேண்மை! துறவற்க,
துன்பத்துள் துப்பு-ஆயார் நட்பு!

107 எழுமை எழு-பிறப்பும் உள்ளுவர்; தம்-கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

108 நன்றி மறப்பது நன்று-அன்று; நன்று-அல்லது
அன்றே மறப்பது நன்று.

109 கொன்றன்ன இன்னா-செயினும்; அவர்-செய்த-
ஒன்றும், நன்று உள்ள, கெடும்.

110 எந்-நன்றி கொன்றார்க்கும் உய்வு-உண்டாம்; உய்வு-இல்லை,
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

101. தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

102. உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.

103. இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

104. ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

105. கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

106. குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது, துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

107. தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

108. ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

109. முன் செய்த உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.

110. எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

# 12. நடுவு நிலைமை

111 தகுதி-என-ஒன்றும் நன்றே; பகுதியான்
பாற்பட்டு ஒழுகப்-பெறின்.

112 செப்பம் உடையவன் ஆக்கம், சிதைவு-இன்றி;
எச்சத்திற்கு ஏமாப்பு-உடைத்து.

113 நன்றே தரினும், நடுவு-இகந்து ஆம் ஆக்கத்தை;
அன்றே ஒழிய-விடல்!

114 தக்கார், தகவு-இலர் என்பது; அவர்-அவர்
எச்சத்தால் காணப்-படும்.

115 கேடும், பெருக்கமும் இல்-அல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு-அணி.

116 ‘கெடுவல்-யான்’ என்பது அறிக; தன்-நெஞ்சம்
நடுவு-ஓரீஇ, அல்ல செயின்.

117 கெடுவாக வையாது உலகம்; நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

118 சமன்-செய்து, சீர்-தூக்கும் கோல்-போல் அமைந்து-ஒருபால்
கோடாமை; சான்றோர்க்கு அணி.

119 சொற்-கோட்டம் இல்லது, செப்பம் ஒருதலையா;
உட்-கோட்டம் இன்மை பெறின்.

120 வாணிகம் செய்வார்க்கு வாணிகம்; பேணிப்-
பிறவும் தமபோல் செயின்.

111. அந்தந்தப் பகுதிதோறும் முறையோடு பொருந்தி ஒழுகப்பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும்.

112. நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியிலுள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

113. தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

114. நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சிநிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

115. கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவை அல்ல; ஆகையால் நெஞ்சில் நடுவுநிலைமை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகாகும்.

116. தன் நெஞ்சம் நடுவுநிலைமை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், 'நான் கெடப்போகின்றேன்' என்று ஒருவன் அறிய வேண்டும்.

117. நடுவுநிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம்.

118. முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

119. உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லினும் கோணுதல் இல்லா திருத்தல் நடுவுநிலைமையாம்.

120. பிறர் பொருளையும் தம்பொருள்போல் போற்றிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வோர்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.

# 13. அடக்கம் உடைமை

121 அடக்கம், அமரருள் உய்க்கும்; அடங்காமை,
ஆர்-இருள் உய்த்து-விடும்.

122 காக்க-பொருளா, அடக்கத்தை; ஆக்கம்
அதனின் ஊங்கு-இல்லை, உயிர்க்கு!

123 செறிவு-அறிந்து சீர்மை பயக்கும்; அறிவு-அறிந்து
ஆற்றின் அடங்கப்-பெறின்.

124 நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்;
மலையினும் மாணப்-பெரிது.

125 எல்லார்க்கும் நன்று-ஆம், பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

126 ஒருமையுள், ஆமை-போல், ஐந்து-அடக்கல் ஆற்றின்;
எழுமையும், ஏமாப்பு-உடைத்து.

127 யா-காவார் ஆயினும், நா-காக்க; காவாக்கால்,
சோகாப்பர், சொல்-இழுக்குப்-பட்டு.

128 ஒன்றானும் தீச்சொற் பொருட்-பயன் உண்டாயின்;
நன்று-ஆகாது-ஆகிவிடும்.

129 தீயினால் சுட்ட-புண், உள்-ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட, வடு.

130 கதம்-காத்து, கற்று, அடங்கல்-ஆற்றுவான் செவ்வி;
அறம்-பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

121. அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும்.

122. அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்கவேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

123. அறியவேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப் பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

124. தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும்.

125. பணிவுடையராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும்; அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

126. ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

127. காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும்; காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

128. தீய சொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும்.

129. தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும் . ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.

130. சினம் தோன்றாமல் காத்து, கல்வி கற்று, அடக்கமுடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

# 14. ஒழுக்கம் உடைமை

131 ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்-படும்.

132 பரிந்து ஓம்பிக்-காக்க, ஒழுக்கம்; தெரிந்து-ஓம்பித்
தேரினும், அஃதே துணை!

133 ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

134 மறப்பினும், ஒத்துக்-கொளல் ஆகும்; பார்ப்பான்
பிறப்பு-ஒழுக்கம் குன்றக்-கெடும்.

135 அழுக்காறு உடையான்கண், ஆக்கம்-போன்று இல்லை;
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

136 ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்; இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

137 ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர், எய்தாப்-பழி.

138 நன்றிக்கு வித்து-ஆகும், நல்-ஒழுக்கம்; தீ-ஒழுக்கம்,
என்றும் இடும்பை தரும்.

139 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே; தீய
வழுக்கியும், வாயால் சொலல்.

140 உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல-கற்றும்,
கல்லார் அறிவிலாதார்.

131. ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

132. ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

133. ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும்.

134. கற்ற மறைப்பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக் கற்றுக் கொள்ள முடியும்; ஆனால் மறை ஓதுவானுடைய குடிப்பிறப்பு, ஒழுக்கம் குன்றினால் கெடும்.

135. பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லையாகும்.

136. ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.

137. ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடைவர்; ஒழுக்கத்திலிருந்து தவறுவதால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர்.

138. நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

139. தீய சொற்களை தவறியும் தம்முடைய வாயால் சொல்லும் குற்றம், ஒழுக்கம் உடையவர்க்குப் பொருந்தாததாகும்.

140. உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

## 15. பிறன் இல் விழையாமை

141 பிறன்-பொருளாள் பெட்டு-ஒழுகும் பேதைமை; ஞாலத்து
அறம், பொருள் கண்டார்கண் இல்.

142 அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை
நின்றாரின், பேதையார் இல்.

143 விளிந்தாரின் வேறு-அல்லர், மன்ற; தெளிந்தார்-இல்
தீமை புரிந்து-ஒழுகுவார்.

144 எனைத்-துணையர் ஆயினும் என்னாம்? தினைத்-
துணையும்
தேரான், பிறன்-இல் புகல்?

145 'எளிது' என இல்-இறப்பான், எய்தும்; எஞ்-ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

146 பகை, பாவம், அச்சம், பழி என-நான்கும்
இகவா-ஆம்; இல் இறப்பான்கண்.

147 அறன்-இயலான் இல்வாழ்வான் என்பான்; பிறன்-இயலாள்
பெண்மை நயவாதவன்.

148 பிறன்-மனை நோக்காத பேர்-ஆண்மை, சான்றோர்க்கு
அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு.

149 'நலக்கு உரியார் யார்?' எனின், நாம-நீர்-வைப்பில்
பிறற்கு-உரியாள் தோள் தோயாதார்.

150 அறன்-வரையான், அல்ல செயினும், பிறன்-வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

141. பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை.

142. அறத்தை விட்டுத் தீநெறியில் நின்றவர் எல்லாரிலும் பிறன் மனைவியை விரும்பி அவனுடைய வாயிலில் சென்று நின்றவரைப் போல் அறிவிலிகள் இல்லை.

143. ஐயமில்லாமல் தெளிந்து நம்பியவருடைய மனைவியிடத்தே விருப்பம் கொண்டு தீமையைச் செய்து நடப்பவர், செத்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்.

144. தினையளவும் ஆராய்ந்து பார்க்காமல் பிறனுடைய மனைவியிடம் செல்லுதல், எவ்வளவு பெருமையை உடையவராயினும் என்னவாக முடியும்?

145. இச் செயல் எளியது என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்கின்றவன், எப்போதும் அழியாமல் நிலைநிற்கும் பழியை அடைவான்.

146. பகை பாவம் அச்சம் பழி என்னும் இந்நான்கு குற்றங்களும் பிறன் மனைவியிடத்து நெறி தவறி நடப்பவனிடத்திலிருந்து நீங்காவாம்.

147. அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்க்கை வாழ்பவன், பிறனுக்கு உரிமையானவளின் பெண் தன்மையை விரும்பாதவனே.

148. பிறனுடைய மனைவியை விரும்பி நோக்காத பெரிய ஆண்மை, சான்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமுமாகும்.

149. கடல் சூழ்ந்த உலகத்தில் நன்மைக்கு உரியவர் யார் என்றால் பிறனுக்கு உரிமையானவளின் தோளைப் பொருந்தாதவரே ஆவர்.

150. ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது.

# 16. பொறை உடைமை

151 அகழ்வாரைத் தாங்கும் நிலம்-போல, தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

152 பொறுத்தல், இறப்பினை என்றும்; அதனை
மறத்தல், அதனினும் நன்று.

153 இன்மையுள் இன்மை விருந்து-ஒரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப்-பொறை.

154 நிறை-உடைமை நீங்காமை வேண்டின்; பொறை-உடைமை,
போற்றி ஒழுகப்-படும்.

155 ஒறுத்தாரை, ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப், பொன்போல் பொதிந்து.

156 ஒறுத்தார்க்கு, ஒரு-நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்,
பொன்றும் துணையும் புகழ்.

157 திறன்-அல்ல தன்-பிறர் செய்யினும்; நோ-நொந்து,
அறன்-அல்ல செய்யாமை நன்று.

158 மிகுதியான் மிக்கவை செய்தாரை; தாம்-தம்
தகுதியான், வென்று-விடல்!

159 துறந்தாரின் தூய்மை உடையர்; இறந்தார்வாய்
இன்னாச்-சொல் நோற்கிற்-பவர்.

160 உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்-சொல்லும்
இன்னாச்-சொல் நோற்பாரின் பின்.

151. தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

152. வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்துவிடுதல் பொறுத்தலைவிட நல்லது.

153. வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

154. நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னை விட்டு நீங்காமலிருக்க வேண்டினால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும்.

155. (தீங்கு செய்தவரைப்) பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால் பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.

156. தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

157. தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து அறம் அல்லாதவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

158. செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்றுவிட வேண்டும்.

159. வரம்பு கடந்து நடப்பவரின் வாயில் பிறக்கும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறந்தவரைப் போலத் தூய்மையானவர் ஆவர்.

160. உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்கு அடுத்த நிலையில்தான் பெரியவர் ஆவர்.

# 17. அழுக்காறாமை

161 ஒழுக்கு ஆறாக் கொள்க; ஒருவன்-தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

162 விழுப்-பேற்றின் அஃது-ஒப்பது இல்லை; யார்-மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

163 அறன், ஆக்கம் வேண்டாதான் என்பான்; பிறன்-ஆக்கம்
பேணாது அழுக்கறுப்பான்.

164 அழுக்காற்றின் அல்லவை செய்யார்; இழுக்கு-ஆற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

165 அழுக்காறு உடையார்க்கு அது-சாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடு-ஈன்பது.

166 கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்; உடுப்பதூஉம்,
உண்பதூஉம் இன்றிக்-கெடும்.

167 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

168 அழுக்காறு என ஒரு-பாவி; திருச்-செற்று,
தீயுழி உய்த்து-விடும்.

169 அவ்விய நெஞ்சத்தான், ஆக்கமும்; செவ்வியான்,
கேடும்; நினைக்கப்-படும்.

170 அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது-இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

161. ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்கநெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.

162. யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

163. தனக்கு அறமும் ஆக்கமும் விரும்பாதவன் என்று கருதத்தக்கவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் பொறாமைப்படுவான்.

164. பொறாமைப்படுதலாகிய தவறான நெறியில் துன்பம் ஏற்படுதலை அறிந்து, பொறாமை காரணமாக அறமல்லாதவைகளைச் செய்யார் அறிவுடையோர்.

165. பொறாமை உடையவர்க்கு வேறு பகை வேண்டா. அஃது ஒன்றே போதும், பகைவர் தீங்குசெய்யத் தவறினாலும் தவறாமல் கேட்டைத் தருவது அது.

166. பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

167. பொறாமை உடையவனைத் திருமகள் கண்டு பொறாமைப்பட்டுத் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி நீங்கி விடுவாள்.

168. பொறாமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்துத் தீய வழியில் அவனைச் செலுத்திவிடும்.

169. பொறாமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத் தக்கவை.

170. பொறாமைப்பட்டுப் பெருமையுற்றவரும் உலகத்தில் இல்லை; பொறாமை இல்லாதவராய் மேம்பாட்டிலிருந்து நீங்கியவரும் இல்லை.

## 18. வெஃகாமை

171 நடுவு-இன்றி நன்-பொருள் வெஃகின்; குடி-பொன்றி,
குற்றமும் ஆங்கே தரும்.

172 படு-பயன் வெஃகி, பழிப்படுவ செய்யார்;
நடுவு-அன்மை நாணுபவர்.

173 சிற்றின்பம் வெஃகி, அறன்-அல்ல செய்யாரே;
மற்று-இன்பம் வேண்டு-பவர்.

174 ‘இலம்’ என்று வெஃகுதல் செய்யார்; புலம்-வென்ற
புன்மை-இல் காட்சி-யவர்.

175 அஃகி அகன்ற அறிவு, என்-ஆம்; யார்மாட்டும்
வெஃகி, வெறிய செயின்?

176 அருள்-வெஃகி, ஆற்றின்கண் நின்றான்; பொருள்-வெஃகிப்
பொல்லாத சூழ, கெடும்.

177 வேண்டற்க, வெஃகி-ஆம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற்கு அரிது-ஆம் பயன்!

178 ‘அஃகாமை செல்வத்திற்கு யாது?’ எனின்; வெஃகாமை-
வேண்டும் பிறன் கைப்-பொருள்.

179 அறன்-அறிந்து வெஃகா அறிவு-உடையார்ச் சேரும்;
திறன்-அறிந்து ஆங்கே திரு.

180 இறல்-ஈனும், எண்ணாது வெஃகின்; விறல்-ஈனும்,
வேண்டாமை என்னும் செருக்கு.

171. நடுவுநிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் கவர விரும்பினால் அவனுடைய குடியும் கெட்டு குற்றமும் அப்பொழுதே வந்து சேரும்.

172. நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர், பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிப் பழியான செயல்களைச் செய்யார்.

173. அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார்.

174. ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவை உடையவர், 'யாம் வறுமை அடைந்தோம்' என்று எண்ணியும் பிறர் பொருளை விரும்பார்.

175. யாரிடத்திலும் பொருளைக் கவர விரும்பிப் பொருந்தாதவற்றைச் செய்தால், நுட்பமானதாய் விரிவுடையதாய் வளர்ந்த அறிவால் பயன் என்ன?

176. அருளை விரும்பி அறநெறியில் நின்றவன், பிறனுடைய பொருளை விரும்பிப் பொல்லாத குற்றங்களை எண்ணினால் கெடுவான்.

177. பிறர் பொருளைக் கவர விரும்புவதால் ஆகும் ஆக்கத்தை விரும்பாதிருக்க வேண்டும்; அது பயன் விளைக்கும்போது அப்பயன் நன்மையாவது அரிதாகும்.

178. ஒருவனுடைய செல்வத்திற்குக் குறைவு நேராதிருக்க வழி எது என்றால், அவன் பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

179. அறம் இஃது என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் சேரும் திறன் அறிந்து அதற்கு ஏற்றவாறு சேர்வாள்.

180. விளைவை எண்ணாமல் பிறர் பொருளை விரும்பினால் அஃது அழிவைத் தரும்; அப்பொருளை விரும்பாமல் வாழும் பெருமை வெற்றியைத் தரும்.

# 19. புறம் கூறாமை

181 அறம்-கூறான், அல்ல செயினும்; ஒருவன்
புறம்-கூறான் என்றல் இனிது.

182 அறன்-அழீஇ அல்லவை செய்தலின் தீதே;
புறன்-அழீஇப் பொய்த்து நகை.

183 புறம்-கூறி, பொய்த்து, உயிர்-வாழ்தலின்; சாதல்,
அறம்-கூறும் ஆக்கம் தரும்.

184 கண்-நின்று, கண்-அறச் சொல்லினும்; சொல்லற்க,
முன்-இன்று பின்-நோக்காச் சொல்.

185 அறம்-சொல்லும் நெஞ்சத்தான் அன்மை; புறம்-சொல்லும்
புன்மையால் காணப்-படும்.

186 பிறன்-பழி கூறுவான்; தன்-பழியுள்ளும்
திறன்-தெரிந்து கூறப்-படும்.

187 பகச்-சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்-சொல்லி,
நட்பு-ஆடல் தேற்றா-தவர்.

188 துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்;
என்னைகொல், ஏதிலார்-மாட்டு?

189 அறன்-நோக்கி ஆற்றும்-கொல் வையம்; புறன்-நோக்கிப்
புன்-சொல் உரைப்பான் பொறை.

190 ஏதிலார் குற்றம்-போல் தம்-குற்றம் காண்கிற்-பின்;
தீது-உண்டோ, மன்னும் உயிரக்கு?

181. ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும் மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் நல்லது.

182. அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்தலைவிட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

183. புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்துவிடுதல் அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

184. எதிரே நின்று கணணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

185. அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாத தன்மை, ஒருவன் மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்.

186. மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

187. மகிழும்படியாகப் பேசி நட்புக்கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மைவிட்டு நீங்கும்படியாகப் புறங்கூறி நண்பரையும் பிரித்துவிடுவர்.

188. நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர், பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?

189. ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல்பாரத்தை, ‘இவனையும் சுமப்பதே எனக்கு அறம்’ என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?

190. அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காணவல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

# 20. பயன் இல சொல்லாமை

191 பல்லார் முனியப் பயன்-இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்-படும்.

192 பயன்-இல பல்லார்முன் சொல்லல்; நயன்-இல
நட்டார்கண் செய்தலின், தீது.

193 நயன்-இலன் என்பது சொல்லும்; பயன்-இல
பாரித்து உரைக்கும் உரை.

194 நயன்-சாரா நன்மையின் நீக்கும்; பயன்-சாராப்
பண்பு-இல்-சொல் பல்லார்-அகத்து.

195 சீர்மை, சிறப்பொடு நீங்கும்; பயன்-இல,
நீர்மை-உடையார் சொலின்.

196 பயன்-இல்-சொல் பாராட்டுவானை மகன்-எனல்!
மக்கட்-பதடி எனல்!

197 நயன்-இல சொல்லினும், சொல்லுக! சான்றோர்
பயன்-இல, சொல்லாமை-நன்று.

198 அரும்-பயன் ஆயும் அறிவினார், சொல்லார்;
பெரும்-பயன் இல்லாத சொல்.

199 பொருள்-தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்; மருள்-தீர்ந்த
மாசு-அறு காட்சி-யவர்.

200 சொல்லுக, சொல்லில் பயன்-உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன்-இலாச் சொல்!

191. கேட்டவர் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லோராலும் இகழப்படுவான்.

192. பலர் முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லாத செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

193. ஒருவன் பயனில்லாத பொருள்களைப் பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.

194. பயனோடு பொருந்தாத பண்பு இல்லாத சொற்களைப் பலரிடத்தும் சொல்லுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மையிலிருந்து நீங்கச் செய்யும்.

195. பயனில்லாத சொற்களை நல்ல பண்பு உடையவர் சொல்லுவாரானால், அவருடைய மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கிவிடும்.

196. பயனில்லாத சொற்களைப் பலமுறையும் சொல்லுகின்ற ஒருவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; மக்களுள் பதர் என்றே சொல்ல வேண்டும்.

197. அறம் இல்லாதவற்றைச் சொன்னாலும் சொல்லலாம்; சான்றோர் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருத்தல் நன்மையாகும்.

198. அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்.

199. மயக்கத்திலிருந்து தெளிந்த மாசற்ற அறிவை உடையவர், பயன் நீங்கிய சொற்களை ஒருகால் மறந்தும் சொல்லமாட்டார்.

200. சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும்; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவேகூடாது.

# 21. தீவினை அச்சம்

201 தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்;
தீவினை என்னும் செருக்கு.

202 தீயவை தீய பயத்தலான்; தீயவை,
தீயினும் அஞ்சப்-படும்.

203 அறிவினுள் எல்லாம் தலை-என்ப; தீய,
செறுவார்க்கும் செய்யா விடல்.

204 மறந்தும், பிறன்-கேடு சூழற்க! சூழின்,
அறம்-சூழும், சூழ்ந்தவன் கேடு.

205 ‘இலன்’-என்று தீயவை செய்யற்க! செய்யின்,
இலன்-ஆகும், மற்றும் பெயர்த்து.

206 தீப்-பால தான் பிறர்கண் செய்யற்க; நோய்ப்-பால
தன்னை அடல் வேண்டாதான்!

207 எனைப்-பகை உற்றாரும் உய்வர்; வினைப்-பகை
வீயாது, பின்-சென்று, அடும்.

208 தீயவை செய்தார் கெடுதல்; நிழல்-தன்னை
வீயாது அடி-உறைந்தற்று.

209 தன்னைத்-தான் காதலன் ஆயின்; எனைத்து-ஒன்றும்
துன்னற்க, தீவினைப்-பால்!

210 அருங்-கேடன் என்பது அறிக; மருங்கு-ஓடித்
தீவினை செய்யான் எனின்?

201. தீயவை செய்தலாகிய செருக்கைத் தீவினை உடைய பாவிகள் அஞ்சார்; தீவினை இல்லாத மேலோர் மட்டுமே அஞ்சுவர்.

202. தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீய செயல்கள் தீயைவிடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும்.

203. தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாமலிருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.

204. பிறனுக்குக் கேட்டைத் தரும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது. எண்ணினால், எண்ணியவனுக்குக் கேடு விளையுமாறு அறம் எண்ணும்.

205. 'யான் வறியவன்' என்று நினைத்துத் தீய செயல்களைச் செய்யக்கூடாது; செய்தால் மீண்டும் வறியவன் ஆகி வருந்துவான்.

206. துன்பம் செய்யும் தீவினைகள் தன்னை வருத்துதலை விரும்பாதவன், தீய செயல்களைத் தான் பிறர்க்குச் செய்யாமலிருக்கவேண்டும்.

207. எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும்; ஆனால் தீயவை செய்தால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின்சென்று வருத்தும்.

208. தீய செயல்களைச் செய்தவர் கேட்டை அடைதல், ஒருவனுடைய நிழல் அவனை விடாமல் வந்து அடியில் தங்கியிருத்தலைப் போன்றது.

209. ஒருவன் தன்னைத் தான் விரும்பி வாழ்பவனாயின், தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும்.

210. ஒருவன் தவறான நெறியில் சென்று தீய செயல் செய்யாதிருப்பானானால் அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம்.

# 22. ஒப்புரவு அறிதல்

211 கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்-ஆற்றும் கொல்லோ, உலகு?

212 தாள்-ஆற்றித் தந்த-பொருள்-எல்லாம்; தக்கார்க்கு,
வேளாண்மை செய்தற் பொருட்டு.

213 புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல்-அரிதே;
ஒப்புரவின் நல்ல பிற.

214 ஒத்தது-அறிவான் உயிர்-வாழ்வான்; மற்றையான்,
செத்தாருள் வைக்கப்-படும்.

215 ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகு-அவாம்
பேர்-அறிவாளன் திரு.

216 பயன்-மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்; செல்வம்
நயன்-உடையான்கண் படின்.

217 மருந்து-ஆகித் தப்பா மரத்தற்றால்; செல்வம்
பெருந்தகையான்கண் படின்.

218 இடன்-இல் பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்;
கடன்-அறி காட்சி-யவர்.

219 நயன்-உடையான் நல்கூர்ந்தான் ஆதல்-செயும்; நீர-
செய்யாது அமைகலா ஆறு.

220 'ஒப்புரவினால் வரும், கேடு' எனின்; அஃது-ஒருவன்
விற்றுக்-கோள் தக்கது உடைத்து.

211. இந்த உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை.

212. ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்.

213. பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப்போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.

214. ஒப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர்வாழ்கின்றவன் ஆவான்; மற்றவன் செத்தவருள் சேர்த்துக் கருதப்படுவான்.

215. ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது.

216. ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சோந்தால், அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.

217. ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அஃது எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரம் போன்றது.

218. ஒப்புரவு அறிந்து ஒழுகுதலாகிய தம் கடமை அறிந்த அறிவை உடையவர், சொல்வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார்.

219. ஒப்புரவாகிய நற்பண்பு உடையவன் வறுமை உடையவனாதல், செய்யத்தக்க உதவிகளைச் செய்யாமல் வருந்துகின்ற தன்மையாகும்.

220. ஒப்புரவால் கேடு வரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.

## 23. ஈகை

221 வறியார்க்கு-ஒன்று ஈவதே ஈகை; மற்று-எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

222 ‘நல்லாறு’ எனினும், கொளல் தீது; ‘மேல் உலகம்
இல்’ எனினும், ஈதலே நன்று.

223 ‘இலன்’-என்னும் எவ்வம் உரையாமை; ஈதல்,
குலன் உடையான்கண்ணே உள.

224 இன்னாது, இரக்கப்படுதல்; இரந்தவர்
இன்-முகம் காணும் அளவு.

225 ஆற்றுவார் ஆற்றல் பசி-ஆற்றல்; அப்-பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

226 அற்றார் அழி-பசி தீர்த்தல்! அஃது-ஒருவன்
பெற்றான் பொருள் வைப்பு-உழி.

227 பாத்து-ஊண் மரீஇ-யவனைப்; பசி-என்னும்
தீப்பிணி, தீண்டல் அரிது.

228 ஈத்து, உவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம்-உடைமை,
வைத்து-இழக்கும் வன்-கணவர்?

229 இரத்தலின் இன்னாது மன்ற; நிரப்பிய
தாமே தமியர் உணல்.

230 சாதலின் இன்னாதது இல்லை; இனிது, அதூஉம்
ஈதல் இயையாக்-கடை.

221. வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

222. பிறரிடமிருந்து பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது. மேலுலகம் இல்லையென்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது.

223. 'யான் வறியவன்' என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு.

224. பொருள் வேண்டும் என்று இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுதலும் துன்பமானது.

225. தவ வலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

226. வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

227. தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுதல் இல்லை.

228. தாம் சேர்த்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்துவிடும் வன்கண்மை உடையவர் பிறர்க்குக் கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ?

229. பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இரப்பதைவிடத் துன்பமானது.

230. சாவதைவிடத் துன்பமானது வேறொன்றும் இல்லை. ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும்.

## 24. புகழ்

231 ஈதல்! இசைபட வாழ்தல்! அது-அல்லது
ஊதியம் இல்லை, உயிர்க்கு.

232 உரைப்பார் உரைப்பவை எல்லாம்; இரப்பார்க்கு, ஒன்று-
ஈவார்-மேல் நிற்கும் புகழ்.

233 ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்,
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

234 நில-வரை நீள்-புகழ் ஆற்றின்; புலவரைப்
போற்றாது, புத்தேள் உலகு.

235 நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும்,
வித்தகர்க்கு அல்லால் அரிது.

236 தோன்றின், புகழொடு தோன்றுக! அஃது-இலார்
தோன்றலின், தோன்றாமை நன்று.

237 புகழ்பட வாழாதார் தம்-நோவார்; தம்மை
இகழ்வாரை நோவது எவன்?

238 ‘வசை’ என்ப, வையத்தார்க்கு எல்லாம்; ‘இசை’ என்னும்
எச்சம் பெறாஅவிடின்.

239 வசை-இலா வண்-பயன் குன்றும்; இசை-இலா
யாக்கை பொறுத்த நிலம்.

240 வசை-ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை-ஒழிய
வாழ்வாரே வாழா-தவர்.

231. வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

232. புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவரின் மேல் நிற்கின்ற புகழேயாகும்.

233. உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.

234. நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகம் (அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல்) தேவரைப் போற்றாது.

235. புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ் நிலை நிற்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.

236. ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது.

237. தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்துகொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்துக்கொள்ளக் காரணம் என்ன?

238. தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைக் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.

239. புகழ் பெறாமல் வாழ்வைக் கழித்தவருடைய உடம்பைச் சுமந்த நிலம், வசையற்ற வளமான பயனாகிய விளைவு இல்லாமல் குன்றிவிடும்.

240. தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

# 25. அருள் உடைமை

241 அருள்-செல்வம், செல்வத்துள் செல்வம்; பொருள்-செல்வம்
பூரியார்கண்ணும் உள.

242 நல்-ஆற்றான் நாடி அருள்-ஆள்க! பல்-ஆற்றான்
தேரினும் அஃதே துணை.

243 அருள்-சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை; இருள்-சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

244 ‘மன்-உயிர்-ஓம்பி, அருள்-ஆள்வார்க்கு இல்’ என்ப;
‘தன்-உயிர் அஞ்சும் வினை’.

245 அல்லல், அருள்-ஆள்வார்க்கு இல்லை; வளி-வழங்கும்
மல்லல் மா-ஞாலம் கரி.

246 ‘பொருள்-நீங்கிப் பொச்சாந்தார்’ என்பர்; அருள்-நீங்கி
அல்லவை செய்து-ஒழுகுவார்.

247 அருள்-இல்லார்க்கு, அவ்-உலகம் இல்லை; பொருள்-
இல்லார்க்கு,
இவ்-உலகம் இல்லாகி-யாங்கு.

248 பொருள்-அற்றார், பூப்பர் ஒருகால்; அருள்-அற்றார்,
அற்றார்; மற்று-ஆதல் அரிது.

249 தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்; தேரின்,
அருளாதான் செய்யும் அறம்.

250 வலியார்-முன், தன்னை நினைக்க; தான்-தன்னின்
மெலியார்-மேல், செல்லும் இடத்து.

241. பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; (உயர்ந்தவரிடத்தில் மட்டும் உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

242. நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும். பல வழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக உள்ளது.

243. அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

244. தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.

245. அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.

246. அருள் இல்லாதவராய் அறமல்லாதவைகளைச் செய்து நடப்பவர்களை, உறுதிப்பொருளாகிய அறத்திலிருந்து நீங்கித் தம் வாழ்க்கையின் குறிக்கோளை மறந்தவர் என்பர்.

247. பொருள் இலாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.

248. பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர்; அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயன் அற்றவரே; அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.

249. அருள் மேற்கொள்ளாதவன் செய்கின்ற அறச்செயலை ஆராய்ந்தால், அஃது அறிவு தெளியாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டாற் போன்றது.

250. (அருள் இல்லாதவன்) தன்னைவிட மெலிந்தவர்மேல் துன்புறுத்தச் செல்லும்போது, தன்னைவிட வலியவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்க வேண்டும்.

# 26. புலால் மறுத்தல்

251 தன்-ஊன் பெருக்கற்குத் தான்-பிறிது ஊன்-உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

252 பொருள்-ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருள்-ஆட்சி
ஆங்கு-இல்லை, ஊன்-தின்பவர்க்கு.

253 படை-கொண்டார் நெஞ்சம்-போல், நன்று-ஊக்காது; ஒன்றன்
உடல்-சுவை, உண்டார் மனம்.

254 'அருள்', அல்லது யாது? எனின்; கொல்லாமை, கோறல்;
பொருள்-அல்லது, அவ்-ஊன்-தினல்.

255 உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்-உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

256 தினற்-பொருட்டால் கொல்லாது உலகு-எனின்; யாரும்
விலைப்-பொருட்டால் ஊன்-தருவார் இல்.

257 உண்ணாமை வேண்டும், புலாஅல்; பிறிது-ஒன்றன்
புண்; அது உணர்வார்ப் பெறின்.

258 செயிரின் தலைப்-பிரிந்த காட்சியார் உண்ணார்;
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

259 அவி-சொரிந்து ஆயிரம் வேட்டலின்; ஒன்றன்
உயிர்-செகுத்து உண்ணாமை நன்று.

260 கொல்லான், புலாலை மறுத்தானை; கைகூப்பி,
எல்லா உயிரும் தொழும்.

251. தன் உடம்பைப் பெருக்கச் செய்வதற்காகத் தான் மற்றோர் உயிரின் உடம்பைத் தின்கின்றவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்க முடியும்?

252. பொருளுடையவராக இருக்கும் சிறப்பு, அப்பொருளை வைத்துக் காப்பாற்றாதவர்க்கு இல்லை; அருளுடையவராக இருக்கும் சிறப்பு, புலால் தின்பவர்க்கு இல்லை.

253. ஓர் உயிரின் உடம்பைச் சுவையாக உண்டவரின் மனம் கொலைக்கருவியைக் கையில் கொண்டவரின் நெஞ்சம் போல் நன்மையாகிய அருளைப் போற்றாது.

254. அருள் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமலிருத்தல்; அருளல்லாதது எது என்றால் உயிரைக் கொல்லுதல்; அதன் உடம்பைத் தின்னுதல் அறம் அல்லாதது.

255. உயிர்கள் உடம்புபெற்று வாழும் நிலைமை, ஊன் உண்ணாதிருத்தலை அடிப்படையாகக் கொண்டது; ஊன் உண்டால் நரகம் அவனை வெளிவிடாது.

256. புலால் தின்னும்பொருட்டு உலகத்தார் உயிர்களைக் கொல்லாதிருப்பாரானால், விலையின் பொருட்டு ஊன் விற்பவர் இல்லாமல் போவர்.

257. புலால் உண்ணாமலிருக்க வேண்டும்; ஆராய்ந்து அறிவாரைப் பெற்றால், அப்புலால் வேறோர் உயிரின் புண் என்பதை உணரலாம்.

258. குற்றத்திலிருந்து நீங்கிய அறிவை உடையவர், ஓர் உயிரினடத்திலிருந்து பிரிந்துவந்த உடம்பாகிய ஊனை உண்ணமாட்டார்.

259. நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஒன்றன் உயிரைக் கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது.

260. ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

# 27. தவம்

261 உற்ற நோய்-நோன்றல், உயிர்க்கு-உறுகண் செய்யாமை-
அற்றே; தவத்திற்கு உரு.

262 தவமும் தவம்-உடையார்க்கு ஆகும்; அவம், அதனை
அஃது-இலார் மேற்-கொள்வது.

263 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்;
மற்றை-யவர்கள் தவம்!

264 ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்;
எண்ணின், தவத்தான் வரும்.

265 வேண்டிய வேண்டியாங்கு எய்தலான்; செய்-தவம்
ஈண்டு முயலப்-படும்.

266 தவம்-செய்வார், தம்-கருமம் செய்வார்; மற்று-அல்லார்
அவம்-செய்வார், ஆசையுள்-பட்டு.

267 சுடச்-சுடரும், பொன்போல் ஒளிவிடும்; துன்பம்
சுடச்சுட, நோற்கிற்-பவர்க்கு.

268 தன்-உயிர், தான் அறப்-பெற்றானை; ஏனைய
மன்-உயிர் எல்லாம் தொழும்.

269 கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.

270 இலர், பலர்-ஆகிய-காரணம்; நோற்பார்
சிலர்; பலர் நோலாதவர்.

261. தான் பெற்ற துன்பத்தைப் பொறுத்தலும் மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகியவைகளே தவத்திற்கு வடிவமாகும்.

262. தவக்கோலமும் தவஒழுக்கம் உடையவர்க்கே பொருத்தமாகும்; அக்கோலத்தைத் தவஒழுக்கம் இல்லாதவர் மேற்கொள்வது வீண்முயற்சியாகும்.

263. துறந்தவர்க்கு உணவு முதலியவை கொடுத்து உதவ வேண்டும் என விரும்பி மற்றவர்கள் (இல்லறத்தினர்) தவம் செய்வதை மறந்தார்களோ?

264. தீமை செய்யும் பகைவரை அடக்குதலும், நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதலும் நினைத்த அளவில் தவத்தின் வலிமையால் உண்டாகும்.

265. விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியுமாகையால் செய்யத்தக்க தவம் இந்நிலையிலும் (இல்லற வாழ்க்கையிலும்) முயன்று செய்யப்படும்.

266. தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமைகளைச் செய்கின்றவர் ஆவர்; அவர் அல்லாத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண்முயற்சி செய்கின்றவரே.

267. புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப் போல், தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகும்.

268. தவவலிமையால் தன்னுடைய உயிர் தான் என்னும் பற்று நீங்கப்பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.

269. தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லையாகையால்) யமனை வெல்லுதலும் கைகூடும்.

270. ஆற்றல் இல்லாதவர் பலராக உலகில் இருப்பதற்குக் காரணம், தவம் செய்கின்றவர் சிலராகவும் செய்யாதவர் பலராகவும் இருப்பதே ஆகும்.

# 28. கூடா ஒழுக்கம்

271 வஞ்ச-மனத்தான் படிற்று, ஒழுக்கம்; பூதங்கள்-
ஐந்தும், அகத்தே நகும்.

272 வான்-உயர் தோற்றம் எவன்-செய்யும்? தன்-நெஞ்சம்
தான்-அறி குற்றப்-படின்?

273 வலி-இல் நிலைமையான், வல்-உருவம் பெற்றம்;
புலியின் தோல்-போர்த்து மேய்ந்தற்று.

274 தவம்-மறைந்து, அல்லவை செய்தல்; புதல்-மறைந்து
வேட்டுவன், புள் சிமிழ்த்தற்று.

275 ‘பற்று அற்றேம்’ என்பார் படிற்று-ஒழுக்கம்; ‘எற்று! எற்று!’
என்று,
ஏதம் பலவும் தரும்.

276 நெஞ்சின் துறவார், துறந்தார்-போல் வஞ்சித்து,
வாழ்வாரின் வன்கணார் இல்.

277 புறம்-குன்றி கண்டனையரேனும், அகம்-குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

278 மனத்தது மாசு-ஆக, மாண்டார் நீர்-ஆடி,
மறைந்து-ஒழுகும் மாந்தர் பலர்.

279 கணை-கொடிது; யாழ்-கோடு செவ்விது; ஆங்கு-அன்ன
வினைபடு பாலால் கொளல்.

280 மழித்தலும், நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து-விடின்.

271. வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்.

272. தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப்போல் உயர்ந்துள்ள தவக்கோலம், ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்?

273. மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது.

274. தவக்கோலத்தில் மறைந்துகொண்டு தவம் அல்லாத தீய செயல்களைச் செய்தல், புதரில் மறைந்து வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது.

275. 'பற்றுக்களைத் துறந்தோம்' என்று சொல்கின்றவரின் பொய்யொழுக்கம், என்ன செய்தோம் என்ன செய்தோம்' என்று வருந்தும்படியான துன்பம் பலவும் தரும்.

276. மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவரைப் போல் வஞ்சனை செய்து வாழ்கின்றவர் போல் இரக்கமற்றவர் வேறு எவரும் இல்லை.

277. புறத்தில் குன்றிமணிபோல் செம்மையானவராய்க் காணப்பட்டாராயினும், அகத்தில் குன்றிமணியின் மூக்குப்போல் கருத்திருப்பவர் உலகில் உண்டு.

278. மனத்தில் மாசு இருக்கத் தவத்தால் மாண்பு பெற்றவரைப் போல நீரில் மூழ்கி மறைந்து நடக்கும் வஞ்சனை உடைய மாந்தர் உலகில் பலர் உள்ளனர்.

279. நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது; மக்களின் பண்புகளையும் செயல் வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

280. உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை அடித்தலும் சடைவளர்த்தலுமாகிய புறக் கோலங்களும் வேண்டா.

# 29. கள்ளாமை

281 எள்ளாமை வேண்டுவான் என்பான்; எனைத்து-ஒன்றும்
கள்ளாமை காக்க, தன்-நெஞ்சு!

282 உள்ளத்தால் உள்ளலும் தீதே; ‘பிறன்-பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்’ எனல்!

283 களவினால் ஆகிய ஆக்கம்; அளவு-இறந்து,
ஆவது போல, கெடும்.

284 களவின்கண், கன்றிய காதல்; விளைவின்கண்,
வீயா விழுமம் தரும்.

285 அருள்-கருதி அன்புடையர் ஆதல்; பொருள்-கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்-கண் இல்.

286 அளவின்கண் நின்று ஒழுகல்-ஆற்றார்; களவின்கண்,
கன்றிய காதலவர்.

287 களவு-என்னும், கார்-அறிவு ஆண்மை; அளவு-என்னும்,
ஆற்றல் புரிந்தார்-கண் இல்.

288 அளவு-அறிந்தார் நெஞ்சத்து, அறம்-போல நிற்கும்;
களவு-அறிந்தார் நெஞ்சில், கரவு.

289 அளவு-அல்ல செய்து, ஆங்கே வீவர்; களவு-அல்ல
மற்றைய தேற்றாதவர்.

290 கள்வார்க்குத் தள்ளும், உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது, புத்தேள் உலகு.

281. பிறரால் இகழப்படாமல் வாழ விரும்புகின்றவன், எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்கவேண்டும்.

282. குற்றமானதை உள்ளத்தால் எண்ணுவதும் குற்றமே; அதனால் பீ றன் பொருளை அவன் அறியாத வகையால், 'வஞ்சித்துக் கொள்வோம்' என்று எண்ணாதிருக்க வேண்டும்.

283. களவு செய்து பொருள் கொள்வதால் உண்டாகிய ஆக்கம் பெருகுவதுபோல தோன்றி, இயல்பாக இருக்க வேண்டிய அளவையும் கடந்து கெட்டுவிடும்.

284. களவுசெய்து பிறர்பொருள் கொள்ளுதலின் ஒருவனுக்கு உள்ள மிகுந்த விருப்பம், பயன் விளையும்போது தொலையாத துன்பத்தைத் தரும்.

285. அருளைப் பெரிதாகக் கருதி அன்பு உடையவராய் நடத்தல், பிறருடைய பொருளைக் கவர எண்ணி அவர் சோர்ந்திருக்கும் நிலையைப் பார்ப்பவரிடத்தில் இல்லை.

286. களவு செய்து பிறர்பொருள் கொள்ளுதலின் மிக்க விருப்பம் உடையவர், அளவு (சிக்கனம்) போற்றி வாழும் நெறியில் நின்று ஒழுக மாட்டார்.

287. களவு என்பதற்குக் காரணமான மயங்கிய அறிவு உடையவராயிருத்தல், அளவு அறிந்து வாழ்தலாகிய ஆற்றலை விரும்பினவரிடத்தில் இல்லை.

288. அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் நிற்கும் அறம்போல், களவுசெய்து பழகி அறிந்தவரின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.

289. களவு செய்தல் தவிர மற்ற நல்லவழிகளை நம்பித் தெளியாதவர், அளவு அல்லாத செயல்களைச் செய்து அப்போதே கெட்டழிவர்.

290. களவு செய்வார்க்கு உடலில் உயிர்வாழும் வாழ்வும் தவறிப்போகும். களவு செய்யாமல் வாழ்வோர்க்குத் தேவருலகம் வாய்க்கத் தவறாது.

# 30. வாய்மை

291 ‘வாய்மை எனப்படுவது யாது?’ எனின்; யாது-ஒன்றும்,
தீமை-இலாத சொலல்.

292 பொய்ம்மையும் வாய்மை இடத்த; புரை-தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

293 தன்-நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த-பின்,
தன்-நெஞ்சே தன்னைச் சுடும்.

294 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்; உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம், உளன்.

295 மனத்தொடு, வாய்மை மொழியின்; தவத்தொடு,
தானம் செய்வாரின், தலை.

296 பொய்யாமை, அன்ன புகழ்-இல்லை; எய்யாமை,
எல்லா-அறமும் தரும்.

297 பொய்யாமை, பொய்யாமை ஆற்றின்; அறம்-பிற
செய்யாமை, செய்யாமை நன்று.

298 புறம்-தூய்மை, நீரால் அமையும்; அகம்-தூய்மை,
வாய்மையால் காணப்படும்.

299 எல்லா-விளக்கும், விளக்கு-அல்ல; சான்றோர்க்குப்
பொய்யா-விளக்கே, விளக்கு.

300 யாம்-மெய்யாக் கண்டவற்றுள் இல்லை; எனைத்து-ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற.

291. வாய்மை என்று கூறப்படுவது எது என்றால் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

292. குற்றம் தீர்ந்த நன்மையை விளைக்குமானால் பொய்யான சொற்களும் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம்.

293. ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால் அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

294. ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்.

295. ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மை பேசுவானானால், அவன் தவத்தோடு தானமும் ஒருங்கே செய்வாரைவிடச் சிறந்தவன்.

296. ஒருவனுக்குப் பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்றும் இல்லை; அஃது அவன் அறியாமலே அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும்.

297. பொய்யாமை ஆகிய அறத்தை உண்மையாகவே போற்றி வாழ முடிந்தால் மற்ற அறங்களைச் செய்தலும் நல்லது ஆகும்.

298. புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும்; அதுபோல அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

299. (புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல; சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

300. யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள் வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத் தக்கவை வேறு இல்லை.

# 31. வெகுளாமை

301 செல்-இடத்துக் காப்பான் சினம்-காப்பான்; அல்-இடத்து,
காக்கின்-என்? காவாக்கால்-என்?

302 செல்லா இடத்துச் சினம், தீது; செல்-இடத்தும்,
இல், அதனின் தீய பிற.

303 மறத்தல், வெகுளியை யார்மாட்டும்; தீய-
பிறத்தல், அதனான் வரும்.

304 நகையும், உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ, பிற?

305 தன்னைத்-தான் காக்கின், சினம்-காக்க! காவாக்கால்,
தன்னையே கொல்லும், சினம்.

306 சினம்-என்னும் சேர்ந்தாரைக்-கொல்லி; இனம்-என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

307 சினத்தைப் பொருள்-என்று கொண்டவன் கேடு;
நிலத்து-அறைந்தான் கை-பிழையாதற்று.

308 இணர்-எரி தோய்வன்ன இன்னா-செயினும்;
புணரின் வெகுளாமை நன்று.

309 உள்ளிய(து) எல்லாம் உடன்-எய்தும்; உள்ளத்தால்
உள்ளான், வெகுளி எனின்.

310 இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

301. பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன்; பலிக்காத இடத்தில் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

302. பலிக்காத இடத்தில் (தன்னைவிட வறியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு; பலிக்கும் இடத்திலும் (மெலியவரிடத்திலும்) சினத்தைவிடத் தீயவை வேறில்லை.

303. யாரிடத்திலும் சினங் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்; தீமையான விளைவுகள் அந்தச் சினத்தாலேயே ஏற்படும்.

304. முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?

305. ஒருவன் தன்னைத்தான் காத்துக்கொள்வதானால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.

306. சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு, ஒருவனுக்கு இனம் என்னும் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

307. (தன் வல்லமை புலப்படுத்தச்) சினத்தைப் பொருளென்று கொண்டவன் அழிதல், நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாததுபோல் ஆகும்.

308. பல சுடர்களை உடைய பெருநெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்தபோதிலும், கூடுமானால் அவன்மேல் சினங் கொள்ளாதிருத்தல் நல்லது.

309. ஒருவன் தன் மனத்தால் சினத்தை எண்ணாதிருப்பானானால், நினைத்த நன்மைகளை எல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.

310. சினத்தில் அளவுகடந்து சென்றவர் இறந்தவரைப் போன்றவர்; சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவார்.

# 32. இன்னா செய்யாமை

311 சிறப்பு-ஈனும் செல்வம் பெறினும்; பிறர்க்கு இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

312 கறுத்து இன்னா-செய்த அக்கண்ணும்; மறுத்து இன்னா-
செய்யாமை, மாசு-அற்றார் கோள்.

313 செய்யாமல், செற்றார்க்கும் இன்னாத செய்த-பின்;
உய்யா விழுமம் தரும்.

314 இன்னா செய்தாரை ஒறுத்தல்; அவர்-நாண
நல்-நயம் செய்து விடல்.

315 அறிவினான் ஆகுவது உண்டோ; பிறிதின்-நோய்
தம்-நோய்-போல், போற்றாக்கடை?

316 இன்னா எனத்-தான் உணர்ந்தவை; துன்னாமை
வேண்டும், பிறன்கண் செயல்.

317 எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும்; மனத்தான்-ஆம்
மாணா-செய்யாமை தலை.

318 தன்-உயிர்க்கு, இன்னாமை தான்-அறிவான்; என்கொலோ
மன்-உயிர்க்கு, இன்னா செயல்?

319 பிறர்க்கு-இன்னா, முற்பகல் செய்யின்; தமக்கு-இன்னா,
பிற்பகல் தாமே-வரும்.

320 நோய்-எல்லாம், நோய்-செய்தார் மேலவாம்; நோய்-செய்யார்,
நோய்-இன்மை வேண்டுபவர்.

311. சிறப்பைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

312. ஒருவன் கறுவுகொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்குத் திரும்பத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

313. தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானவற்றைச் செய்தால், செய்த பிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும்.

314. இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும் படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்துவிடுதலாகும்.

315. மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ?

316. ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

317. எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனத்தால் எண்ணி உண்டாகின்ற துன்பச் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்தது.

318. தன் உயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தாலோ?

319. முற்பகலில் மற்றவர்க்குத் துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாகவே வந்து சேரும்.

320. துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன. ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர், பிறர்க்குத் துன்பம் செய்யார்.

# 33. கொல்லாமை

321 ‘அற-வினை யாது?’ எனின், கொல்லாமை; கோறல்,
பிற-வினை எல்லாம் தரும்.

322 பகுத்து-உண்டு, பல்-உயிர் ஓம்புதல்; நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

323 ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று, அதன்-
பின்சாரப் பொய்யாமை நன்று.

324 ‘நல்லாறு எனப்படுவது யாது?’ எனின்; யாது-ஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

325 நிலை-அஞ்சி, நீத்தாருள் எல்லாம்; கொலை-அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

326 கொல்லாமை, மேற்கொண்டு ஒழுகுவான்; வாழ்நாள்மேல்
செல்லாது, உயிர்-உண்ணும் கூற்று.

327 தன்-உயிர் நீப்பினும், செய்யற்க; தான், பிறிது
இன் உயிர்-நீக்கும் வினை.

328 நன்று-ஆகும் ஆக்கம் பெரிது-எனினும்; சான்றோர்க்குக்
கொன்று-ஆகும் ஆக்கம், கடை.

329 கொலை-வினையர் ஆகிய மாக்கள் புலை-வினையர்,
புன்மை தெரிவார் அகத்து.

330 ‘உயிர்-உடம்பின் நீக்கியார்’ என்ப; ‘செயிர்-உடம்பின்
செல்லாத் தீ வாழ்க்கையவர்’.

321. அறமாகிய செயல் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமையாகும்; கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.

322. கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

323. இணையில்லாத ஓர் அறமாகக் கொல்லாமை நல்லது; அதற்கு அடுத்த நிலையில் வைத்துக் கூறத்தக்கதாகப் பொய்யாமை நல்லது.

324. நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

325. வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலை செய்வதற்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.

326. கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின்மேல், உயிரைக் கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

327. தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிப் போவதாக நேர்ந்தாலும், அதைத் தடுப்பதற்காகத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது.

328. கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.

329. கொலைத்தொழிலினராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில் புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.

330. நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளிலிருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

# 34. நிலையாமை

331 நில்லாதவற்றை நிலையின என்று-உணரும்;
புல்லறிவு-ஆண்மை, கடை.

332 கூத்தாட்டு அவைக்-குழாத்து-அற்றே, பெருஞ்-செல்வம்;
போக்கும், அது விளிந்தற்று.

333 அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது-பெற்றால்,
அற்குப ஆங்கே செயல்.

334 நாள்-என, ஒன்று-போல்-காட்டி; உயிர், ஈரும்
வாள்-அது; உணர்வார்ப் பெறின்.

335 நாச்-செற்று, விக்குள் மேல்-வாரா-முன்; நல்-வினை
மேற்சென்று செய்யப்படும்.

336 ‘நெருநல் உளன், ஒருவன்; இன்று-இல்லை!’ என்னும்
பெருமை-உடைத்து, இவ்-உலகு.

337 ஒரு-பொழுதும் வாழ்வது அறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.

338 குடம்பை தனித்து-ஒழியப் புள் பறந்தற்றே;
உடம்பொடு உயிரிடை நட்பு.

339 உறங்குவது போலும், சாக்காடு; உறங்கி-
விழிப்பது போலும், பிறப்பு.

340 புக்கில் அமைந்தின்று கொல்லோ; உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு!

331. நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.

332. பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது; அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

333. செல்வம் நிலைக்காத இயல்பை உடையது; அத்தகைய செல்வத்தைப் பெற்றால், பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.

334. வாழ்க்கையை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால், நாள் என்பது ஒரு கால அளவுபோல் காட்டி, உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது.

335. நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்குமுன்) நல்ல அறச்செயல் விரைந்து செய்யத்தக்கதாகும்.

336. நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

337. அறிவில்லாதவர் ஒருவேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை; ஆனால் வீணில் எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல; மிகப் பல எண்ணங்கள்.

338. உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

339. இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

340. (நோய்களுக்கு இடமாகிய) உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமையவில்லையோ?

# 35. துறவு

341 யாதனின், யாதனின்-நீங்கியான்; நோதல்
அதனின், அதனின் இலன்.

342 வேண்டின், உண்டாகத் துறக்க; துறந்தபின்,
ஈண்டு இயற்பால பல.

343 அடல்-வேண்டும், ஐந்தன் புலத்தை; விடல்-வேண்டும்,
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

344 இயல்பு-ஆகும், நோன்பிற்கு-ஒன்று இன்மை; உடைமை
மயல்-ஆகும், மற்றும் பெயர்த்து.

345 மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பு-அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

346 ‘யான்’, ‘எனது’, என்னும் செருக்கு-அறுப்பான்; வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

347 பற்றி-விடாஅ, இடும்பைகள்; பற்றினை,
பற்றி-விடாஅதவர்க்கு.

348 தலைப்பட்டார், தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார், மற்றையவர்.

349 பற்று அற்ற-கண்ணே பிறப்பு-அறுக்கும்; மற்றும்
நிலையாமை காணப்படும்.

350 பற்றுக, பற்று-அற்றான் பற்றினை! அப்-பற்றைப்
பற்றுக, பற்று-விடற்கு!

341. ஒருவன் எந்தப் பொருளிலிருந்து, பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

342. துன்பமில்லாத நிலைமை வேண்டுமானால், எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயே துறக்க வேண்டும். துறந்தபின் இங்குப் பெறக்கூடும் இன்பங்கள் பல.

343. ஐம்பொறிகளுக்கு உரிய ஐந்து புலன்களின் ஆசையையும் வெல்லுதல் வேண்டும். அவற்றிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஒரு சேர விடல் வேண்டும்.

344. தவம் செய்வதற்கு ஒரு பற்றும் இல்லாதிருத்தல் இயல்பாகும்; பற்று உடையவராக இருத்தல் மீண்டும் மயங்குதற்கு வழியாகும்.

345. பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள்; ஆகையால் அதற்குமேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ?

346. உடம்பை யான் எனக் கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக் கருதலுமாகிய மயக்கத்தைப் போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை அடைவான்.

347. யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் பற்றிக் கொண்டு விடாதவரை, துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்கின்றன.

348. முற்றத் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவர். அவ்வாறு துறக்காத மற்றவர், அறியாமையாகிய வலையில் அகப்பட்டவர் ஆவர்.

349. இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும்; இல்லையானால் (பிறவித்துன்பம் மாறி மாறி வந்து) நிலையாமை காணப்படும்.

350. பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும்; உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

# 36. மெய் உணர்தல்

351 பொருள்-அல்லவற்றைப் பொருள்-என்று உணரும்;
மருளான்-ஆம், மாணாப் பிறப்பு.

352 இருள்-நீங்கி இன்பம் பயக்கும்; மருள்-நீங்கி
மாசு-அறு காட்சியவர்க்கு.

353 ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின்,
வானம் நணியது-உடைத்து.

354 ஐ-உணர்வு எய்தியக் கண்ணும் பயம்-இன்றே;
மெய்-உணர்வு இல்லாதவர்க்கு.

355 எப்-பொருள், எத்-தன்மைத்து ஆயினும்; அப்-பொருள்,
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

356 கற்று, ஈண்டு மெய்ப்பொருள் கண்டார்; தலைப்படுவர்,
மற்று ஈண்டு வாரா-நெறி.

357 ஓர்த்து, உள்ளம்-உள்ளது உணரின்; ஒரு-தலையாப்
பேர்த்து, உள்ள-வேண்டா பிறப்பு.

358 பிறப்பு-என்னும் பேதைமை நீங்க; சிறப்பு-என்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

359 சார்பு-உணர்ந்து, சார்பு கெட ஒழுகின்; மற்று-அழித்துச்
சார்தரா, சார்தரும் நோய்.

360 காமம், வெகுளி, மயக்கம்; இவை-மூன்றன்
நாமம் கெட, கெடும் நோய்.

351. மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப்பிறவி உண்டாகும்.

352. மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும்.

353. ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகைவிட. அடையவேண்டிய மேலுலகம் அண்மையில் உள்ளதாகும்.

354. மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐந்து புலன்களின் வேறுபாட்டால் வளர்ந்த ஐந்துவகை உணர்வும் முற்றப்பெற்ற போதிலும் பயன் இல்லை.

355. எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் (அத் தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல்) அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.

356. கற்க வேண்டியவற்றைக் கற்று, இங்கு மெய்ப் பொருளை உணர்ந்தவர்; மீண்டும் இப் பிறப்பிற்கு வாராத வழியை அடைவர்.

357. ஒருவனுடைய உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாக உணர்ந்தால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உள்ளதென எண்ண வேண்டா.

358. பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு, முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

359. எல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சார்வதற்கு உரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையா.

360. விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் கெடுமாறு ஒழுகினால் துன்பங்கள் வாராமற் கெடும்.

# 37. அவா அறுத்தல்

361 ‘அவா’ என்ப‘; எல்லா-உயிர்க்கும், எஞ்-ஞான்றும்
தவாஅப் பிறப்பு-ஈனும், வித்து’.

362 வேண்டுங்கால், வேண்டும் பிறவாமை; மற்று-அது
வேண்டாமை வேண்ட, வரும்.

363 வேண்டாமை அன்ன விழுச்-செல்வம், ஈண்டு-இல்லை;
யாண்டும் அஃது-ஒப்பது இல்.

364 தூ-உய்மை என்பது அவா-இன்மை; மற்று-அது
வா-அய்மை வேண்ட, வரும்.

365 அற்றவர் என்பார் அவா-அற்றார்; மற்றையார்
அற்று-ஆக அற்றது இலர்.

366 அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

367 அவாவினை, ஆற்ற அறுப்பின்; தவாவினை,
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

368 அவா-இல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது-உண்டேல்,
தவாஅது மேன்மேல் வரும்.

369 இன்பம் இடையறாது, ஈண்டும்; அவா-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

370 ஆரா இயற்கை, அவா-நீப்பின்; அந்-நிலையே
பேரா இயற்கை, தரும்.

361. எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்று கூறுவர்.

362. ஒருவன் ஒன்றை விரும்புவதானால், பிறவா நிலைமையை விரும்பவேண்டும்; அது, அவா அற்ற நிலையை விரும்பினால் உண்டாகும்.

363. அவா அற்ற நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை; வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்று இல்லை.

364. தூயநிலை என்று கூறப்படுவது அவா இல்லாதிருத்தலே யாகும்; அவா அற்ற அத்தன்மை, மெய்ப் பொருளை விரும்புவதால் உண்டாகும்.

365. பற்றற்றவர் என்று கூறப்படுவோர் அவா அற்றவரே; அவா அறாத மற்றவர், அவ்வளவாகப் பற்று அற்றவர் அல்லர்.

366. ஒருவன் அவாவிற்கு அஞ்சி வாழ்வதே அறம்; ஏன் எனில் ஒருவனைச் சோர்வு கண்டு கெடுத்து வஞ்சிப்பது அவாவே.

367. ஒருவன் ஆசையை முழுதும் ஒழித்தால், அவன் கெடாமல் வாழ்வதற்கு உரிய நல்ல செயல் அவன் விரும்புமாறு வாய்க்கும்.

368. அவா இல்லாதவர்க்குத் துன்பம் இல்லையாகும்; அவா இருந்தால் எல்லாத் துன்பங்களும் மேலும்மேலும் ஒழியாமல் வரும்.

369. அவா என்றுசொல்லப் படுகின்ற துன்பங்களுள் பொல்லாத துன்பம் கெடுமானால் இவ்வுலகிலும் இன்பம் இடையறாமல் வாய்க்கும்.

370. ஒருபோதும் நிரம்பாத தன்மை உடைய அவாவை ஒழித்தால் ஒழித்த அந்நிலையே எப்போதும் மாறாதிருக்கும் இன்ப வாழ்வைத் தரும்.

# 38. ஊழ்

371 ஆகு-ஊழால் தோன்றும், அசைவு-இன்மை; கைப்பொருள்
போகு-ஊழால் தோன்றும், மடி.

372 பேதைப் படுக்கும், இழவு-ஊழ்; அறிவு-அகற்றும்,
ஆகல்-ஊழ் உற்றக்-கடை.

373 நுண்ணிய நூல்-பல கற்பினும், மற்றும்-தன்
உண்மை அறிவே மிகும்.

374 இரு வேறு, உலகத்து இயற்கை; திரு வேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.

375 நல்லவை எல்லா-அம் தீய-ஆம்; தீயவும்
நல்ல-ஆம்; செல்வம் செயற்கு.

376 பரியினும் ஆகாவாம், பால்-அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா, தம.

377 வகுத்தான், வகுத்த வகை-அல்லால்; கோடி-
தொகுத்தார்க்கும், துய்த்தல் அரிது.

378 துறப்பார்மன், துப்புரவு இல்லார்; உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

379 நன்று-ஆம், கால் நல்லவாக் காண்பவர்; அன்று-ஆம், கால்
அல்லற்படுவது எவன்?

380 ஊழின், பெருவலி யா-உள? மற்று-ஒன்று
சூழினும், தான் முந்துறும்.

371. கைப்பொருள் ஆவதற்குக் காரணமான ஊழால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும்; கைப்பொருள் போவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

372. பொருள் இழத்தற்குக் காரணமான ஊழ், பேதை யாக்கும்; பொருள் ஆவதற்குக் காரணமான ஊழ், அறிவைப் பெருக்கும்.

373. ஒருவன் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றாலும், ஊழிற்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

374. உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வம் உடையவராதலும் வேறு, அறிவு உடையவராதலும் வேறு.

375. செல்வத்தை ஈட்டும் முயற்சிக்கு, ஊழ்வகையால் நல்லவை எல்லாம் தீயவை ஆதலும் உண்டு; தீயவை நல்லவை ஆதலும் உண்டு.

376. ஊழால் தமக்கு உரியவை அல்லாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாமல் போகும்; தமக்கு உரியவை கொண்டுபோய்ச் சொரிந்தாலும் போகா.

377. ஊழ் ஏற்படுத்திய வகையால் அல்லாமல் முயன்று கோடிக்கணக்கான பொருள்களைச் சேர்த்தவர்க்கும் அவற்றை நுகர முடியாது.

378. வரவேண்டிய துன்பங்கள் வந்து வருத்தாமல் நீங்குமானால், நுகரும் பொருள் இல்லாத வறியவர் துறவறம் மேற்கொள்வர்.

379. நல்வினை விளையும்போது நல்லவை எனக் கருதி மகிழ்கின்றவர், தீவினை விளையும்போது துன்பப்பட்டுக் கலங்குவது ஏனோ?

380. ஊழைவிட மிக்க வலிமையுள்ளவை வேறு எவை உள்ளன? ஊழை விலக்கும் பொருட்டு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கும் தானே முன் வந்து நிற்கும்.

# 39. இறைமாட்சி

381 படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்; ஆறும்-
உடையான், அரசருள் ஏறு.

382 அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்; இந்-நான்கும்
எஞ்சாமை, வேந்தற்கு இயல்பு.

383 தூங்காமை, கல்வி, துணிவுடைமை; இம்-மூன்றும்
நீங்கா, நிலன்-ஆள்பவற்கு.

384 அறன்-இழுக்காது, அல்லவை நீக்கி, மறன்-இழுக்கா
மானம் உடையது; அரசு.

385 இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த-
வகுத்தலும்; வல்லது அரசு.

386 காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்;
மீக்கூறும், மன்னன் நிலம்.

387 இன்சொலால் ஈத்து, அளிக்க-வல்லாற்குத் தன்சொலால்
தான் கண்டனைத்து, இவ்-உலகு.

388 முறை-செய்து காப்பாற்றும் மன்னவன்; ‘மக்கட்கு
இறை’ என்று வைக்கப்படும்.

389 செவி-கைப்பச், சொல்-பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும், உலகு.

390 கொடை, அளி, செங்கோல், குடி-ஓம்பல்; நான்கும்
உடையான்-ஆம், வேந்தர்க்கு ஒளி.

381. படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவன்.

382. அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே அரசனுக்கு இயல்பாகும்.

383. காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.

384. ஆட்சி முறைக்கு உரிய அறத்தில் தவறாமல், அறமல்லாதவற்றை நீக்கி, வீரத்தில் குறைபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசன் ஆவான்.

385. பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும் வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.

386. காண்பதற்கு எளியவனாய், கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால், அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும்.

387. இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை உதவிக் காக்கவல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.

388. நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

389. குறைகூறுவோரின் சொற்களைச் செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்பு உடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

390. கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

# 40. கல்வி

391 கற்க, கசடு-அற, கற்பவை; கற்ற-பின்,
நிற்க, அதற்குத் தக!

392 ‘எண்’ என்ப, ஏனை ‘எழுத்து’ என்ப; இவ்-இரண்டும்
‘கண்’ என்ப, வாழும் உயிர்க்கு.

393 கண்-உடையர், என்பவர் கற்றோர்; முகத்து-இரண்டு
புண்-உடையர், கல்லாதவர்.

394 உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்
அனைத்தே; புலவர் தொழில்.

395 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;
கடையரே, கல்லாதவர்.

396 தொட்டனைத்து ஊறும், மணற்-கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும், அறிவு.

397 யாதானும் நாடு-ஆமால்; ஊர்-ஆமால்; என், ஒருவன்
சா(கு)ம்-துணையும் கல்லாதவாறு?

398 ஒருமைக்கண், தான் கற்ற-கல்வி; ஒருவற்கு
எழுமையும், ஏமாப்பு உடைத்து.

399 தாம்-இன்புறுவது, உலகு-இன்புறக்-கண்டு;
காமுறுவர், கற்று-அறிந்தார்.

400 கேடு-இல் விழுச்செல்வம், கல்வி-ஒருவற்கு;
மாடு-அல்ல, மற்றையவை.

391. கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

392. எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

393. கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றவர் கற்றவரே; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர்.

394. மகிழும்படியாகக் கூடிப் பழகி. (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

395. செல்வர்முன் வறியவர் நிற்பதுபோல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் இழிந்தவர்.

396. மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

397. கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும்போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?

398. ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு எழுபிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும்.

399. தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர்.

400. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய ) செல்வம் அல்ல.

# 41. கல்லாமை

401 அரங்கு-இன்றி வட்டு ஆடியற்றே; நிரம்பிய
நூல்-இன்றிக் கோட்டி கொளல்.

402 கல்லாதான் சொல், காமுறுதல்; முலை-இரண்டும்
இல்லாதாள் பெண், காமுற்றற்று.

403 கல்லாதவரும் நனி நல்லர்; கற்றார்-முன்
சொல்லாது இருக்கப்பெறின்.

404 கல்லாதான் ஒட்பம் கழிய நன்று-ஆயினும்;
கொள்ளார், அறிவு-உடையார்.

405 கல்லா ஒருவன் தகைமை; தலைப்பெய்து
சொல்லாட, சோர்வு-படும்.

406 உளர்-என்னும் மாத்திரையர் அல்லால்; பயவாக்
களர்-அனையர் கல்லாதவர்.

407 நுண்-மாண், நுழை-புலம் இல்லான், எழில்-நலம்;
மண்-மாண், புனை பாவை-அற்று.

408 நல்லார்கண், பட்ட வறுமையின்; இன்னாதே,
கல்லார்கண், பட்ட திரு.

409 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்து-இலர் பாடு.

410 விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு-நூல்
கற்றாரொடு ஏனையவர்.

401. அறிவு நிரம்புவதற்குக் காரணமான நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசுதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டி ஆடினாற் போன்றது.

402. (கற்றவரின் அவையில்) கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல், முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

403. கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப்பெற்றால், கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவர்.

404. கல்லாதவனுடைய அறிவுடைமை ஒருகால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார்.

405. கல்லாத ஒருவன் தன்னைத் தான் மதித்துக் கொள்ளும் மதிப்பு (கற்றவரிடம்) கூடிப் பேசும்போது அப்பேச்சினால் கெடும்.

406. கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப் படும் அளவினரே அல்லாமல், ஒன்றும் விளையாத களர்நிலத்திற்கு ஒப்பாவர்.

407. நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு, மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

408. கல்லாதவரிடம் சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிகத் துன்பம் செய்வதாகும்.

409. கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

410. அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

# 42. கேள்வி

411 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்-செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

412 செவிக்கு உணவு-இல்லாத போழ்து, சிறிது,
வயிற்றுக்கும் ஈயப்படும்.

413 செவி-உணவின், கேள்வி-உடையார்; அவி-உணவின்
ஆன்றாரொடு ஒப்பர், நிலத்து.

414 கற்றிலன் ஆயினும், கேட்க; அஃது-ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்று-ஆம் துணை.

415 இழுக்கல் உடை-உழி ஊற்றுக்கோல் அற்றே;
ஒழுக்கம்-உடையார் வாய்ச்-சொல்.

416 எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

417 பிழைத்து-உணர்ந்தும், பேதைமை சொல்லார்; இழைத்து-உணர்ந்து,
ஈண்டிய கேள்வியவர்.

418 கேட்பினும், கேளாத் தகையவே; கேள்வியால்,
தோட்கப்-படாத-செவி.

419 நுணங்கிய கேள்வியர்-அல்லார்; வணங்கிய
வாயினர், ஆதல் அரிது.

420 செவியின் சுவை-உணரா, வாய்-உணர்வின் மாக்கள்;
அவியினும் வாழினும் என்.

411. செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும்; அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

412. செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாதபோது (அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

413. செவியுணவாகிய கேள்வி உடையவர் நிலத்தில் வாழ்கின்றவரே ஆயினும், அவி உணவைக்கொள்ளும் தேவரோடு ஒப்பாவர்.

414. நூல்களைக் கற்கவில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும்; அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல்போல் துணையாகும்.

415. ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச்சொற்கள், வழுக்கல் உடைய சேற்றுநிலத்தில் ஊன்றுகோல்போல் வாழ்க்கையில் உதவும்.

416. எவ்வளவு சிறிதேயாயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும்; கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

417. நுட்பமாக உணர்ந்து நிறைந்த கேள்வியறிவை உடையவர். (ஒருகால் பொருள்களைத்) தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார்.

418. கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள், (இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தலும், கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே.

419. நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர், வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.

420. செவியால் கேள்விச்சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன? உயிரோடு வாழ்ந்தாலும் என்ன?

# 43. அறிவுடைமை

421 அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்,
உள்-அழிக்கல் ஆகா அரண்.

422 சென்ற இடத்தால் செலவிடா, தீது-ஒரீஇ;
நன்றின்-பால் உய்ப்பது-அறிவு.

423 எப்பொருள், யார்-யார்-வாய்க் கேட்பினும்; அப்பொருள்
மெய்ப்பொருள், காண்பது; அறிவு.

424 எண்-பொருளவாகச் செலச்சொல்லி, தான்-பிறர்வாய்
நுண்-பொருள் காண்பது; அறிவு.

425 உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்,
கூம்பலும் இல்லது; அறிவு.

426 எவ்வது, உறைவது உலகம்; உலகத்தொடு
அவ்வது, உறைவது; அறிவு.

427 அறிவு-உடையார் ஆவது-அறிவார்; அறிவு-இலார்
அஃது-அறி கல்லாதவர்.

428 அஞ்சுவது, அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல், அறிவார் தொழில்.

429 எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை;
அதிர வருவதோர் நோய்.

430 அறிவு-உடையார் எல்லாம் உடையார்; அறிவு-இலார்
என்-உடையரேனும் இலர்.

421. அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

422. மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

423. எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

424. தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லித், தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.

425. உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கிக்கொள்வது சிறந்த அறிவு; முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது அறிவு.

426. உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

427. அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார்; அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

428. அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடைவரின் தொழிலாகும்.

429. வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

430. அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

# 44. குற்றம் கடிதல்

431 செருக்கும், சினமும், சிறுமையும் இல்லார்;
பெருக்கம், பெருமித நீர்த்து.

432 இவறலும், மாண்பு-இறந்த மானமும், மாணா-
உவகையும் ஏதம்; இறைக்கு.

433 தினைத்-துணையாம் குற்றம் வரினும்; பனைத்-துணையாக்
கொள்வர், பழி நாணுவார்.

434 குற்றமே காக்க, பொருளாக குற்றமே;
அற்றம் தரூஉம் பகை.

435 வரும்-முன்னர்க் காவாதான், வாழ்க்கை; எரி-முன்னர்
வைத்தூறு போல, கெடும்.

436 தன்-குற்றம் நீக்கி, பிறர்-குற்றம் காண்கிற்பின்;
என்-குற்றம்-ஆகும் இறைக்கு?

437 செயற்பால செய்யாது, இவறியான் செல்வம்;
உயற்பாலது அன்றிக் கெடும்.

438 பற்று-உள்ளம், என்னும் இவறன்மை; எற்றுள்ளும்
எண்ணப்படுவது, ஒன்று அன்று.

439 வியவற்க, எஞ்ஞான்றும் தன்னை! நயவற்க,
நன்றி பயவா வினை!

440 காதல, காதல்-அறியாமை உய்க்கிற்பின்;
ஏதில, ஏதிலார் நூல்.

431. செருக்கும் சினமும் காமமும் ஆகிய இந்தக் குற்றங்கள் இல்லாதவருடைய வாழ்வில் காணும் பெருக்கம் மேம்பாடு உடையதாகும்.

432. பொருள் கொடாத தன்மையும், மாட்சியில்லாத மானமும், தகுதியற்ற மகிழ்ச்சியும் தலைவனாக இருப்பவனுக்குக் குற்றங்களாகும்.

433. பழி நாணுகின்ற பெருமக்கள் தினையளவாகிய சிறு குற்றம் நேர்ந்தாலும், அதைப் பனையளவாகக் கருதிக் (குற்றம் செய்யாமல்) காத்துக்கொள்வர்.

434. குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும். ஆகையால் குற்றம் செய்யாமல் இருப்பதே நோக்கமாகக் கொண்டு காத்துக் கொள்ளவேண்டும்.

435. குற்றம் நேர்வதற்கு முன்னமே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின்முன் நின்ற வைக்கோல்போர்போல் அழிந்துவிடும்.

436. முன்னே தன் குற்றத்தைக் கண்டு நீக்கிப் பிறகு பிறருடைய குற்றத்தை ஆராயவல்லவனானால் தலைவனுக்கு என்ன குற்றமாகும்?

437. செய்யத்தக்க நன்மைகளைச்செய்யாமல் பொருளைச் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம் உய்யுந்தன்மை இல்லாமல் அழியும்.

438. பொருளினிடத்தில் பற்றுக் கொள்ளும் உள்ளமாகிய ஈயாத்தன்மை, குற்றம் எதனோடும் சேர்த்து எண்ணத்தகாத ஒரு தனிக் குற்றமாகும்.

439. எக்காலத்திலும் தன்னை மிக உயர்வாக எண்ணி வியந்து மதிக்கக்கூடாது; நன்மை தராத செயலைத் தான் விரும்பவும் கூடாது.

440. தன் விருப்பம் பிறர்க்குத் தெரியாதபடி விருப்பமானவற்றை நுகர வல்லவனானால், பகைவர் தன்னை வஞ்சிப்பதற்காகச் செய்யும சூழ்ச்சிகள் பலிக்காமல் போகும்.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

441 அறன்-அறிந்து, மூத்த அறிவு-உடையார், கேண்மை;
திறன்-அறிந்து, தேர்ந்து, கொளல்.

442 உற்ற-நோய் நீக்கி, உறாஅமை முன்-காக்கும்;
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

443 அரியவற்றுள் எல்லாம் அரிதே; பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

444 தம்மின் பெரியார், தமரா ஒழுகுதல்;
வன்மையுள் எல்லாம், தலை.

445 சூழ்வார் கண்-ஆக ஒழுகலான்; மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

446 தக்கார் இனத்தனாய், தான்-ஒழுக வல்லானை;
செற்றார், செயக்கிடந்தது இல்.

447 இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,
கெடுக்கும் தகைமையவர்?

448 இடிப்பாரை இல்லாத, ஏமரா மன்னன்;
கெடுப்பார் இலானும், கெடும்.

449 முதல்-இலார்க்கு ஊதியம் இல்லை; மதலை-ஆம்
சார்பு-இலார்க்கு இல்லை, நிலை.

450 பல்லார் பகை-கொளலின், பத்து-அடுத்த தீமைத்தே;
நல்லார் தொடர், கைவிடல்.

441. அறம் உணர்ந்தவராய்த் தன்னைவிட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பைக், கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

442. வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும்.

443. பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.

444. தம்மை விட, ( அறிவு முதலியவற்றால் ) பெரியவர் தமக்குச் சுற்றத்தாராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

445. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையாரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.

446. தக்க பெரியாரின் கூட்டத்தில் உள்ளவனாய் நடக்கவல்ல ஒருவனுக்கு அவனுடைய பகைவர் செய்யக்கூடிய தீங்கு ஒன்றும் இல்லை.

447. கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் உடையவர் யார் இருக்கின்றனர்?

448. கடிந்து அறிவுரை கூறும் பெரியாரின் துணை இல்லாத காவலற்ற அரசன் தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

449. முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை; அது போல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை.

450. நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும்.

# 46. சிற்றினம் சேராமை

451 சிற்றினம் அஞ்சும், பெருமை; சிறுமை-தான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும்.

452 நிலத்து-இயல்பான் நீர் திரிந்து, அற்று-ஆகும்; மாந்தர்க்கு
'இனத்து' இயல்பது ஆகும்; அறிவு.

453 மனத்தான்-ஆம், மாந்தர்க்கு-உணர்ச்சி; இனத்தான்-ஆம்,
'இன்னான்' எனப்படும் சொல்.

454 மனத்து-உளது-போலக் காட்டி; ஒருவற்கு
இனத்து-உளது-ஆகும்; அறிவு.

455 மனம்-தூய்மை, செய்-வினை தூய்மை; இரண்டும்
இனம்-தூய்மை, தூவா வரும்.

456 மனம்-தூயார்க்கு எச்சம் நன்று-ஆகும்; இனம்-தூயார்க்கு
இல்லை, நன்று-ஆகா வினை.

457 மன-நலம், மன்-உயிர்க்கு ஆக்கம்; இன-நலம்,
எல்லாப் புகழும் தரும்.

458 மன-நலம், நன்கு-உடையர் ஆயினும்; சான்றோர்க்கு
இன-நலம், ஏமாப்பு உடைத்து.

459 மன-நலத்தின் ஆகும், மறுமை; மற்று-அஃதும்
இன-நலத்தின், ஏமாப்பு உடைத்து.

460 நல்-இனத்தின் ஊங்கும் துணை-இல்லை; தீ-இனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

451. பெரியோரின் இயல்பு சிற்றினத்தை அஞ்சி ஒதுக்கும்; சிறியோரின் இயல்பு அதையே சுற்றமாக எண்ணித் தழுவிக் கொள்ளும்.

452. சேர்ந்த நிலத்தின் இயல்பால் நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையுடையதாகும்; அது போல் மக்களுடைய அறிவு இனத்தின் இயல்பினை உடையதாகும்

453. மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்; இப்படிப்பட்டவன் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல் சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

454. ஒருவனுக்குச் சிறப்பறிவு மனத்தில் உள்ளது போலக்காட்டி (உண்மையாக நோக்கும் போது) அவன் சேர்ந்த இனத்தில் உள்ளதாகும்.

455. மனத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும்.

456. மனம் தூய்மையாகப் பெற்றவர்க்கு அவர்க்குப்பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும். இனம் தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.

457. மனத்தின் நன்மை உயிர்க்கு ஆக்கமாகும்; இனத்தின் நன்மை (அவ்வளவோடு நிற்காமல்) எல்லாப் புகழையும் கொடுக்கும்.

458. மனத்தின் நன்மையை உறுதியாக உடையவராயினும் சான்றோர்க்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமைவதாகும்.

459. மனத்தின் நன்மையால் மறுமை இன்பம் உண்டாகும்; அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் சிறப்புடையதாகும்.

460. நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தைவிடத் துன்பப்படுத்தும் பகையும் இல்லை.

# 47. தெரிந்து செயல் வகை

461 அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து; செயல்!

462 தெரிந்த இனத்தொடு, தேர்ந்து எண்ணிச்-செய்வார்க்கு;
அரும்பொருள், யாது-ஒன்றும் இல்.

463 ஆக்கம் கருதி, முதல்-இழக்கும் செய்வினை
ஊக்கார், அறிவு-உடையார்.

464 தெளிவு-இலதனைத் தொடங்கார்; இளிவு-என்னும்
ஏதப்பாடு அஞ்சுபவர்.

465 வகை-அறச் சூழாது, எழுதல்; பகைவரைப்
பாத்திப்-படுப்பது ஓர்-ஆறு.

466 செய்தக்க-அல்ல, செயக் கெடும்; செய்தக்க,
செய்யாமையானும் கெடும்.

467 எண்ணித் துணிக, கருமம்; துணிந்த-பின்,
எண்ணுவம் என்பது இழுக்கு.

468 ஆற்றின், வருந்தா வருத்தம்; பலர்-நின்று
போற்றினும், பொத்துப்படும்.

469 நன்று ஆற்றல்-உள்ளும், தவறு-உண்டு; அவரவர்
பண்பு-அறிந்து, ஆற்றாக்கடை.

470 எள்ளாத, எண்ணிச் செயல்-வேண்டும்; தம்மொடு
கொள்ளாத, கொள்ளாது உலகு.

461. (ஒரு செயலைத் தொடங்குமுன்) அதனால் அழிவதையும், அழிந்தபின் ஆவதையும், பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

462. ஆராய்ந்து சேர்ந்த இனத்துடன் (செயலைப்பற்றி) நன்றாகத் தேர்ந்து, தாமும் எண்ணிப் பார்த்துச் செய்கின்றவர்க்கு அரிய பொருள் ஒன்றும் இல்லை.

463. பின் விளையும் ஊதியத்தைக் கருதி இப்போது உள்ள முதலை இழந்துவிடக் காரணமான செயலை அறிவுடையவர் மேற்கொள்ளமாட்டார்.

464. இழிவு தருவதாகிய குற்றத்திற்கு அஞ்சுகின்றவர் ( இன்ன ஊதியம் பயக்கும் என்னும்) தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார்.

465. செயலின் வகைகளை எல்லாம் முற்ற எண்ணாமல் செய்யத் தொடங்குதல் பகைவரை வளரும் பாத்தியில் நிலைபெறச் செய்வதொரு வழியாகும்.

466. ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.

467. (செய்யத் தகுந்த) செயலையும் வழிகளை எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும். துணிந்தபின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

468. தக்கவழியில் செய்யப்படாத முயற்சி பலர் துணையாக நின்று (அதை முடிக்குமாறு) காத்த போதிலும் குறையாகி விடும்.

469. அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால் நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

470. தம் நிலைமையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக் கொள்ளாது. ஆகையால் உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்..

# 48. வலி அறிதல்

471 வினை-வலியும், தன்-வலியும், மாற்றான்-வலியும்,
துணை-வலியும்; தூக்கிச் செயல்.

472 ஒல்வது அறிவது அறிந்து, அதன்கண் தங்கிச்
செல்வார்க்கு; செல்லாதது இல்.

473 உடைத்-தம் வலி-அறியார்; ஊக்கத்தின் ஊக்கி,
இடைக்கண் முரிந்தார் பலர்.

474 அமைந்து ஆங்கு-ஒழுகான், அளவு-அறியான், தன்னை-
வியந்தான்; விரைந்து கெடும்.

475 பீலி-பெய் சாகாடும், அச்சு-இறும்; அப்பண்டம்,
சால மிகுத்துப் பெயின்.

476 நுனிக்-கொம்பர் ஏறினார், அஃது-இறந்து ஊக்கின்;
உயிர்க்கு இறுதி-ஆகி-விடும்.

477 ஆற்றின், அளவு-அறிந்து ஈக; அது, பொருள்
போற்றி வழங்கும் நெறி.

478 ஆகு-ஆறு, அளவு-இட்டிது ஆயினும்; கேடு-இல்லை
போகு-ஆறு, அகலாக்கடை.

479 அளவு-அறிந்து வாழாதான், வாழ்க்கை; உளபோல
இல்லாகித், தோன்றாக் கெடும்.

480 உள-வரை தூக்காத ஒப்புரவு-ஆண்மை;
வள-வரை வல்லைக் கெடும்.

471. செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனுடைய வலிமையும், இருவர்க்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

472. தனக்குப் பொருந்தும் செயலையும், அதற்காக அறிய வேண்டியதையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கின்றவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை ஒன்றும் இல்லை.

473. தம்முடைய வலிமை இவ்வளவு என்று அறியாமல் ஊக்கத்தால் முனைந்து தொடங்கி இடையில் அதை முடிக்க வகையில்லாமல் அழிந்தவர் பலர்.

474. மற்றவர்களோடு ஒத்து நடக்காமல். தன் வலிமையின் அளவையும் அறியாமல், தன்னை வியந்து மதித்துக் கொண்டிருப்பவன் விரைவில் கெடுவான்.

475. மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும், அந்தப் பண்டமும் (அளவோடு ஏற்றாமல்) அளவுகடந்து மிகுதியாக ஏற்றினால் அச்சு முறியும்.

476. ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவர், அதையும் கடந்து மேலும் ஏற முனைந்தால், அவருடைய உயிர்க்கு முடிவாக நேர்ந்துவிடும்

477. தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்கவேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

478. பொருள் வரும் வழி (வருவாய்) சிறியதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

479. பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.

480. தனக்குப் பொருள் உள்ள அளவை ஆராயாமல் மேற்கொள்ளும் ஒப்புரவினால், ஒருவனுடைய செல்வத்தின் அளவு விரைவில் கெடும்.

# 49. காலம் அறிதல்

481 பகல்-வெல்லும், கூகையைக் காக்கை; இகல்-வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும், பொழுது.

482 பருவத்தொடு ஒட்ட ஒழுகல்; திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

483 அருவினை என்ப, உளவோ? கருவியான்,
காலம்-அறிந்து செயின்.

484 ஞாலம் கருதினும், கைகூடும்; காலம்-
கருதி, இடத்தான் செயின்.

485 காலம் கருதி இருப்பர்; கலங்காது,
ஞாலம் கருதுபவர்.

486 ஊக்கம் உடையான் ஒடுக்கம்; பொருதகர்
தாக்கற்குப், பேரும் தகைத்து.

487 பொள்ளென ஆங்கே புறம்-வேரார்; காலம்-பார்த்து,
உள்-வேர்ப்பர், ஒள்ளியவர்.

488 செறுநரைக் காணின், சுமக்க; இறுவரை
காணின், கிழக்காம் தலை.

489 எய்தற்கு அரியது இயைந்தக்கால்; அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

490 கொக்கு-ஒக்க, கூம்பும் பருவத்து; மற்று-அதன்
குத்து-ஒக்க, சீர்த்த இடத்து.

481. காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும்; அதுபோல் பகையை வெல்லக் கருதும் அரசர்க்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும்

482. காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல் (நில்லாத இயல்பு உடைய) செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

483. (செய்யும் செயலை முடிப்பதற்கு வேண்டிய) கருவிகளுடன் ஏற்ற காலத்தையும் அறிந்து செய்தால், அரிய செயல்கள் என்பவை உண்டோ?

484. (செயலை முடிப்பதற்கு ஏற்ற) காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால், உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைகூடும்.

485. உலகத்தைக் கொள்ளக் கருதுகின்றவர் அதைப்பற்றி எண்ணிக் கலங்காமல் அதற்கு ஏற்ற காலத்தைக் கருதிக் கொண்டு பொறுத்திருப்பர்.

486. ஊக்கம் மிகுந்தவன் (காலத்தை எதிர்பார்த்து) அடங்கியிருத்தல், போர் செய்யும் ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்காகப் பின்னே கால்வாங்குதலைப் போன்றது.

487. அறிவுடையவர், (பகைவர் தீங்கு செய்த) அப்பொழுதே உடனே புறத்தில் சினம் கொள்ளமாட்டார்;(வெல்வதற்கு ஏற்ற) காலம் பார்த்து அகத்தில் சினம் கொள்வர்.

488. பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்ல வேண்டும்; அப் பகைவர்க்கு முடிவுகாலம் வந்தபோது அவருடைய தலைகீழே விழும்.

489. கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்யவேண்டும்.

490. பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப்போல் அமைதியா இருக்கவேண்டும்; காலம் வாய்த்தபோது அதன் குத்துப் போல் தவறாமல் செய்து முடிக்கவேண்டும்.

# 50. இடன் அறிதல்

491 தொடங்கற்க எவ்-வினையும்; எள்ளற்க; முற்றும்
இடம் கண்டபின் அல்லது!

492 முரண்-சேர்ந்த மொய்ம்பினவர்க்கும், அரண்-சேர்ந்து-ஆம்;
ஆக்கம் பலவும் தரும்.

493 ஆற்றாரும் ஆற்றி அடுப; இடன்-அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

494 எண்ணியார், எண்ணம் இழப்பர்; இடன்-அறிந்து
துன்னியார், துன்னிச் செயின்.

495 நெடும்-புனலுள், வெல்லும் முதலை; அடும், புனலின்-
நீங்கின், அதனைப் பிற.

496 கடல்-ஓடா, கால்-வல் நெடுந்தேர்; கடல்-ஓடும்
நாவாயும் ஓடா, நிலத்து.

497 அஞ்சாமை அல்லால், துணை வேண்டா; எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

498 சிறு-படையான் செல்-இடம் சேரின்; உறு-படையான்
ஊக்கம் அழிந்து விடும்.

499 சிறை-நலனும், சீரும்-இலர் எனினும்; மாந்தர்
உறை-நிலத்தொடு ஒட்டல் அரிது.

500 கால்-ஆழ் களரில், நரி-அடும்; கண்-அஞ்சா
வேல்-ஆள், முகத்த களிறு.

491. முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக் கூடாது; பகைவரை இகழவும் கூடாது.

492. மாறுபாடு பொருந்திய வலிமை உடையவர்க்கும் அரணோடு பொருந்தி ஏற்படுகின்ற வெற்றியானது பலவகைப் பயன்களையும் கொடுக்கும்.

493. தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாதவரும் வலிமை உடையவராய் வெல்வர்.

494. தக்க இடத்தை அறிந்து பொருந்தியவராய்ச் செயலை நெருங்கிச் செய்வாராயின், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்.

495. ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும்; ஆனால் நீரிலிருந்து நீங்கி வந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்று விடும்.

496. வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமுடியாது; கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடமுடியாது.

497. (செய்யும் வழிவகைகளைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.

498. சிறிய படை உடையவனுக்குத் தக்கதாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிவான்.

499. அரணாகிய நன்மையும் மற்றச் சிறப்பும் இல்லாதவராயினும் பகைவர் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று அவரைத் தாக்குதல் அரிது.

500. வேல் ஏந்திய வீரரைக் கோத்தெடுத்த கொம்பு உடைய அஞ்சாத யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்டபோது நரிகள் கொன்றுவிடும்.

# 51. தெரிந்து தெளிதல்

501 அறம், பொருள், இன்பம், உயிர்-அச்சம்; நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்.

502 குடிப்பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப்பரியும்
நாண்-உடையான்; கட்டே தெளிவு.

503 அரிய கற்று, ஆசு-அற்றார் கண்ணும், தெரியுங்கால்
இன்மை அரிதே, வெளிறு.

504 குணம்-நாடி, குற்றமும்-நாடி, அவற்றுள்
மிகை-நாடி, மிக்க கொளல்!

505 பெருமைக்கும், ஏனைச்-சிறுமைக்கும்; தத்தம்
கருமமே, கட்டளைக் கல்.

506 அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று-அவர்
பற்று-இலர்; நாணார் பழி.

507 காதன்மை கந்தா, அறிவு-அறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

508 தேரான், பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

509 தேறற்க யாரையும், தேராது; தேர்ந்த-பின்,
தேறுக, தேறும் பொருள்.

510 தேரான் தெளிவும், தெளிந்தான்-கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும்.

501. அறம், பொருள், இன்பம், உயிர்க்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே ஒருவன் (ஒரு தொழிலுக்கு உரியவனாகத்) தெளியப்படுவான்.

502. நல்ல குடியில் பிறந்து குற்றங்களிலிருந்து நீங்கிப் பழியான செயல்களைச் செய்ய அஞ்சுகின்ற நாணம் உடையவனையே நம்பித் தெளிய வேண்டும்.

503. அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து குற்றம் அற்றவரிடத்திலும் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் அறியாமை இல்லாதிருப்பது அருமையாகும்.

504. ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, மிகுதியானவை எவையென ஆராய்ந்து, மிகுந்திருப்பவற்றால் தெளிந்து கொள்ள வேண்டும்.

505. (மக்களுடைய குணங்களாலாகிய) பெருமைக்கும் (குற்றங்களாலாகிய) சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரை கல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.

506. சுற்றத்தாரின் தொடர்பு அற்றவரை நம்பித் தெளியக் கூடாது; அவர் உலகத்தில் பற்று இல்லாதவராகையால் பழிக்கு நாணமாட்டார்.

507. அறியவேண்டியவற்றை அறியாதிருப்பவரை அன்புடைமை காரணமாக நம்பித் தெளிதல், (தெளிந்தவர்க்கு) எல்லா அறியாமையையும் கொடுக்கும்.

508. மற்றவனைப் பற்றி ஒன்றும் ஆராயாமல் தெளிந்தால் அஃது (அவனுக்கு மட்டும் அல்லாமல்) அவனுடைய வழிமுறையில் தோன்றியவர்க்கும் தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

509. யாரையும் ஆராயமல் தெளியக்கூடாது; நன்றாக ஆராய்ந்த பிறகு, அவரிடம் தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்.

510. ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

# 52. தெரிந்து வினையாடல்

511 நன்மையும் தீமையும் நாடி, நலம்-புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

512 வாரி பெருக்கி, வளம்-படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை!

513 அன்பு, அறிவு, தேற்றம், அவா-இன்மை; இந்-நான்கும்
நன்கு உடையான்-கட்டே தெளிவு.

514 எனை-வகையான் தேறியக்கண்ணும், வினை-வகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

515 அறிந்து, ஆற்றி, செய்கிற்பாற்கு அல்லால், வினை-தான்
சிறந்தான்-என்று ஏவற்பாற்று அன்று.

516 செய்வானை நாடி, வினை-நாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்!

517 'இதனை, இதனால், இவன்-முடிக்கும்' என்று-ஆய்ந்து,
அதனை அவன்கண் விடல்!

518 வினைக்கு-உரிமை நாடிய பின்றை, அவனை
அதற்கு உரியன்-ஆகச் செயல்.

519 வினைக்கண் வினை-உடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும், திரு.

520 நாள்-தோறும் நாடுக, மன்னன்; வினை-செய்வான்
கோடாமைக் கோடாது உலகு.

511. நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.

512. பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்யவேண்டும்.

513. அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந் நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனைத் தெளியலாம்.

514. எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்த பிறகும் (செயலை மேற்கொண்டு செய்யும்போது) அச் செயல்வகையால் வேறுபடும் மக்கள் உலகத்தில் உண்டு.

515. (செய்யும் வழிகளை) அறிந்து இடையூறுகளைத் தாங்கிச் செய்துமுடிக்க வல்லவனை அல்லாமல், மற்றவனைச் சிறந்தவன் என்று கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக்கூடாது.

516. செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

517. இந்தத் தொழிலை இக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

518. ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்த பிறகு அவனை அத் தொழிலுக்கு உரியவனாகும்படி உயர்த்தவேண்டும்.

519. மேற்கொண்ட தொழிலில் எப்போதும் முயற்சி உடையவனின் உறவைத் தவறாக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கும்.

520. தொழில் செய்கின்றவன் கோணாதிருக்கும் வரையில் உலகம் கெடாது; ஆகையால் மன்னன் நாள்தோறும் அவனுடைய நிலைமையை ஆராய வேண்டும்.

# 53. சுற்றம் தழால்

521 பற்று அற்ற-கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார்-கண்ணே உள.

522 விருப்பு-அறாச் சுற்றம் இயையின், அறுப்பு-அறா
ஆக்கம் பலவும் தரும்.

523 அளவளாவு இல்லா-தான் வாழ்க்கை; குளவளாக்
கோடு-இன்றி நீர் நிறைந்தற்று.

524 சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்; செல்வம்-தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

525 கொடுத்தலும் இன்-சொலும் ஆற்றின்; அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்.

526 பெரும்-கொடையான், பேணான் வெகுளி; அவனின்
மருங்கு-உடையார் மா-நிலத்து இல்.

527 காக்கை கரவா கரைந்து-உண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

528 பொது-நோக்கான், வேந்தன் வரிசையா நோக்கின்,
அது-நோக்கி வாழ்வார் பலர்.

529 தமர்-ஆகி, தன்-துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

530 உழைப்-பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்
இழைத்து-இருந்து, எண்ணிக் கொளல்.

521. ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுக்கும் தமக்கும் இருந்த பழைய உறவைப் பாராட்டிப் பேசும் பண்புகள் சுற்றத்தாரிடம் உண்டு.

522. அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன்மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கம் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

523. சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றது.

524. சுற்றத்தாரால் சுற்றப்படும்படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பயனாகும்.

525. பொருள் கொடுத்தலும் இன்சொல் கூறுதலுமாகிய இரண்டும் செய்ய வல்லவனானால், ஒருவன் தொடர்ந்த பல சுற்றத்தால் சூழப்படுவான்.

526. பெரிய கொடையாளியாகவும் சினமற்றவனாகவும் ஒருவன் இருந்தால் அவனைப்போல் சுற்றத்தாரை உடையவர் உலகத்தில் யாரும் இல்லை.

527. காக்கை (தனக்குக் கிடைத்ததை) மறைத்துவைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும்; ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

528. அரசன் எல்லாரையும் பொதுவகையாக நோக்காமல், அவரவர் சிறப்புக்கு ஏற்றவாறு நோக்கினால், அதை விரும்பிச் சுற்றமாக வாழ்கின்றவர் பலர் ஆவர்.

529. முன் சுற்றத்தாராக இருந்து பின் ஒரு காரணத்தால் பிரிந்தவரின் உறவு, அவ்வாறு அவர் பொருந்தாமலிருந்த காரணம் நீங்கியபின் தானே வந்து சேரும்.

530. தன்னிடமிருந்து பிரிந்து சென்று ஒரு காரணம்பற்றித் திரும்பி வந்தவனை, அரசன், அவன் நாடிய உதவியைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ளவேண்டும்.

# 54. பொச்சாவாமை

531 இறந்த வெகுளியின் தீதே; சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

532 பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்சம் நிரப்புக் கொன்றாங்கு.

533 பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு.

534 அச்சம்-உடையார்க்கு அரண்-இல்லை; ஆங்கு-இல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

535 முன்னுறக் காவாது இழுக்கியான், தன்-பிழை,
பின்-ஊறு, இரங்கிவிடும்.

536 இழுக்காமை யார்-மாட்டும், என்றும், வழுக்காமை
வாயின், அஃது-ஒப்பது இல்.

537 அரிய-என்று ஆகாத இல்லை; பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

538 புகழ்ந்தவை போற்றிச் செயல்-வேண்டும்; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

539 இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்-தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து!

540 உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றும்-தான்
உள்ளியது உள்ளப்-பெறின்.

531. பெரிய உவகையால் மகிழ்ந்திருக்கும்போது மறதியால் வரும் சோர்வு, ஒருவனுக்கு வரம்பு கடந்த சினம் வருவதைவிடத் தீமையானதாகும்.

532. நாள்தோறும் விடாமல் வரும் வறுமை அறிவைக் கொல்வதுபோல, ஒருவனுடைய புகழை அவனுடைய மறதி கொன்றுவிடும்.

533. மறதியால் சோர்ந்து நடப்பவர்க்குப் புகழுடன் வாழும் தன்மையில்லை; அஃது உலகத்தில் எப்படிப்பட்ட நூலோர்க்கும் ஒப்பமுடிந்த முடிபாகும்.

534. உள்ளத்தில் அச்சம் உடையவர்க்குப் புறத்திலே அரண் இருந்தும் பயன் இல்லை; அதுபோல் மறதி உடையவர்க்கு நல்ல நிலை வாய்த்தும் பயன் இல்லை.

535. வரும் இடையூறுகளை முன்னே அறிந்து காக்காமல் மறந்து சோர்ந்தவன், பின்பு அவை வந்துற்றபோது தன் பிழையை நினைந்து இரங்குவான்.

536. யாரிடத்திலும் எக்காலத்திலும் மறந்தும் சோர்ந்திருக்காத தன்மை தவறாமல் பொருந்தியிருக்குமானால், அதற்கு ஒப்பான நன்மை வேறொன்றும் இல்லை.

537. மறவாமை என்னும் கருவீ   கொண்டு (கடமைகளைப்) போற்றிச் செய்தால், செய்வதற்கு அரியவை என்று ஒருவனால் முடியாத செயல்கள் இல்லை.

538. சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவருக்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை.

539. தாம் தம் மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு கடமையை மறந்திருக்கும் போது, அவ்வாறு சோர்ந்திருந்த காரணத்தால் முற்காலத்தில் அழிந்தவரை நினைக்கவேண்டும்.

540. ஒருவன் எண்ணியதை விடாமல் எண்ணி, (சோர்வில்லாமல்) இருக்கப் பெற்றால், அவன் கருதியதை அடைதல் எளிதாகும்.

# 55. செங்கோன்மை

541 ஓர்ந்து, கண்ணோடாது, இறை-புரிந்து, யார்-மாட்டும்
தேர்ந்து, செய்வஃதே முறை.

542 வான்-நோக்கி வாழும் உலகு-எல்லாம்; மன்னவன்
கோல்-நோக்கி வாழும் குடி.

543 அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய்-
நின்றது; மன்னவன் கோல்.

544 குடி-தழீஇக் கோல்-ஓச்சும் மா-நில மன்னன்
அடி-தழீஇ நிற்கும், உலகு.

545 இயல்புளிக் கோல்-ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

546 வேல்-அன்று, வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம், கோடாது எனின்.

547 இறை-காக்கும், வையகம் எல்லாம்; அவனை
முறை-காக்கும், முட்டாச் செயின்.

548 எண்-பதத்தான் ஓரா, முறை-செய்யா, மன்னவன்
தண்-பதத்தான் தானே கெடும்.

549 குடி புறங்காத்து, ஓம்பி, குற்றம்-கடிதல்;
வடு-அன்று; வேந்தன் தொழில்.

550 கொலையில், கொடியாரை, வேந்து-ஒறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனொடு நேர்.

541. யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல் நடுவுநிலைமை பொருந்தி (செய்யத்தக்கதை) ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும்.

542. உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. அது போல் குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

543. அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.

544. குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறும்.

545. நீதிமுறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒரு சேர ஏற்படுவனவாகும்.

546. ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அன்று; அரசனுடைய செங்கோலே ஆகும்; அச்செங்கோலும் கோணாதிருக்குமாயின்.

547. உலகத்தை எல்லாம் அரசன் காப்பாற்றுவான்; நீதிமுறை கெடாதவாறு ஆட்சி செய்வானாயின் அரசனை அந்த முறையே காப்பாற்றும்.

548. எளிய செல்வி உடையவனாய் ஆராய்ந்து நீதிமுறை செய்யாத அரசன் தாழ்ந்த நிலையில் நின்று ( பகைவரில்லாமலும்) தானே கெடுவான்.

549. குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத், தானும் வருத்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில்; பழி அன்று.

550. கொடியவர் சிலரைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும்.

# 56. கொடுங்கோன்மை

551 கொலை-மேற்கொண்டாரின் கொடிதே; அலை-மே
மேற்கொண்டு
அல்லவை செய்து-ஒழுகும் வேந்து.

552 வேலொடு நின்றான், ‘இடு’ என்றது-போலும்
கோலொடு நின்றான் இரவு.

553 நாள்-தொறும் நாடி, முறைசெய்யா மன்னவன்
நாள்-தொறும் நாடு கெடும்.

554 கூழும் குடியும் ஒருங்கு-இழக்கும்; கோல் கோடி,
சூழாது, செய்யும் அரசு.

555 அல்லல்-பட்டு, ஆற்றாது, அழுத-கண்ணீர்-அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

556 மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது-இன்றேல்
மன்னாவாம், மன்னர்க்கு ஒளி.

557 துளி-இன்மை ஞாலத்திற்கு எற்று? அற்றே, வேந்தன்
அளி-இன்மை வாழும் உயிர்க்கு.

558 இன்மையின் இன்னாது, உடைமை; முறை-செய்யா
மன்னவன் கோல் கீழ்ப்படின்.

559 முறை-கோடி மன்னவன் செய்யின்; உறை-கோடி
ஒல்லாது, வானம் பெயல்.

560 ஆ-பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்-மறப்பர்;
காவலன் காவான் எனின்.

551. குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு, முறையல்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவரைவிடக் கொடியவன்.

552. ஆட்சிக்குரிய கோலை ஏந்தி நின்ற அரசன் குடிகளைப் பொருள் கேட்டல், போகும் வழியில் தனியே வேல் ஏந்தி நின்ற கள்வன் 'கொடு' என்று கேட்பதைப் போன்றது.

553. நாள்தோறும தன் ஆட்சியில் விளையும் நன்மை தீமைகளை ஆராய்ந்து முறை செய்யாத அரசன், நாள்தோறும் ( மெல்ல மெல்லத் ) தன் நாட்டை இழந்து வருவான்.

554. ( ஆட்சிமுறை கெட்டுக் ) கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையும் செய்யும் அரசன், பொருளையும் குடிகளையும் ஒரு சேர இழந்து விடுவான்.

555. ( முறை செய்யாதவனுடைய ) செல்வத்தைத் தேய்த்து அழிக்கவல்ல படை, அவனால் பலர் துன்பப்பட்டுத் துன்பம் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீர் அன்றோ?

556. அரசர்க்குக் புகழ் நிலைபெறக் காரணம் செங்கோல் முறையாகும். அஃது இல்லையானால் அரசர்க்குப் புகழ் நிலைபெறாமல் போகும்.

557. மழைத்துளி இல்லாதிருத்தல் உலகத்திற்கு எத்தன்மையானதோ அத்தன்மையானது நாட்டில் வாழும் குடிமக்களுக்கு அரசனுடைய அருள் இல்லாத ஆட்சி.

558. முறை செய்யாத அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியின் கீழ் இருக்கப்பெற்றால், பொருள் இல்லாத வறுமை நிலையைவிடச் செல்வநிலை துன்பமானதாகும்

559. அரசன் முறைதவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவமழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

560. நாட்டைக் காக்கும் தலைவன் முறைப்படி காக்காவிட்டால் அந்நாட்டில் பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும்; அந்தணரும் அறநூல்களை மறப்பர்.

# 57. வெருவந்த செய்யாமை

561 தக்காங்கு நாடி, தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

562 கடிது-ஓச்சி, மெல்ல எறிக; நெடிது-ஆக்கம்
நீங்காமை வேண்டுபவர்.

563 வெருவந்த செய்து-ஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

564 'இறை கடியன்' என்று-உரைக்கும் இன்னாச்-சொல் வேந்தன்
உறை-கடுகி ஒல்லைக் கெடும்.

565 அரும்-செவ்வி, இன்னா முகத்தான் பெரும்-செல்வம்
பேஎய் கண்டன்னது உடைத்து.

566 கடும்-சொல்லன், கண்-இலன் ஆயின்; நெடும்-செல்வம்
நீடு-இன்றி, ஆங்கே கெடும்.

567 கடு-மொழியும், கையிகந்த தண்டமும்; வேந்தன்
அடு-முரண் தேய்க்கும் அரம்.

568 இனத்து-ஆற்றி, எண்ணாத வேந்தன்; சினத்து-ஆற்றிச்
சீறின், சிறுகும் திரு.

569 செரு-வந்த போழ்தில், சிறை-செய்யா வேந்தன்
வெருவந்து, வெய்து கெடும்.

570 கல்லார்ப் பிணிக்கும், கடும்-கோல்; அது-அல்லது
இல்லை, நிலக்குப் பொறை.

561. செய்த குற்றத்தைத் தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அக் குற்றம் செய்யாதபடி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவனே அரசன் ஆவான்.

562. ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க விரும்புகின்றவர் (தண்டிக்கத் தொடங்கும்போது) அளவு கடந்து செய்வது போல் காட்டி, அளவு மீறாமல் முறை செய்ய வேண்டும்.

563. குடிகள் அஞ்சும்படியான கொடுமைகளைச் செய்து ஆளும் கொடுங்கோல் அரசனானால், அவன் திண்ணமாக விரைவில் கெடுவான்.

564. 'நம் அரசன் கடுமையானவன்' என்று குடிகளால் கூறப்படும் கொடுஞ் சொல்லை உடைய வேந்தன், தன் ஆயுள் குறைந்து விரைவில் கெடுவான்.

565. எளிதில் காணமுடியாத அருமையும், இனிமையற்ற முகமும் உடையவனது பெரிய செல்வம், பேய் கண்டு காத்திருப்பதைப் போன்ற தன்மையுடையது.

566. கடுஞ்சொல் உடையவனாய்க் கண்ணோட்டம் இல்லாதவனாய் உள்ளவனுடைய பெரிய செல்வம் நீட்டித்தல் இல்லாமல் அப்பொழுதே கெடும்.

567. கடுமையான சொல்லும் முறைகடந்த தண்டனையும் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரம் ஆகும்.

568. அமைச்சர் முதலான தன் இனத்தாரிடம் கலந்து எண்ணாத அரசன், சினத்தின் வழியில் சென்று சீறி நிற்பானானால், அவனுடைய செல்வம் சுருங்கும்.

569. முன்னமே தக்கவாறு அரண் செய்துகொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில் (தற்காப்பு இல்லாமல்) அஞ்சி விரைவில் அழிவான்.

570. கடுங்கோலாகிய ஆட்சிமுறை கல்லாதவரைத் தனக்கு அரணாகச் சேர்த்துக்கொள்ளும்; அது தவிர நிலத்திற்குச் சுமை வேறு இல்லை.

# 58. கண்ணோட்டம்

571 கண்ணோட்டம் என்னும் கழி-பெரும்-காரிகை
உண்மையான், உண்டு இவ்-உலகு.

572 கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃது-இலார்
உண்மை நிலக்குப் பொறை.

573 பண்-என்-ஆம், பாடற்கு இயைபு-இன்றேல்? கண்-என்-ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்?

574 உள-போல் முகத்து எவன்-செய்யும்? அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

575 கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது-இன்றேல்,
புண் என்று உணரப்படும்.

576 மண்ணொடு இயைந்த மரத்து-அனையர்; கண்ணொடு-
இயைந்து, கண்ணோடாதவர்.

577 கண்ணோட்டம் இல்லவர் கண்-இலர்; கண்-உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

578 கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து, இவ்-உலகு.

579 ஒறுத்தாற்றும் பண்பினார்-கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

580 பெயக்கண்டும், நஞ்சு-உண்டு அமைவர்; நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.

571. கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச் சிறந்த அழகு இருக்கும் காரணத்தால்தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது.

572. கண்ணோட்டத்தினால் உலகியல் நடைபெறுகின்றது; கண்ணோட்டம் இல்லாதவர் உயிரோடு இருந்தால் நிலத்திற்குச் சுமையே தவிர, வேறு பயனில்லை.

573. பாடலோடு பொருந்துதல் இல்லையானால் இசை என்ன பயனுடையதாகும்? அதுபோல், கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண் என்ன பயனுடையதாகும்?

574. தக்க அளவிற்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுதல் அல்லாமல் வேறு என்ன பயன் செய்யும்?

575. ஒருவனுடைய கண்ணுக்கு அணிகலமாவது கண்ணோட்டம் என்னும் பண்பே; அஃது இல்லையானால் புண் என்று உணரப்படும்.

576. கண்ணோட்டத்திற்கு உரிய கண்ணோடு பொருந்தி இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர், (கண் இருந்தும் காணாத) மரத்தினைப் போன்றவர்.

577. கண்ணோட்டம் இல்லாத மக்கள் கண் இல்லாதவரே ஆவர். கண் உடைய மக்கள் கண்ணோட்டம் இல்லாதிருத்தலும் இல்லை.

578. தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்கவல்லவர்க்கு, இவ்வுலகம் உரிமை உடையது.

579. தண்டித்தற்குரிய தன்மை உடையவரிடத்திலும் கண்ணோட்டம் செய்து, (அவர் செய்த குற்றத்தைப்) பொறுத்துக் காக்கும் பண்பே சிறந்தது.

580. யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர், பழகியவர் தமக்கு நஞ்சு இடக்கண்டும் அதை உண்டு அமைவர்.

# 59. ஒற்று ஆடல்

581 ஒற்றும், உரை-சான்ற நூலும்; இவை-இரண்டும்
தெற்றென்க, மன்னவன் கண்.

582 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்-அறிதல், வேந்தன் தொழில்.

583 ஒற்றினான் ஒற்றி, பொருள்-தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்-கிடந்தது இல்.

584 வினை-செய்வார், தம்-சுற்றம், வேண்டாதார்; என்று-ஆங்கு
அனைவரையும் ஆராய்வது; ஒற்று.

585 கடாஅ உருவொடு கண்-அஞ்சாது, யாண்டும்
உகா-அமை வல்லதே; ஒற்று.

586 துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து, ஆராய்ந்து,
என்-செயினும் சோர்வு-இலது; ஒற்று.

587 மறைந்தவை கேட்க-வற்று-ஆகி, அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே; ஒற்று.

588 ஒற்று-ஒற்றித் தந்த பொருளையும், மற்றும்-ஓர்
ஒற்றினால் ஒற்றி, கொளல்.

589 ஒற்று-ஒற்று உணராமை ஆள்க; உடன்-மூவர்
சொல்-தொக்க தேறப்படும்.

590 சிறப்பு-அறிய ஒற்றின்-கண் செய்யற்க; செய்யின்,
புறப்படுத்தான் ஆகும், மறை.

581. ஒற்றரும் புகழ் அமைந்த நீதிநூலும் ஆகிய இவ்விருவகைக் கருவிகளையும் அரசன் தன்னுடைய கண்களாகத் தெளிய வேண்டும்.

582. எல்லாரிடத்திலும்நிகழ்கின்றவை எல்லாவற்றையும் எக்காலத்திலும்(ஒற்றரைக்கொண்டு) விரைந்து அறிதல் அரசனுக்குரிய தொழிலாகும்.

583. ஒற்றரால் (நாட்டு நிகழ்ச்சிகளை) அறிந்து அவற்றின் பயனை ஆராய்ந்துணராத அரசன் வெற்றி பெறத்தக்க வழிவேறு இல்லை.

584. தம்முடைய தொழிலைச் செய்கின்றவர், தம் சுற்றத்தார், தம் பகைவர் என்று கூறப்படும் எல்லாரையும் ஆராய்வதே ஒற்றரின் தொழிலாகும்.

585. ஐயுற முடியாத உருவத்தோடு, பார்த்தவருடைய கண்பார்வைக்கு அஞ்சாமல் எவ்விடத்திலும் மனத்திலுள்ளதை வெளிப்படுத்தாமல், இருக்கவல்லவனே ஒற்றன் ஆவன்.

586. துறந்தவரின் வடிவத்தை உடையவராய், அரிய இடங்களிலெல்லாம் சென்று ஆராய்ந்து, (ஐயுற்றவர்) என்ன செய்தாலும் சோர்ந்துவிடாதவரே ஒற்றர் ஆவார்.

587. மறைந்த செய்திகளையும் கேட்டறியவல்லவனாய் அறிந்த செய்திகளை ஐயப்படாமல் துணியவல்லவனாய் உள்ளவனே ஒற்றன் ஆவான்.

588. ஓர் ஒற்றன் மறைந்து கேட்டுத் தெரிவித்த செய்தியையும் மற்றோர் ஒற்றனால் கேட்டுவரச் செய்து ஒப்புமை கண்டபின் உண்மை என்று கொள்ள வேண்டும்.

589. ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதபடி ஆளவேண்டும்; அவ்வாறு ஆளப்பட்ட ஒற்றர் மூவரின் சொல் ஒத்திருந்தால் அவை உண்மை எனத் தெளியப்படும்.

590. ஒற்றனிடத்தில் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்யக்கூடாது; செய்தால் மறைப்பொருளைத் தானே வெளிப்படுத்தியவன் ஆவான்.

# 60. ஊக்கம் உடைமை

591 உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது-இல்லார்
உடையது உடையரோ, மற்று?

592 உள்ளம் உடைமை உடைமை; பொருள்-உடைமை
நில்லாது நீங்கி-விடும்.

593 ‘ஆக்கம் இழந்தேம்!’ என்று அல்லாவார்; ஊக்கம்
ஒருவந்தம் கைத்து-உடையார்.

594 ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவு-இலா
ஊக்கம் உடையான்-உழை.

595 வெள்ளத்து அனைய, மலர்-நீட்டம்; மாந்தர்-தம்
உள்ளத்து அனையது, உயர்வு.

596 உள்ளுவது எல்லாம் உயர்வு-உள்ளல்! மற்று-அது
தள்ளினும், தள்ளாமை நீர்த்து.

597 சிதைவிடத்து ஒல்கார், உரவோர்; புதை-அம்பின்
பட்டுப்-பாடு ஊன்றும் களிறு.

598 உள்ளம் இலாதவர் எய்தார்; ‘உலகத்து
வள்ளியம்’ என்னும் செருக்கு.

599 பரியது கூர்ங்கோட்டது ஆயினும், யானை
வெரூஉம், புலி தாக்குறின்.

600 உரம்-ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது-இல்லார்
மரம்; மக்கள் ஆதலே வேறு.

591. ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

592. ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும்; மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

593. ஊக்கத்தை உறுதியாகத் தம்கைப் பொருளாக உடையவர், ஆக்கம் (இழந்துவிட்ட காலத்திலும்) இழந்துவிட்டோம் என்று கலங்கமாட்டார்.

594. சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

595. நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும்; மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

596. எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

597. உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல், ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளரமாட்டார்.

598. ஊக்கம் இல்லாதவர், ‘இவ்வுலகில் யாம் வண்மை உடையேம் ‘ என்று தம்மைத் தாம் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடையமாட்டார்.

599. யானை பருத்த உடம்பை உடையது; கூர்மையான கொம்புகளை உடையது; ஆயினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

600. ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே. அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே; (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

# 61. மடி இன்மை

601 குடி-என்னும் குன்றா விளக்கம், மடி-என்னும்
மாசு-ஊர, மாய்ந்து கெடும்.

602 மடியை, மடியா ஒழுகல்; குடியைக்
குடியாக, வேண்டுபவர்!

603 மடி மடிக்-கொண்டு-ஒழுகும் பேதை; பிறந்த-
குடி, மடியும், தன்னினும் முந்து.

604 குடி-மடிந்து, குற்றம் பெருகும்; மடி-மடிந்து,
மாண்ட உஞற்று-இலவர்க்கு.

605 நெடு-நீர், மறவி, மடி, துயில்; நான்கும்
கெடும்-நீரார், காமக் கலன்.

606 படி-உடையார் பற்று-அமைந்தக்-கண்ணும்; மடி-உடையார்
மாண்-பயன் எய்தல், அரிது.

607 இடிபுரிந்து, எள்ளும்-சொல் கேட்பர்; மடிபுரிந்து
மாண்ட உஞற்று-இலவர்.

608 மடிமை, குடிமைக்கண்-தங்கின்; தன்-ஒன்னார்க்கு
அடிமை, புகுத்தி-விடும்.

609 குடி, ஆண்மையுள்-வந்த-குற்றம், ஒருவன்
மடி-ஆண்மை மாற்ற, கெடும்.

610 மடி-இலா மன்னவன் எய்தும்; அடி-அளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

601. ஒருவனுக்குத் தன் குடியாகிய மங்காத விளக்கு, அவனுடைய சோம்பலாகிய மாசு படியப் படிய ஒளி மங்கிக் கெட்டுவிடும்.

602. தம் குடியைச் சிறப்புடைய குடியாக விளங்குமாறு செய்ய விரும்புகின்றவர் சோம்பலைச் சோம்பலாகக் கொண்டு முயற்சியுடையவராய் நடக்கவேண்டும்.

603. அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடி, அவனுக்கு முன் அழிந்துவிடும்.

604. சோம்பலில் அகப்பட்டுச் சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்குக் குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

605. காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், அளவு மீறிய தூக்கம் ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

606. நாட்டை ஆளும் தலைவருடைய உறவு தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

607. சோம்பலை விரும்பி மேற்கொண்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர், பிறர் இடித்துக் கூறி இகழ்கின்ற சொல்லைக் கேட்கும் நிலைமை அடைவர்.

608. சோம்பல் நல்ல குடியில் பிறந்தவனிடம் வந்து பொருந்தினால், அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்துவிடும்.

609. ஒருவன் சோம்பலை ஆளுந் தன்மையை மாற்றி விட்டால் அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் வந்த குற்றம் தீர்ந்து விடும்.

610. அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவிய பரப்பு எல்லாவற்றையும் சோம்பல் இல்லாத அரசன் ஒருசேர அடைவான்.

# 62. ஆள்வினை உடைமை

611 அருமை உடைத்து-என்று, அசாவாமை வேண்டும்;
பெருமை, முயற்சி தரும்.

612 வினைக்-கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்-குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!

613 தாளாண்மை என்னும் தகைமைக்-கண் தங்கிற்றே;
வேளாண்மை என்னும் செருக்கு.

614 தாளாண்மை இல்லாதான் வேளாண்மை; பேடி-கை
வாள்-ஆண்மை போல, கெடும்.

615 இன்பம்-விழையான், வினை-விழைவான்; தன்-கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும்-தூண்.

616 முயற்சி, திருவினை ஆக்கும்; முயற்று-இன்மை,
இன்மை புகுத்தி-விடும்.

617 ‘மடி-உளாள், மா-முகடி’ என்ப; மடி-இலான்
தாள்-உளாள், தாமரையினாள்.

618 பொறி-இன்மை, யார்க்கும் பழி-அன்று; அறிவு-அறிந்து
ஆள்வினை-இன்மை, பழி.

619 தெய்வத்தான் ஆகாது-எனினும்; முயற்சி, தன்-
மெய்-வருத்தக் கூலி-தரும்.

620 ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவு-இன்றித்
தாழாது உஞற்றுபவர்.

611. இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும்; அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

612. தொழிலாகிய குறையைச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும்; ஆகையால் தொழிலில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்க வேண்டும்.

613. பிறர்க்கு உதவி செய்தல் என்னும் மேம்பட்ட நிலைமை, முயற்சி என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த பண்பில் நிலைத்திருக்கின்றது.

614. முயற்சி இல்லாதவன் உதவி செய்பவனாக இருத்தல், பேடி தன் கையால் வாளை எடுத்து ஆளும் தன்மைபோல் நிறைவேறாமல் போகும்.

615. தன் இன்பத்தை விரும்பாதவனாய் மேற்கொண்ட செயலை முடிக்க விரும்புகின்றவன், தன் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்குகின்ற தூண் ஆவான்.

616. முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.

617. ஒருவனுடைய சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கின்றாள்; சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள்.

618. நன்மை விளைக்கும் ஊழ் இல்லாதிருத்தல் யார்க்கும் பழி அன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருத்தலே பழி.

619. ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.

620. சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், (செயலுக்கு இடையூறாக வரும்) ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்.

## 63. இடுக்கண் அழியாமை

621 இடுக்கண் வருங்கால் நகுக! அதனை
அடுத்து-ஊர்வது அஃது-ஒப்பது இல்.

622 வெள்ளத்து அனைய இடும்பை; அறிவு-உடையான்
உள்ளத்தின் உள்ள, கெடும்.

623 இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு
இடும்பை படாஅதவர்.

624 மடுத்த-வாய்-எல்லாம் பகடு-அன்னான்; உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு-உடைத்து.

625 அடுக்கி வரினும், அழிவு-இலான்; உற்ற
இடுக்கண், இடுக்கண்-படும்.

626 ‘அற்றேம்!’ என்று அல்லற்படுபவோ; ‘பெற்றேம்!’ என்று
ஓம்புதல் தேற்றாதவர்.

627 ‘இலக்கம், உடம்பு-இடும்பைக்கு’ என்று, கலக்கத்தைக்
கையாறாக்-கொள்ளாதாம், மேல்.

628 இன்பம் விழையான், ‘இடும்பை-இயல்பு’ என்பான்;
துன்பம் உறுதல் இலன்.

629 இன்பத்துள், இன்பம் விழையாதான்; துன்பத்துள்,
துன்பம் உறுதல் இலன்.

630 இன்னாமை இன்பம் எனக்-கொளின்; ஆகும்-தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

621. துன்பம் வரும்போதும் (அதற்காகக் கலங்காமல்) நகுதல் வேண்டும். அத் துன்பத்தை நெருங்கி எதிர்த்து வெல்லவல்லது அதைப் போன்றது வேறு இல்லை.

622. வெள்ளம்போல் அளவற்றதாய் வரும் துன்பமும், அறிவுடையவன் தன் உள்ளத்தினால் அத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் கெடும்.

623. துன்பம் வந்தபோது அதற்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவர்.

624. தடைப்பட்ட இடங்களில் எல்லாம் (வண்டியை இழுத்துச் செல்லும்) எருதுபோல் விடாமுயற்சி உடையவன் உற்ற துன்பமே துன்பப்படுவதாகும்.

625. விடாமல் மேன்மேலும் துன்பம் வந்தபோதிலும் கலங்காமலிருக்கும் ஆற்றலுடையவன் அடைந்த துன்பமே துன்பப்பட்டுப் போகும்.

626. செல்வம் வந்தபோது ‘இதைப் பெற்றோமே‘ என்று பற்றுக் கொண்டு காத்தறியாதவர், வறுமை வந்தபோது ‘இழந்தோமே‘ என்று அல்லல்படுவாரோ?

627. மேலோர், உடம்பு துன்பத்திற்கு இலக்கமானது என்று உணர்ந்து, (துன்பம் வந்தபோது) கலங்குவதை ஒழுக்க நெறியாகக் கொள்ளமாட்டார்.

628. இன்பமானதை விரும்பாதவனாய்த் துன்பம் இயற்கையானது என்று தெளிந்திருப்பவன் துன்பம் வந்தபோது துன்ப முறுவது இல்லை.

629. இன்பம் வந்த காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றாதவன், துன்பம் வந்த காலத்தில் அந்தத் துன்பத்தை அடைவதும் இல்லை.

630. ஒருவன் துன்பத்தையே தனக்கு இன்பமாகக் கருதிக் கொள்வானானால் அவனுடைய பகைவரும் விரும்பத்தக்க சிறப்பு உண்டாகும்.

# 64. அமைச்சு

631 கருவியும், காலமும், செய்கையும், செய்யும்-
அருவினையும்; மாண்டது-அமைச்சு.

632 வன்கண், குடி, காத்தல், கற்று-அறிதல், ஆள்வினையோடு;
ஐந்துடன் மாண்டது-அமைச்சு.

633 பிரித்தலும், பேணிக்-கொளலும், பிரிந்தார்ப்-
பொருத்தலும்; வல்லது-அமைச்சு.

634 தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்-
சொல்லலும் வல்லது-அமைச்சு.

635 அறன்-அறிந்து, ஆன்று-அமைந்த-சொல்லான்;
எஞ்ஞான்றும்
திறன்-அறிந்தான், தேர்ச்சித் துணை.

636 மதி-நுட்பம் நூலோடு உடையார்க்கு; அதி-நுட்பம்
யா-உள, முன் நிற்பவை?

637 செயற்கை அறிந்தக்-கடைத்தும்; உலகத்து
இயற்கை-அறிந்து, செயல்!

638 அறி-கொன்று, அறியான் எனினும்; உறுதி-
உழையிருந்தான் கூறல், கடன்.

639 பழுது-எண்ணும் மந்திரியின்; பக்கத்துள் தெவ்-ஓர்
எழுபது கோடி உறும்.

640 முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்;
திறப்பாடு இலாஅதவர்.

631. செயலுக்கு உரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் அமைச்சன்.

632. அஞ்சாமையும், குடிபிறப்பும், காக்கும் திறனும், கற்றறிந்த அறிவும், முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் திருந்தப் பெற்றவன் அமைச்சன்.

633. பகைவர்க்குத் துணையானவரைப் பிரித்தலும், தம்மிடம் உள்ளவரைக் காத்தலும், பிரிந்தவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளலும் வல்லவன் அமைச்சன்.

634. (செய்யத்தக்க செயலை) ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவன் அமைச்சன்.

635. அறத்தை அறிந்தவனாய் அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் செயல்செய்யும் திறன் அறிந்தவனாய் உள்ளவன் ஆராய்ந்து கூறும் துணையாவான்.

636. இயற்கையான நுட்ப அறிவை நூலறிவோடு ஒருங்கே உடையவர்க்கு மிக்க நுட்பமான சூழ்ச்சிகளாய் முன் நிற்பவை எவை உள்ளன?

637. நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும்.

638. அறிவுறுத்துவாரின் அறிவையும் அழித்துத் தானும் அறியாதவனாக அரசன் இருந்தாலும், அமைச்சன் அவனுக்கு உறுதியானவற்றை எடுத்துக்கூறுதல் கடமையாகும்.

639. தவறான வழியை எண்ணிக் கூறுகின்ற அமைச்சனை விட எழுபது கோடி பகைவர் பக்கத்தில் இருந்தாலும் நன்மையாகும்.

640. (செயல்களை முடிக்கும்) திறன் இல்லாதவர், முன்னே முறையாக எண்ணி வைத்திருந்தும் (செய்யும்போது) குறையானவைகளையே செய்வர்.

# 65. சொல் வன்மை

641 ‘நா-நலம்’ என்னும் நலன்-உடைமை; அந்-நலம்
யா-நலத்து உள்ளதூஉம் அன்று.

642 ஆக்கமும், கேடும், அதனால் வருதலால்;
காத்து-ஓம்பல், சொல்லின்-கண் சோர்வு.

643 கேட்டார்ப் பிணிக்கும் தகை-அவாய்; கேளாரும்
வேட்ப, மொழிவது ஆம்-சொல்.

644 திறன்-அறிந்து சொல்லுக, சொல்லை; அறனும்,
பொருளும் அதனின்-ஊங்கு இல்.

645 சொல்லுக சொல்லை; பிறிது-ஓர்-சொல் அச்-சொல்லை
வெல்லும்-சொல் இன்மை அறிந்து.

646 வேட்பத்-தாம்-சொல்லி, பிறர்-சொல் பயன்-கோடல்
மாட்சியின் மாசு-அற்றார் கோள்.

647 சொலல்-வல்லன், சோர்வு-இலன், அஞ்சான்; அவனை
இகல்-வெல்லல் யார்க்கும் அரிது.

648 விரைந்து தொழில்-கேட்கும் ஞாலம்; நிரந்து-இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

649 பல-சொல்லக் காமுறுவர், மன்ற; மாசு-அற்ற
சில-சொல்லல் தேற்றாதவர்.

650 இணர்-ஊழ்த்தும் நாறா மலர்-அனையர்; கற்றது
உணர விரித்து-உரையாதார்.

641. நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வம் ஆகும்; அந்த நாநலம் தனிச்சிறப்புடையது. ஆகையால் மற்ற எந்த நலங்களிலும் அடங்குவது அன்று.

642. ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

643. சொல்லும்போது கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்,

644. சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை வழங்க வேண்டும்; அத்தகைய சொல்வன்மையைவிடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

645. வேறொரு சொல் அந்தச் சொல்லை வெல்லும் சொல்லாக இல்லாதிருத்தலை அறிந்த பிறகே சொல்லக் கருதியதைச் சொல்லவேண்டும்.

646. பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லும் போது அச்சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

647. தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனாய், சொல்லும் போது சோர்வு இல்லாதவனாய், அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது.

648. கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

649. குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர்.

650. தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

# 66. வினைத் தூய்மை

651 துணை-நலம் ஆக்கம் தரூஉம்; வினை-நலம்
வேண்டிய எல்லாம் தரும்.

652 என்றும் ஒருவுதல் வேண்டும்; புகழொடு
நன்றி பயவா வினை.

653 ஓஒதல் வேண்டும், ஒளி-மாழ்கும் செய்வினை;
'ஆஅதும்!' என்னுமவர்.

654 இடுக்கண்-படினும், இளிவந்த செய்யார்;
நடுக்கு-அற்ற காட்சியவர்.

655 'எற்று!'-என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்று-அன்ன செய்யாமை நன்று.

656 ஈன்றாள் பசி-காண்பான் ஆயினும்; செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

657 பழி-மலைந்து எய்திய ஆக்கத்தின்; சான்றோர்
கழி-நல்குரவே தலை.

658 கடிந்த கடிந்து-ஒரார் செய்தார்க்கு; அவை-தாம்
முடிந்தாலும், பீழை தரும்.

659 அழக்-கொண்ட எல்லாம் அழப்-போம்; இழப்பினும்
பிற்பயக்கும், நற்பாலவை.

660 சலத்தால் பொருள்-செய்து ஏமாக்கல்; பசு-மண்-
கலத்துள் நீர்-பெய்து இரீஇயற்று.

651. ஒருவனுக்கு வாய்ந்த துணையின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்; செய்யும் வினையின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

652. புகழையும் அறத்தையும் தாராத (தூய்மை அற்ற) செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

653. மேன்மேலும் உயர்வோம் என்று விரும்பி முயல்கின்றவர் தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாமல் விடவேண்டும்.

654. அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர், துன்பத்தில் சிக்குண்டாலும் (அத் துன்பத்தைத் தீர்ப்பதற்காகவும்) இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

655. பிறகு நினைந்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக்கூடாது. ஒருகால் தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தன்மையானவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

656. பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுற்ற செயல்களை ஒருவன் செய்யக்கூடாது.

657. பழியை மேற்கொண்டு இழிதொழில் செய்து பெறும் செல்வத்தைவிடச் சான்றோர் வினைத்தூய்மை யோடிருந்து பெறும் பொல்லாத வறுமையே சிறந்தது.

658. ஆகாதவை என விலக்கப்பட்ட செயல்களை விலக்கி விடாமல் மேற்கொண்டு செய்தவர்க்கு, அச் செயல்கள் நிறைவேறினாலும் துன்பமே கொடுக்கும்.

659. பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும்; நல்வழியில் வந்தவை இழக்கப்பட்டாலும் பிறகு பயன் தரும்.

660. வஞ்சனையான வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல், பச்சை மண்கலத்துள் நீரைவிட்டு அதைக் காப்பாற்றி வைத்தாற் போன்றது.

# 67. வினைத் திட்பம்

661 வினைத்-திட்பம் என்பது ஒருவன் மனத்-திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.

662 ஊறு-ஒரால், உற்ற-பின் ஒல்காமை; இவ்-இரண்டின்
ஆறு-என்பர், ஆய்ந்தவர் கோள்.

663 கடைக்-கொட்கச் செய்-தக்கது ஆண்மை; இடைக்-கெ
கொட்கின்,
எற்றா விழுமம் தரும்.

664 சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய-ஆம்,
சொல்லிய வண்ணம் செயல்.

665 வீறு-எய்தி மாண்டார் வினைத்-திட்பம்; வேந்தன்-கண்
ஊறு-எய்தி, உள்ளப்படும்.

666 எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப்-பெறின்.

667 உருவு-கண்டு எள்ளாமை வேண்டும்; உருள்-பெருந்-தேர்க்கு
அச்சு-ஆணி அன்னார் உடைத்து.

668 கலங்காது கண்ட வினைக்கண்; துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

669 துன்பம் உறவரினும் செய்க; துணிவு-ஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

670 எனைத்-திட்பம் எய்தியக்-கண்ணும், வினைத்-திட்பம்
வேண்டாரை வேண்டாது, உலகு.

661. ஒரு தொழிலின் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் திட்பமே (உறுதியே) ஆகும்; மற்றவை எல்லாம் வேறானவை.

662. இடையூறு வருவதற்கு முன்பே நீக்குதல், வந்தபின் தளராமை ஆகிய இந்த இரண்டினது வழியே வினைத் திட்பம் பற்றி ஆராய்ந்தவரின் கொள்கையாம்.

663. செய்யும் செயலை முடிவில் வெளிப்படும்படியாகச் செய்யும் தகுதியே ஆண்மையாகும்; இடையில் வெளிப்பட்டால் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

664. ‘இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம்’ என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம் ; சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

665. செயல் திறனால் பெருமை பெற்று உயர்ந்தவரின் வினைத் திட்பமானது, நாட்டை ஆளும் அரசனிடத்திலும் எட்டி மதிக்கப்பட்டு விளங்கும்.

666. எண்ணியவர் (எண்ணியபடியே செயல் ஆற்றுவதில்) உறுதியுடையவராக இருக்கப் பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

667. உருளும் பெரிய தேர்க்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய ஆணிபோன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

668. மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

669. (முடிவில்) இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற் கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

670. வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யும் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது.

# 68. வினை செயல் வகை

671 சூழ்ச்சி முடிவு துணிவு-எய்தல்; அத்-துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

672 தூங்குக, தூங்கிச் செயற்பால; தூங்கற்க,
தூங்காது செய்யும் வினை.

673 ஒல்லும்-வாய் எல்லாம் வினை-நன்றே; ஒல்லாக்கால்,
செல்லும்-வாய் நோக்கிச் செயல்.

674 வினை, பகை என்று-இரண்டின் எச்சம்; நினையுங்கால்,
தீ-எச்சம் போலத் தெறும்.

675 பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்
இருள்-தீர எண்ணிச் செயல்!

676 முடிவும், இடையூறும், முற்றியாங்கு-எய்தும்
படுபயனும், பார்த்துச் செயல்!

677 செய்வினை செய்வான்-செயல்முறை; அவ்-வினை
உள்-அறிவான் உள்ளம் கொளல்.

678 வினையான் வினை-ஆக்கிக்-கோடல்; நனை-கவுள்
யானையால் யானை யாத்தற்று.

679 நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக்-கொளல்.

680 உறை-சிறியார் உள்-நடுங்கல் அஞ்சி; குறை-பெறின்,
கொள்வர் பெரியார்ப்-பணிந்து.

671. ஆராய்ந்து எண்ணுவதற்கு எல்லை துணிவு கொள்வதே ஆகும். அவ்வாறு கொண்ட துணிவு காலந் தாழ்த்து நிற்பது குற்றமாகும்.

672. காலந்தாழ்த்துச் செய்யத் தக்கவற்றைக் காலந்தாழ்த்தே செய்யவேண்டும்; காலந்தாழ்க்காமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக்கூடாது.

673. இயலுமிடத்திலெல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது; இயலவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்யவேண்டும்.

674. செய்யத் தொடங்கிய செயல், கொண்ட பகை என்று இவ்விரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால், தீயின் குறைபோல் தெரியாமல் வளர்ந்து கெடுக்கும்.

675. வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

676. செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

677. செயலைச் செய்கின்றவன் செய்யவேண்டியமுறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடைய கருத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகும்.

678. ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக்கொள்ளல், ஒரு யானையால் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது.

679. பகைவராக உள்ளவரைப் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளல், நண்பர்க்கு உதவியானவற்றைச் செய்தலை விட விரைந்து செய்யத்தக்கதாகும்.

680. வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர் நடுங்குவதற்காகத் தாம் அஞ்சி, வேண்டியது கிடைக்குமானால் வலிமை மிக்கவரைப் பணிந்து ஏற்றுக் கொள்வார்.

# 69. தூது

681 அன்பு-உடைமை, ஆன்ற-குடிப்-பிறத்தல், வேந்து-அவாம்
பண்பு-உடைமை; தூது-உரைப்பான் பண்பு.

682 அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை; தூது-
உரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று.

683 நூலாருள் நூல்-வல்லன் ஆகுதல்; வேலாருள்
வென்றி வினை-உரைப்பான் பண்பு.

684 அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி; இம்-மூன்றன்
செறிவு-உடையான் செல்க, வினைக்கு.

685 தொகச்-சொல்லி, தூவாத-நீக்கி, நகச்-சொல்லி;
நன்றி பயப்பது ஆம், தூது.

686 கற்று, கண்-அஞ்சான், செலச்-சொல்லி, காலத்தால்-
தக்கது அறிவது-ஆம்; தூது.

687 கடன்-அறிந்து, காலம்-கருதி, இடன்-அறிந்து,
எண்ணி, உரைப்பான் தலை.

688 தூய்மை, துணைமை, துணிவு-உடைமை; இம்-மூன்றின்
வாய்மை வழி-உரைப்பான் பண்பு.

689 விடு-மாற்றம் வேந்தர்க்கு-உரைப்பான்; வடு-மாற்றம்
வாய்-சோரா வன்கணவன்.

690 இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு
உறுதி பயப்பது-ஆம்; தூது.

681. அன்புடையவனாதல், தகுதியான குடிப்பிறப்பு உடையவனாதல், அரசர் விரும்பும் சிறந்த பண்பு உடையவனாதல் அகிய இவை தூது உரைப்பவனுடைய தகுதிகள்.

682. அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாகும்.

683. அரசனிடம் சென்று தன் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான செயலைப்பற்றித் தூது உரைப்பவன் திறம், நூலறிந்தவருள் நூல் வல்லவனாக விளங்குதல் ஆகும்.

684. இயற்கை அறிவு, விரும்பத்தக்க தோற்றம், ஆராய்ச்சி உடைய கல்வி ஆகிய இம் மூன்றின் பொருத்தம் உடையவன் தூது உரைக்கும் தொழிலுக்குச் செல்லலாம்

685. பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், அவற்றுள் பயனற்றவைகளை நீக்கியும், மகிழுமாறு சொல்லியும் தன் தலைவனுக்கு நன்மை உண்டாக்குகின்றவன் தூதன்.

686. கற்பன கற்று, பிறருடைய பகையான பார்வைக்கு அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்லி, காலத்திற்குப் பொருத்தமானதை அறிகின்றவனே தூதன்.

687. தன் கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து, அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தை எதிர்நோக்கித் தக்க இடத்தையும் அறிந்து ஆராய்ந்து சொல்கின்றவனே தூதன்.

688. தூய ஒழுக்கம் உடையவனாதல், துணை உடையவனாதல், துணிவு உடையவனாதல் இந்த மூன்றும் வாய்த்திருத்தலே தூது உரைப்பவனுடைய தகுதியாகும்.

689. குற்றமான சொற்களை வாய் சோர்ந்தும் சொல்லாத உறுதி உடையவனே அரசன் சொல்லியனுப்பிய சொற்களை மற்ற வேந்தர்க்கு உரைக்கும் தகுதியுடையவன்.

690. தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும், அதற்காக அஞ்சி விட்டுவிடாமல், தன் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு செய்கின்றவனே தூதன்.

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

691 அகலாது, அணுகாது, தீக்-காய்வார் போல்க;
இகல்-வேந்தர்ச் சேர்ந்து-ஒழுகுவார்.

692 மன்னர் விழைப விழையாமை; மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்.

693 போற்றின் அரியவை போற்றல்; கடுத்த-பின்
தேற்றுதல், யார்க்கும் அரிது.

694 செவிச்-சொல்லும், சேர்ந்த-நகையும் அவித்து-ஒழுகல்;
ஆன்ற பெரியார் அகத்து!

695 எப்-பொருளும் ஓரார், தொடரார், மற்று அப்-பொருளை;
விட்டக்கால் கேட்க, மறை!

696 குறிப்பு-அறிந்து, காலம்-கருதி, வெறுப்பு-இல
வேண்டுப, வேட்பச் சொலல்!

697 வேட்பன சொல்லி, வினை-இல எஞ்ஞான்றும்
கேட்பினும், சொல்லா விடல்!

698 ‘இளையர், இன-முறையர்’ என்று-இகழார்; நின்ற-
ஒளியொடு ஒழுகப்படும்.

699 ‘கொளப்பட்டேம்’ என்று-எண்ணி, கொள்ளாத-செய்யார்;
துளக்கு-அற்ற காட்சியவர்.

700 பழையம் எனக்-கருதி, பண்பு-அல்ல-செய்யும்
கெழு-தகைமை; கேடு தரும்.

691. அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர், அவரை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர்போல இருக்க வேண்டும்.

692. அரசர் விரும்புகின்றவைகளைத் தாம் விரும்பாமலிருத்தல் (அரசரைச் சார்ந்திருப்பவர்க்கு) அரசரால் நிலையான ஆக்கத்தைப் பெற்றுத் தரும்.

693. (அரசரைச் சார்ந்தவர்) தம்மைக் காத்துக்கொள்ள விரும்பினால், அரிய தவறுகள் நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்; ஐயுற்றபின் அரசரைத் தெளிவித்தல் எவர்க்கும் முடியாது.

694. வல்லமை அமைந்த பெரியாரிடத்தில், (மற்றொருவன்) செவியை நெருங்கிச் சொல்லுதலும் உடன் சேர்ந்து நகைத்தலும் செய்யாமல் ஒழுக வேண்டும்.

695. (அரசர் மறைப்பொருள் பேசும்போது) எப்பொருளையும் உற்றுக்கேட்காமல், தொடர்ந்து வினவாமல், அப்பொருளை அவரே விட்டுச் சொன்னபோது கேட்டறிய வேண்டும்.

696. அரசருடைய குறிப்பை அறிந்து, தக்க காலத்தை எதிர் நோக்கி, வெறுப்பில்லாதவற்றையும் விருப்பமானவற்றையும் அவர் விரும்புமாறு சொல்ல வேண்டும்.

697. அரசர் விரும்புகின்றவற்றை மட்டும் சொல்லிப் பயனில்லாதவற்றை அவரே கேட்டபோதிலும் எப்போதும் சொல்லாமல் விட வேண்டும்.

698. (அரசனை) “எமக்கு இளையவர்; எமக்கு இன்ன முறை உடையவர்” என்று இகழாமல் அவருடைய நிலைக்கு ஏற்றவாறு அமைந்த புகழுடன் பொருந்த நடக்க வேண்டும்.

699. அசைவற்ற தெளிந்த அறிவினை உடையவர், யாம் அரசரால் விரும்பப்பட்டோம்‘ என்று எண்ணி அவர் விரும்பாதவற்றைச் செய்யமாட்டார்.

700. ‘யாம் அரசர்க்குப் பழைமையானவராய் உள்ளோம் எனக் கருதித் தகுதி அல்லாதவற்றைச் செய்யும் உரிமை கேட்டைத் தரும்.

## 71. குறிப்பு அறிதல்

701 கூறாமை நோக்கி, குறிப்பு-அறிவான்; எஞ்ஞான்றும்
மாறா-நீர் வையக்கு அணி.

702 ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்!

703 குறிப்பின் குறிப்பு-உணர்வாரை, உறுப்பினுள்
யாது-கொடுத்தும், கொளல்!

704 குறித்தது கூறாமைக் கொள்வாரொடு, ஏனை-
உறுப்பு ஓரனையரால், வேறு.

705 குறிப்பின் குறிப்பு-உணரா-ஆயின்; உறுப்பினுள்
என்ன-பயத்தவோ, கண்?

706 அடுத்தது காட்டும் பளிங்கு-போல்; நெஞ்சம்
கடுத்தது காட்டும், முகம்.

707 முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்,
காயினும், தான் முந்துறும்

708 முகம்-நோக்கி நிற்க அமையும்; அகம்-நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

709 பகைமையும், கேண்மையும் கண்-உரைக்கும்; கண்ணின்-
வகைமை உணர்வார்ப் பெறின்.

710 ‘நுண்ணியம்’ என்பார் அளக்கும்-கோல்; காணுங்கால்
கண் அல்லது, இல்லை பிற.

701. ஒருவர் சொல்லாமலே அவருடைய முகத்தை நோக்கி அவர் கருதிய குறிப்பை அறிகின்றவன் எப்போதும் உலகத்திற்கு ஓர் அணிகலன் ஆவான்.

702. ஐயப்படாமல் மனத்தில் உள்ளதை உணரவல்லவனை (அவன் மனிதனே ஆனாலும்) தெய்வத்தோடு ஒப்பாகக் கொள்ள வேண்டும்.

703. (முகம் கண் இவற்றின்) குறிப்புக்களால் உள்ளக் குறிப்பை உணர வல்லவரை நாட்டின் உறுப்புக்களுள் எதைக் கொடுத்தாவது துணையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

704. ஒருவன் மனத்தில் கருதியதை அவன் கூறாமலே அறிந்து கொள்ள வல்லவரோடு மற்றவர் உறுப்பால் ஒத்தவராக இருந்தாலும் அறிவால் வேறுபட்டவர் ஆவர்.

705. (முகம் கண் இவற்றின்) குறிப்புக்களால் உள்ளக் குறிப்பை உணராவிட்டால், ஒருவனுடைய உறுப்புக்களுள் கண்கள் என்ன பயன்படும்?

706. தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்கு போல். ஒருவனுடைய நெஞ்சத்தில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும்

707. ஒருவன் விருப்பம் கொண்டாலும் வெறுப்புக் கொண்டாலும், அவனுடைய முகம் முற்பட்டு அதைத் தெரிவிக்கும்; அம் முகத்தைவிட அறிவு மிக்கது உண்டோ?

708. உள்ளக் குறிப்பை நோக்கி உற்றதை உணரவல்லவரைப் பெற்றால், (அவரிடம் எதையும் கூறாமல்) அவருடைய முகத்தை நோக்கி நின்றால் போதும்.

709. கண்பார்வையின் வேறுபாடுகளை உணரவல்லவரைப் பெற்றால், (ஒருவனுடைய மனத்தில் உள்ள) பகையையும் நட்பையும் அவனுடைய கண்களே சொல்லிவிடும்.

710. யாம் நுட்பமான அறிவுடையேம் என்று பிறர் கருத்தை அறிபவரின் அளக்குங்கோல், ஆராய்ந்து பார்த்தால் அவருடைய கண்களே அல்லாமல் வேறு இல்லை.

# 72. அவை அறிதல்

711 அவை-அறிந்து, ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்!

712 இடை-தெரிந்து, நன்கு-உணர்ந்து, சொல்லுக; சொல்லின்
நடை-தெரிந்த நன்மையவர்!

713 அவை-அறியார், சொல்லல்-மேற்கொள்பவர்; சொல்லின்
வகை அறியார்; வல்லதூஉம் இல்.

714 ஒளியார்-முன் ஒள்ளியர் ஆதல்! வெளியார்-முன்
வான்-சுதை வண்ணம் கொளல்!

715 ‘நன்று’ என்றவற்றுள்ளும் நன்றே; முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

716 ஆற்றின் நிலை-தளர்ந்தற்றே; வியன்-புலம்-
ஏற்று, உணர்வார்-முன்னர் இழுக்கு.

717 கற்று-அறிந்தார் கல்வி விளங்கும்; கசடு-அற
சொல்-தெரிதல் வல்லார் அகத்து.

718 உணர்வது உடையார்-முன் சொல்லல்; வளர்வதன்
பாத்தியுள் நீர்-சொரிந்தற்று.

719 புல்-அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லுவார்!

720 அங்கணத்துள் உக்க அமிழ்து-அற்றால்; தம்-கணத்தர்
அல்லார்-முன் கோட்டி கொளல்!

711. சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக்களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

712. சொற்களின் நடையை ஆராய்ந்த நன்மை உடையவர், அவையின் செவ்வியை ஆராய்ந்து நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.

713. அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர், சொற்களின் வகை அறியாதவரே; அவர் சொல்லவல்லதும் இல்லை.

714. அறிவிற் சிறந்தவரின்முன் தாமும் அறிவிற் சிறந்தவராய்ப் பேச வேண்டும்; அறிவில்லாதவர் முன் தாமும் வெண் சுண்ணம்போல் அறிவில்லாதவராய் இருக்க வேண்டும்.

715. அறிவு மிகுந்தவரிடையே முந்திச் சென்று பேசாத அடக்கம் ஒருவனுக்கு நன்மை என்று சொல்லப்பட்டவை எல்லாவற்றிலும் நல்லது.

716. விரிவான அறிவுத்துறைகளை அறிந்து உணர்கின்றவரின் முன்னே குற்றப்படுதல், ஒழுக்கநெறியிலிருந்து நிலை தளர்ந்து கெடுவதைப் போன்றதாகும்.

717. குற்றமறச் செயல்களை ஆராய்வதில் வல்ல அறிஞரிடத்தில், பல நூல்களையும் கற்றறிந்தவரின் கல்வியானது நன்றாக விளங்கித் தோன்றும்.

718. தாமே உணர்கின்ற தன்மை உடையவரின் முன் கற்றவர் பேசுதல், தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிந்தாற் போன்றது.

719. நல்ல அறிஞரின் அவையில் நல்ல பொருளை மனத்தில் பதியுமாறு சொல்லவல்லவர், அறிவில்லாதவரின் கூட்டத்தில் மறந்தும் பேசக்கூடாது.

720. தம் இனத்தவர் அல்லாதவரின் கூட்டத்தின்முன் ஒரு பொருள் பற்றிப் பேசுதல், தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திய அமிழ்தம் போன்றது.

# 73. அவை அஞ்சாமை

721 வகை-அறிந்து, வல்-அவை, வாய்-சோரார்; சொல்லின்
தொகை-அறிந்த தூய்மையவர்.

722 கற்றாருள் கற்றார் எனப்படுவர்; கற்றார்-முன்
கற்ற செலச்-சொல்லுவார்.

723 பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சாதவர்.

724 கற்றார்-முன் கற்ற செலச்-சொல்லி, தாம்-கற்ற,
மிக்காருள், மிக்க கொளல்.

725 ஆற்றின், அளவு-அறிந்து கற்க; அவை-அஞ்சா
மாற்றம் கொடுத்தற்-பொருட்டு.

726 வாளொடு-என், வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடு-என்,
நுண்-அவை அஞ்சுபவர்க்கு?

727 பகையகத்துப் பேடி-கை ஒள்-வாள்; அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்.

728 பல்லவை கற்றும், பயம்-இலரே; நல்-அவையுள்
நன்கு செலச்-சொல்லாதார்.

729 'கல்லாதவரின் கடை' என்ப; 'கற்று-அறிந்தும்,
நல்லார் அவை-அஞ்சுவார்'.

730 உளர்-எனினும், இல்லாரொடு ஒப்பர்; களன்-அஞ்சி,
கற்ற செலச்-சொல்லாதார்.

721. சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர் அவைக்களத்தின் வகையினை அறிந்து, வல்லவரின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்லமாட்டார்.

722. கற்றவரின்முன் தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார்.

723. பகைவர் உள்ள போரக்களத்தில் (அஞ்சாமல் சென்று) சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர்; கற்றவரின் அவைக் களத்தில் அஞ்சாமல் பேசவல்லவர் சிலரே.

724. கற்றவரின்முன் தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லி, மிகுதியாகக் கற்றவரிடம் அம் மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.

725. அவையில் (ஒன்றைக் கேட்டவர்க்கு) அஞ்சாது விடை கூறும் பொருட்டாக நூல்களைக் கற்கும் நெறியில் அளவை நூல் அறிந்து கற்க வேண்டும்.

726. அஞ்சாத வீரர் அல்லாத மற்றவர்க்கு வாளோடு என்ன தொடர்பு உண்டு? நுண்ணறிவுடையவரின் அவைக்கு அஞ்சுகின்றவர்க்கு நூலோடு என்ன தொடர்பு உண்டு?

727. அவையினிடத்தில் அஞ்சுகின்றவன் கற்ற நூல், பகைவரின் போர்க்களத்தில் அஞ்சுகின்ற பேடியின் கையில் ஏந்திய கூர்மையான வாள் போன்றது.

728. நல்ல அறிஞரின் அவையில் நல்ல பொருளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்லமுடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

729. நூல்களைக் கற்றறிந்தபோதிலும் நல்ல அறிஞரின் அவைக்கு அஞ்சுகின்றவர், கல்லாதவரைவிடக் கடைப்பட்டவர் என்று கூறுவர்.

730. அவைக்களத்திற்கு அஞ்சித் தாம் கற்றவைகளை (கேட்பவர் மனத்தில்) பதியுமாறு சொல்லமுடியாதவர், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவர்க்கு ஒப்பாவர்.

# 74. நாடு

731 தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வு-இலாச்-
செல்வரும் சேர்வது; நாடு.

732 பெரும்-பொருளான் பெட்டக்கது-ஆகி, அருங்-கேட்டால்,
ஆற்ற விளைவது; நாடு.

733 பொறை-ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறை-ஒருங்கு நேர்வது; நாடு.

734 உறு-பசியும், ஓவாப்-பிணியும், செறு-பகையும்
சேராது-இயல்வது; நாடு.

735 பல்-குழுவும், பாழ்-செய்யும் உட்-பகையும், வேந்து-
அலைக்கும்
கொல்-குறும்பும் இல்லது; நாடு.

736 கேடு-அறியா, கெட்ட-இடத்தும் வளம்-குன்றா-
நாடு என்ப; நாட்டின் தலை.

737 இரு-புனலும், வாய்ந்த-மலையும், வரு-புனலும்,
வல்-அரணும்; நாட்டிற்கு உறுப்பு.

738 பிணி-இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்;
அணி-என்ப; நாட்டிற்கு இவ்-ஐந்து.

739 நாடு-என்ப, நாடா வளத்தன; நாடு-அல்ல,
நாட, வளம்-தரும் நாடு.

740 ஆங்கு-அமைவு எய்தியக்-கண்ணும் பயம்-இன்றே;
வேந்து-அமைவு இல்லாத நாடு.

731. குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

732. மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லாரும் விரும்பத்தக்கதாய், கேடு இல்லாததாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடாகும்.

733. (மற்ற நாட்டு மக்கள் குடியேறுவதால்) சுமை ஒரு சேரத் தன்மேல் வரும்போது தாங்கி, அரசனுக்கு இறைப்பொருள் முழுவதும் தரவல்லது நாடாகும்.

734. மிக்க பசியும், ஓயாத நோயும், (வெளியே இருந்துவந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

735. பலவகையாக மாறுபடும் கூட்டங்களும், உடனிருந்தே அழிவு செய்யும் பகையும், அரசனை வருத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது நாடு.

736. பகைவரால் கெடுக்கப்படாததாய், கெட்டுவிட்ட காலத்திலும் வளம் குன்றாததாய், உள்ள நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலையானது என்று கூறுவர்.

737. ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர்வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாம்.

738. நோயில்லாதிருத்தல், செல்வம், விளை பொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

739. முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர்; தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் அல்ல,

740. நல்ல அரசன் பொருந்தாத நாடு, மேற்சொன்ன நன்மைகள் எல்லாம் அமைந்திருந்த போதிலும் அவற்றால் பயன் இல்லாமற் போகும்.

# 75. அரண்

741 ஆற்றுபவர்க்கும் அரண்-பொருள்; அஞ்சித் தற்-
போற்றுபவர்க்கும் பொருள்.

742 மணி-நீரும், மண்ணும், மலையும், அணி-நிழல்-
காடும் உடையது; அரண்.

743 ‘உயர்வு, அகலம், திண்மை, அருமை; இந்-நான்கின்
அமைவு-அரண்’ என்று-உரைக்கும் நூல்.

744 சிறு-காப்பின் பேர்-இடத்தது-ஆகி, உறு-பகை
ஊக்கம் அழிப்பது; அரண்.

745 கொளற்கு-அரிதாய், கொண்ட-கூழ்த்து-ஆகி, அகத்தார்
நிலைக்கு-எளிது-ஆம் நீரது; அரண்.

746 எல்லாப்-பொருளும் உடைத்தாய், இடத்து-உதவும்
நல்-ஆள் உடையது; அரண்.

747 முற்றியும், முற்றாது-எறிந்தும், அறைப்படுத்தும்,
பற்றற்கு அரியது; அரண்.

748 முற்று-ஆற்றி முற்றியவரையும், பற்று-ஆற்றி,
பற்றியார் வெல்வது; அரண்.

749 முனை-முகத்து மாற்றலர் சாய, வினை-முகத்து
வீறு-எய்தி மாண்டது; அரண்.

750 எனை-மாட்சித்து ஆகியக்-கண்ணும், வினை-மாட்சி-
இல்லார்கண் இல்லது; அரண்.

741. (படையெடுத்துப்) போர்செய்யச் செல்பவர்க்கும் அரண் சிறந்ததாகும்; (படையெடுத்தவர்க்கு) அஞ்சித் தன்னைப் புகலிடமாக அடைந்தவர்க்கும் அது சிறந்ததாகும்.

742. மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உடையதே அரண் ஆகும்.

743. உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க முடியாத அருமை ஆகிய நான்கும் அமைந்திருப்பதே அரண் என்று நூலோர் கூறுவர்.

744. காக்கவேண்டிய இடம் சிறியதாய், மற்ற இடம் பெரிய பரப்புள்ளதாய், தன்னை எதிர்த்து வந்த பகைவருடைய ஊக்கத்தை அழிக்கவல்லது அரண் ஆகும்

745. பகைவரால் கைப்பற்றப்படுவதற்கு முடியாததாய், தன்னிடம் உணவுப்பொருள் கொண்டதாய், உள்ளிருப்போர் நிலைத்திருப்பதற்கு எளியதாகிய தன்மை உடையது அரண்.

746. தன்னிடம் உள்ளவர்க்கு (வேண்டிய) எல்லாப் பொருளும் உடையதாய், போர் நெருக்கடியானவிடத்தில் உதவ வல்ல நல்ல வீரர்களை உடையது அரண் ஆகும்.

747. முற்றுகையிட்டும், முற்றுகையிடாமல் போர் செய்தும், வஞ்சனை செய்தும் எப்படியும் பகைவரால் கைப்பற்ற முடியாத அருமை உடையது அரண் ஆகும்.

748. முற்றுகையிடுவதில் வல்லமை கொண்டு முற்றுகை இட்டவரையும் (உள்ளிருந்தவர் பற்றிய) பற்றை விடாமலிருந்து வெல்வதற்கு உரியது அரண் ஆகும்.

749. போர்முனையில் பகைவர் அழியும்படியாக (உள்ளிருந்தவர் செய்யும்) போர்ச் செயல் வகையால் பெருமை பெற்றுச் சிறப்புடையதாய் விளங்குவது அரண் ஆகும்.

750. எத்தகைய பெருமைகளை உடையதாக இருந்த போதிலும், செயல்வகையால் சிறப்பு இல்லாதவரிடத்தில் அரண் பயனில்லாததாகும்.

# 76. பொருள் செயல் வகை

751 பொருள்-அல்லவரைப் பொருளாகச்-செய்யும்
பொருள்-அல்லது, இல்லை பொருள்.

752 இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர், சிறப்பு.

753 பொருள்-என்னும் பொய்யா-விளக்கம்; இருள்-அறுக்கும்
எண்ணிய தேயத்துச்-சென்று.

754 அறன்-ஈனும்; இன்பமும்-ஈனும்; திறன்-அறிந்து,
தீது-இன்றி வந்த பொருள்.

755 அருளொடும், அன்பொடும் வாராப்-பொருள்-ஆக்கம்
புல்லார், புரள விடல்!

756 உறு-பொருளும், உல்கு-பொருளும், தன்-ஒன்னார்த்-
தெறு-பொருளும்; வேந்தன் பொருள்.

757 அருள்-என்னும் அன்பு-ஈன்-குழவி; பொருள்-என்னும்
செல்வச் செவிலியால், உண்டு.

758 குன்று-ஏறி, யானைப்-போர் கண்டற்றால்; தன்-கைத்து-
ஒன்று
உண்டாகச் செய்வான் வினை.

759 செய்க பொருளை! செறுநர் செருக்கு-அறுக்கும்
எஃகு அதனின்-கூரியது இல்.

760 ஒண்-பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு; எண்-பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

751. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை.

752. பொருள் இல்லாதவரை (வேறு நன்மை உடையவராக இருந்தாலும்) எல்லாரும் இகழ்வர்; செல்வரை (வேறு நன்மை இல்லாவிட்டாலும்) எல்லாரும் சிறப்புச் செய்வர்.

753. பொருள் என்று சொல்லப்படுகின்ற நந்தாவிளக்கு, நினைத்த இடத்திற்குச் சென்று உள்ள இடையூற்றைக் கெடுக்கும்.

754. சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும்.

755. அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும்.

756. இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறமையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.

757. அன்பினால் பெறப்பட்ட அருள் என்று கூறப்படும் குழந்தை, பொருள் என்று கூறப்படும் செல்வமுள்ள செவிலித் தாயால் வளர்வதாகும்.

758. தன் கைப்பொருள் ஒன்று தன்னிடம் இருக்க அதைக் கொண்டு ஒருவன் செயல் செய்தல், மலையின்மேல் ஏறி, யானைப் போரைக் கண்டாற் போன்றது.

759. ஒருவன் பொருளை ஈட்டவேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை.

760. சிறந்ததாகிய பொருளை மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்ற அறமும் இன்பமுமாகிய இரண்டும் ஒருசேரக் கை கூடும் எளிய பொருளாகும்.

# 77. படை

761 உறுப்பு-அமைந்து, ஊறு-அஞ்சா, வெல்-படை; வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

762 உலைவு-இடத்து ஊறு-அஞ்சா வன்கண்; தொலைவு-
இடத்து
தொல்-படைக்கு அல்லால், அரிது.

763 ஒலித்தக்கால் என்-ஆம், உவரி எலிப்பகை?
நாகம் உயிர்ப்ப, கெடும்.

764 அழிவு-இன்று, அறை-போகாது-ஆகி, வழி-வந்த
வன்கண்-அதுவே; படை.

765 கூற்று-உடன்று மேல்-வரினும், கூடி, எதிர்-நிற்கும்
ஆற்றல்-அதுவே; படை.

766 மறம், மானம், மாண்ட-வழிச்-செலவு, தேற்றம்;
என-நான்கே ஏமம், படைக்கு.

767 தார்-தாங்கிச் செல்வது தானை; தலைவந்த
போர்-தாங்கும் தன்மை அறிந்து.

768 அடல்-தகையும், ஆற்றலும், இல்-எனினும்; தானை
படைத்-தகையான் பாடு-பெறும்.

769 சிறுமையும், செல்லாத்-துனியும், வறுமையும்
இல்லாயின்; வெல்லும் படை.

770 நிலை-மக்கள் சால-உடைத்து எனினும்; தானை
தலை-மக்கள் இல்வழி இல்.

761. எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

762. போரில் அழிவு வந்தவிடத்தில் வலிமை குன்றினாலும் இடையூறுகளுக்கு அஞ்சாத அஞ்சாமை தொன்றுதொட்டுப் பெருமை உடைய படைக்கு அல்லாமல் முடியாது.

763. எலியாகிய பகை கூடிக் கடல்போல் ஒலித்தாலும் என்ன தீங்கு ஏற்படும்? பாம்பு மூச்சு விட்ட அளவில் அவை கெட்டழியும்.

764. (போர்முனையில்) அழிவு இல்லாததாய், (பகைவருடைய) வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

765. எமனே சினங்கொண்டு தன்மேல் எதிர்த்து வந்தாலும், ஒன்றாகத் திரண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதே படையாகும்.

766. வீரம், மானம், சிறந்த வழியில்நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

767. தன்மேல் எதிர்த்துவந்த பகைவரின் போரைத் தாங்கி, வெல்லும் தன்மை அறிந்து, அவருடைய தூசிப்படையை எதிர்த்துச் செல்லவல்லதே படையாகும்.

768. பகைவரை எதிர்க்கும் வீரத்தை மிக்க ஆண்மை என்று கூறுவர்; ஒரு துன்பம் வந்தபோது பகைவர்க்கும் உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

769. போர் செய்யும் வீரமும் (எதிர்ப்பைத் தாங்கும்) ஆற்றலும் இல்லையானாலும் படை தன்னுடைய அணி வகுப்பால் பெருமை பெறும்.

770. தன் அளவு சிறிதாகத் தேய்தலும், தலைவரிடம் நீங்காத வெறுப்பும் வறுமையும் இல்லாதிருக்குமானால் அத்தகைய படை வெற்றிபெறும்.

# 78. படைச் செருக்கு

771 என்னை முன்-நில்லன்-மின் தெவ்விர்! பலர், என்னை
முன்-நின்று கல் நின்றவர்.

772 கான முயல்-எய்த அம்பினில்; யானை
பிழைத்த-வேல் ஏந்தல் இனிது.

773 பேர்-ஆண்மை என்ப, தறுகண்; ஒன்று-உற்றக்கால்,
ஊராண்மை மற்று-அதன் எஃகு.

774 கை-வேல் களிற்றொடு-போக்கி வருபவன்
மெய்-வேல் பறியா, நகும்.

775 விழித்த-கண் வேல்-கொண்டு-எறிய; அழித்து-இமைப்பின்
ஓட்டு-அன்றோ, வன்கணவர்க்கு?

776 விழுப்புண் படாத-நாள்-எல்லாம்; வழுக்கினுள்-
வைக்கும், தன்-நாளை எடுத்து.

777 சுழலும் இசை-வேண்டி, வேண்டா-உயிரார்
கழல்-யாப்புக்-காரிகை நீர்த்து.

778 உறின், உயிர்-அஞ்சா-மறவர்; இறைவன்-
செறினும், சீர்-குன்றல்-இலர்.

779 இழைத்தது இகவாமைச் சாவாரை; யாரே
பிழைத்தது ஒறுக்கிற்-பவர்?

780 புரந்தார்-கண் நீர்-மல்கச் சாகிற்-பின்; சாக்காடு
இரந்து-கோள் தக்கது உடைத்து.

771. நெடுங்காலமாக நிலைத்திருக்கும் வீரர் பலரை உடையதே ஆனாலும், தலைமை தாங்கும் தலைவர் இல்லாதபோது படைக்குப் பெருமை இல்லையாகும்.

772. பகைவரே! என்னுடைய தலைவன்முன் எதிர்த்து நிற்காதீர்கள்; என்னுடைய தலைவன்முன் எதிர்த்து நின்று மடிந்து கல்வடிவாய் நின்றவர் பலர்.

773. காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறிதவறாமல் எய்த அம்பை ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானை மேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது.

774. கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, வேறு வேல் தேடி வருகின்றவன் தன் மார்பில்பட்டிருந்த வேலைக் கண்டு பறித்து மகிழ்கின்றான்.

775. பகைவரைச் சினந்து நோக்கிய கண், அவர் வேலைக் கொண்டு எறிந்தபோது மூடி இமைக்குமானாலும், அது வீரமுடையவர்க்குத் தோல்வி அன்றோ?

776. வீரன் கழிந்த தன் நாட்களைக் கணக்கிட்டு விழுப்புண் படாத நாட்களை எல்லாம் பயன்படாமல் தவறிய நாட்களுள் சேர்ப்பான்.

777. பரந்து நிற்கும் புகழை விரும்பி, உயிர்வாழ்வையும் விரும்பாத வீரர், வீரக் கழலைக் காலில் கட்டிக் கொள்ளுதல் அழகு செய்யும் தன்மையுடையதாகும்.

778. போர் வந்தாலும் உயிரின் பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவார்.

779. தாம் உரைத்த சூள் தவறாதபடி போர்செய்து சாகவல்லவரை, அவர் செய்த பிழைக்காகத் தண்டிக்க வல்லவர் யார்?

780. தம்மைக் காத்த தலைவருடைய கண்கள் நீர் பெருக்குமாறு சாகப் பெற்றால், சாவு இரந்தாவது பெற்றுக் கொள்ளத் தக்க பெருமை உடையதாகும்.

# 79. நட்பு

781 செயற்கு-அரிய யா-உள, நட்பின்? அதுபோல்
வினைக்கு-அரிய யா-உள, காப்பு?

782 நிறை-நீர, நீரவர்-கேண்மை பிறை; மதிப்-
பின்-நீர, பேதையார் நட்பு.

783 நவில்தொறும் நூல்-நயம்-போலும்; பயில்தொறும்
பண்பு-உடையாளர் தொடர்பு.

784 நகுதற்-பொருட்டு-அன்று, நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்-பொருட்டு.

785 புணர்ச்சி, பழகுதல் வேண்டா; உணர்ச்சி-தான்
நட்பு-ஆம் கிழமை தரும்.

786 முகம்-நக, நட்பது நட்பு-அன்று; நெஞ்சத்து
அகம்-நக நட்பது, நட்பு.

787 அழிவினவை-நீக்கி, ஆறு-உய்த்து, அழிவின்கண்
அல்லல் உழப்பது-ஆம்; நட்பு.

788 உடுக்கை இழந்தவன் கை-போல, ஆங்கே
இடுக்கண் களைவது-ஆம்; நட்பு.

789 ‘நட்பிற்கு வீற்றிருக்கை யாது?’ எனின்; கொட்பு-இன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

790 ‘இனையர், இவர்-எமக்கு; இன்னம்-யாம்’ என்று
புனையினும் புல்லென்னும்-நட்பு.

781. நட்பைப்போல் செய்துகொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?

782. அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்துவருதல் போன்ற தன்மையுடையன; அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின்செல்லுதல் போன்ற தன்மையுடையன.

783. பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.

784. நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று; நண்பர் நெறி கடந்து சொல்லும்போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

785. நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை; ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

786. முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புகொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

787. அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

788. உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

789. நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும்போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

790. ‘இவர், எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத்தன்மையுடையேம்‘ என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பிழந்துவிடும்.

# 80. நட்பு ஆராய்தல்

791 நாடாது நட்டலின் கேடு-இல்லை; நட்ட-பின்
வீடு-இல்லை, நட்பு-ஆள்பவர்க்கு.

792 ஆய்ந்து-ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை; கடைமுறை
தான்-சாம் துயரம் தரும்.

793 குணனும், குடிமையும், குற்றமும், குன்றா-
இனனும்; அறிந்து யாக்க நட்பு.

794 குடிப்-பிறந்து, தன்கண் பழி-நாணுவானை;
கொடுத்தும் கொளல்-வேண்டும், நட்பு.

795 அழச்-சொல்லி, அல்லது-இடித்து, வழக்கு-அறிய-
வல்லார்; நட்பு, ஆய்ந்து-கொளல்!

796 கேட்டினும் உண்டு, ஓர்-உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பது ஓர்-கோல்.

797 ஊதியம் என்பது ஒருவற்கு; பேதையார்-
கேண்மை ஒரீஇ-விடல்.

798 உள்ளற்க, உள்ளம் சிறுகுவ! கொள்ளற்க,
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு!

799 கெடும்-காலைக் கைவிடுவார் கேண்மை; அடும்-காலை
உள்ளினும், உள்ளம் சுடும்.

800 மருவுக, மாசு-அற்றார் கேண்மை! ஒன்று-ஈத்தும்
ஒருவுக, ஒப்பு-இலார் நட்பு!

791. நட்புச் செய்தபிறகு நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை; ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போல் கெடுதியானது வேறு இல்லை.

792. ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்.

793. ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக் கொள்ளவேண்டும்.

794. உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வரக்கூடிய பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ளவேண்டும்,.

795. நன்மையில்லாத செயலைக் கண்டபோது வருந்தும் படியாக இடித்துச் சொல்லி, உலக நடையை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

796. கேடு வந்தபோதும் ஒருவகை நன்மை உண்டு; அக்கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதொரு கோலாகும்.

797. ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது, அறிவில்லாதவருடன் செய்துகொண்ட நட்பிலிருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்,

798. ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்கவேண்டும்; அதுபோல் துன்பம் வந்த போது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

799. கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

800. குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ளவேண்டும்; ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிடவேண்டும்.

# 81. பழைமை

801 ‘பழைமை எனப்படுவது யாது?’ எனின்; யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

802 நட்பிற்கு உறுப்பு, கெழுதகைமை; மற்று-அதற்கு
உப்பு-ஆதல், சான்றோர் கடன்.

803 பழகிய நட்பு எவன்-செய்யும்? கெழுதகைமை
செய்தாங்கு அமையாக்கடை?

804 விழைதகையான் வேண்டி-இருப்பர்; கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்.

805 பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்று உணர்க;
நோ-தக்க நட்டார் செயின்!

806 எல்லைக்கண் நின்றார் துறவார்; தொலைவிடத்தும்,
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

807 அழிவந்த செய்யினும், அன்பு-அறார்; அன்பின்
வழிவந்த கேண்மையவர்.

808 கேள்-இழுக்கம் கேளாக்-கெழுதகைமை வல்லார்க்கு-
நாள், இழுக்கம் நட்டார் செயின்.

809 கெடாஅர், வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும், உலகு.

810 விழையார் விழையப்படுப; பழையார்கண்
பண்பின் தலைப்பிரியாதார்.

801. பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினவினால் அது பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

802. நட்பிற்கு உறுப்பாவது நண்பருடைய உரிமைச் செயலாகும்; அந்த உரிமைச் செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோரின் கடமையாகும்.

803. பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவே கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்?

804. உரிமையால் கேளாமலே நண்பர் ஒன்றைச் செய்தால், அந்த உரிமையைப் போற்றி விரும்பும் தன்மையோடு அச்செயலையும் விரும்பி உடன்பட்டிருப்பர் அறிஞர்.

805. வருந்தத்தக்க செயல்களை நண்பர் செய்தால் அதற்குக் காரணம், அறியாமை என்றாவது மிகுந்த உரிமை என்றாவது உணரவேண்டும்.

806. உரிமைவாழ்வின் எல்லையில் நின்றவர், தமக்கு அழிவு நேர்ந்தவிடத்திலும் பழைமையாய் உறவுகொண்டு நின்றவரின் தொடர்பைக் கைவிடமாட்டார்.

807. அன்புடன் தொன்றுதொட்டு வந்த உறவை உடையவர், அழிவு தரும் செயல்களைப் பழகியவர் செய்த போதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பார்.

808. பழகிய நண்பர் செய்த தவறு பற்றிப் பிறர் சொன்னாலும் கேளாமலிருக்கும் உரிமை வல்லவர்க்கு, அந் நண்பர் தவறு செய்வாரானால் அது பயனுள்ள நாளாகும்.

809. உரிமை கெடாமல் தொன்றுதொட்டு வந்த உறவு உடையவரின் தொடர்பைக் கைவிடாதவரை உலகம் விரும்பிப் போற்றும்.

810. (தவறு செய்தபோதிலும்) பழகிய நண்பரிடத்தில் தம் உரிமைப் பண்பிலிருந்து மாறாதவர், தம் பகைவராலும் விரும்பப்படுதற்குரிய சிறப்பை அடைவர்.

# 82. தீ நட்பு

811 பருகுவார் போலினும், பண்பு-இலார் கேண்மை
பெருகலின், குன்றல் இனிது.

812 உறின்-நட்டு, அறின் ஒரூ-உம் ஒப்பு-இலார் கேண்மை
பெறினும், இழப்பினும், என்?

813 உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது
கொள்வாரும், கள்வரும் நேர்.

814 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா; மா-அன்னார்
தமரின், தனிமை தலை.

815 செய்து-ஏமம் சாரா, சிறியவர் புன்-கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

816 பேதை பெருங்-கெழீஇ நட்பின்; அறிவு-உடையார்
ஏதின்மை, கோடி உறும்.

817 நகை-வகையர் ஆகிய நட்பின்; பகைவரான்
பத்து-அடுத்த கோடி உறும்.

818 ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
சொல்லாடார், சோரவிடல்!

819 கனவினும் இன்னாது மன்னோ; வினைவேறு,
சொல்-வேறு பட்டார் தொடர்பு!

820 எனைத்தும் குறுகுதல் ஓம்பல்; மனைக்-கெழீஇ,
மன்றில் பழிப்பார் தொடர்பு!

811. அன்பு மிகுதியால் பருகுவார்போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதைவிடத் தேய்ந்து குறைவது நல்லது.

812. தமக்குப் பயன் உள்ளபோது நட்புச் செய்து, பயன் இல்லாதபோது நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றாலும் என்ன? இழந்தாலும் என்ன?

813. கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பைக் கொள்ளாமல் பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலைமகளிரும், கள்வரும் ஒரு நிகரானவர்.

814. போர் வந்தபோது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவைவிட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது.

815. காவல் செய்து வைத்தாலும் காவல் ஆகாத கீழ்மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதைவிட ஏற்படாமலிருப்பதே நன்மையாகும்.

816. அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பைவிட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்.

817. (அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பைவிட, பகைவரால் வருவன பத்துக்கோடி மடங்கு நன்மையாகும்.

818. முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் சொல்லாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.

819. செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

820. தனியே வீட்டில் உள்ளபோது பொருந்தியிருந்து, பலர் கூடிய மன்றத்தில் பழித்துப் பேசுவோரின் நட்பை எவ்வளவு சிறிய அளவிலும் அணுகாமல் விடவேண்டும்.

# 83. கூடா நட்பு

821 சீர்-இடம்-காணின், எறிதற்குப் பட்டடை;
நேரா நிரந்தவர் நட்பு.

822 இனம்-போன்று இனம்-அல்லார் கேண்மை; மகளிர்
மனம்-போல, வேறுபடும்.

823 பல-நல்ல கற்றக்-கடைத்தும்; மனம்-நல்லர்-
ஆகுதல், மாணார்க்கு அரிது.

824 முகத்தின் இனிய நகாஅ; அகத்து-இன்னா
வஞ்சரை அஞ்சப்படும்.

825 மனத்தின் அமையாதவரை, எனைத்து-ஒன்றும்,
சொல்லினான் தேறற்பாற்று அன்று.

826 நட்டார்போல் நல்லவை சொல்லினும்; ஒட்டார்-சொல்
ஒல்லை உணரப்படும்.

827 சொல்-வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்-வணக்கம்
தீங்கு குறித்தமையான்!

828 தொழுத கையுள்ளும் படை-ஒடுங்கும்; ஒன்னார்
அழுத கண்ணீரும், அனைத்து.

829 மிகச்-செய்து, தம்-எள்ளுவாரை நகச்-செய்து,
நட்பினுள் சாப்-புல்லற்பாற்று.

830 பகை நட்பு-ஆம், காலம்-வருங்கால்; முகம்-நட்டு,
அகம்-நட்பு ஒரீஇ-விடல்!

821. அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும்.

822. இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம்போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்.

823. பல நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தபோதிலும், அவற்றின் பயனாக நல்ல மனம் உடையவராகப் பழகுதல், (உள்ளன்பினால்) மாட்சியடையாதவர்க்கு இல்லை.

824. முகத்தால் இனிமையாகச் சிரித்துப் பழகி அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்வதற்கு அஞ்சவேண்டும்.

825. மனத்தால் தம்மொடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர் கூறுகின்ற சொல்லைக் கொண்டு எத்தகைய ஒரு செயலிலும் நம்பித் தெளியக்கூடாது.

826. நண்பர்போல் நன்மையானவற்றைச் சொன்ன போதிலும் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மைத் தன்மை விரையில் உணரப்படும்.

827. வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்தலைக் குறித்தமையால், பகைவரிடத்திலும் அவருடைய சொல்லின் வணக்கத்தை நன்மையாகக் கொள்ளக்கூடாது.

828. பகைவர் வணங்கித் தொழுத கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும்; பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையானதே.

829. புறத்தே மிகுதியாக நட்புத் தோன்றச் செய்து அகத்தில் இகழ்கின்றவரைத், தாமும் அந் நட்பில் நகைத்து மகிழுமாறு செய்து அத்தொடர்பு சாகுமாறு நடக்கவேண்டும்.

830. பகைவர் நண்பராகும் காலம் வரும்போது முகத்தளவில் நட்புக்கொண்டு அகத்தில் நட்பு நீங்கி வாய்ப்புக் கிடைத்தபோது அதையும் விடவேண்டும்.

# 84. பேதைமை

831 பேதைமை என்பது ஒன்று; 'யாது?' எனின்; ஏதம்-கொண்டு,
ஊதியம் போகவிடல்.

832 பேதைமையுள் எல்லாம் பேதைமை; காதன்மை
கை அல்ல-தன்கண் செயல்.

833 நாணாமை, நாடாமை, நார்-இன்மை, யாது-ஒன்றும்
பேணாமை; பேதை தொழில்.

834 ஓதி-உணர்ந்தும், பிறர்க்கு-உரைத்தும், தான்-அடங்காப்
பேதையின், பேதையார் இல்.

835 ஒருமைச்-செயல்-ஆற்றும், பேதை; எழுமையும்
தான்-புக்கு-அழுந்தும் அளறு!

836 பொய்படும் ஒன்றோ; புனை பூணும்; கை-அறியாப்
பேதை வினை மேற்கொளின்.

837 ஏதிலார் ஆர, தமர்-பசிப்பர்; பேதை
பெருஞ்-செல்வம் உற்றக்கடை.

838 மையல் ஒருவன் களித்தற்றால்; பேதை-தன்
கை-ஒன்று உடைமை பெறின்.

839 பெரிது-இனிது, பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை-தருவது ஒன்று-இல்!

840 கழாஅக் கால். பள்ளியுள் வைத்தற்றால்; சான்றோர்
குழா-அத்துப் பேதை புகல்.

831. பேதைமை என்று சொல்லப்படுவது யாது என்றால், தனக்குக் கெடுதியானதைக் கைக்கொண்டு ஊதியமானதைக் கைவிடுதலாகும்.

832. ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை, தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் தன் விருப்பத்தைச் செலுத்துதலாகும்.

833. தகாதவற்றிற்கு நாணாமலிருத்தல், தக்கவற்றை நாடாமலிருத்தல், அன்பு இல்லாமை, நன்மை ஒன்றையும் விரும்பாமை அகியவை பேதையின் தொழில்கள்.

834. நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும், பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதைபோல் வேறு பேதையர் இல்லை.

835. எழுபிறப்பிலும் தான் புகுந்து அழுந்துவதற்கு உரிய நரகத் துன்பத்தைப் பேதை தன் ஒரு பிறவியில் செய்து கொள்ள வல்லவனாவான்.

836. ஒழுக்கநெறி அறியாத பேதை ஒரு செயலை மேற் கொண்டால் (அந்தச் செயல் முடிவுபெறாமல்) பொய்படும்; அன்றியும் அவன் குற்றவாளியாகித் தளை பூணுவான்.

837. பேதை பெருஞ் செல்வம் அடைந்தபோது, (அவனோடு தொடர்பில்லாத) அயலார் நிறைய நன்மை பெற. அவனுடைய சுற்றத்தார் பசியால் வருந்துவர்.

838. பேதை தன் கையில் ஒரு பொருள் பெற்றால் (அவன் நிலைமை) பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்து மயங்கினாற் போலாகும்.

839. பேதையரிடமிருந்து பிரிவு நேர்ந்தபோது, அப்பிரிவு துன்பம் ஒன்றும் தருவதில்லை. ஆகையால் பேதையருடன் கொள்ளும் நட்பு மிக இனியதாகும்.

840. சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்தாற் போன்றது.

# 85. புல்லறிவு ஆண்மை

841 அறிவு-இன்மை, இன்மையுள் இன்மை; பிறிது-இன்மை
இன்மையா வையாது, உலகு.

842 அறிவு-இலான் நெஞ்சு-உவந்து-ஈதல், பிறிது-யாதும்
இல்லை; பெறுவான் தவம்.

843 அறிவு-இலார் தாம்-தம்மைப் பீழிக்கும் பீழை;
செறுவார்க்கும் செய்தல் அரிது.

844 ‘வெண்மை எனப்படுவது யாது?’ எனின்; ‘ஒண்மை
உடையம் யாம்!’ என்னும் செருக்கு.

845 கல்லாத மேற்கொண்டு ஒழுகல்; கசடு-அற
வல்லதூஉம், ஐயம் தரும்.

846 அற்றம் மறைத்தலோ புல்லறிவு; தம்வயின்
குற்றம் மறையா-வழி.

847 அரு-மறை சோரும் அறிவு-இலான் செய்யும்,
பெரு-மிறை, தானே தனக்கு.

848 ஏவவும் செய்கலான்; தான் தேறான்; அவ்-உயிர்
போஒம் அளவும் ஓர்-நோய்.

849 காணாதாற் காட்டுவான் தான்-காணான்; காணாதான்
கண்டான் ஆம், தான்-கண்ட-ஆறு.

850 உலகத்தார், ‘உண்டு’ என்பது ‘இல்’ என்பான்; வையத்து
அலகையா வைக்கப்படும்.

841. அறிவில்லாமையே இல்லாமை பலவற்றுள்ளும் கொடிய இல்லாமையாகும்; மற்ற இல்லாமைகளை உலகம் அத்தகைய இல்லாமையாகக் கருதாது.

842. அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைக் கொடுத்தலுக்குக் காரணம், வேறொன்றும் இல்லை; அந்தப் பொருளைப் பெறுகின்றவனுடைய நல்வினையே ஆகும்.

843. அறிவில்லாதவர் தம்மைத் தாமே துன்புறுத்தும் துன்பம் அவருடைய பகைவர்க்கும் செய்ய முடியாத அளவினதாகும்.

844. புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது என்றால், 'யாம் அறிவுடையேம்' என்று ஒருவன் தன்னைத்தானே மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

845. அறிவில்லாதவர் தாம் கல்லாத நூல்களையும் கற்றவர் போல் மேற்கொண்டு நடத்தல், அவர் குற்றமறக் கற்றுவல்ல பொருளைப் பற்றியும் மற்றவர்க்கு ஐயம் உண்டாக்கும்.

846. தம்மிடத்தில் உள்ள குற்றத்தை அறிந்து நீக்காத போது, உடம்பில் மறைப்பதற்குரிய பகுதியை மட்டும் ஆடையால் மறைத்தல் புல்லறிவாகும்.

847. அரிய மறைபொருளை மனத்தில் வைத்துக் காக்காமல் சோர்ந்து வெளிப்படுத்தும் அறிவில்லாதவன் தனக்குத் தானே பெருந்தீங்கு செய்துகொள்வான்.

848. தனக்கு நன்மையானவற்றைப் பிறர் ஏவினாலும் செய்யாதவனாய், தானாகவும் உணர்ந்து தெளியாதவனாய் உள்ளவனுடைய உயிர் போகுமளவும் ஒரு நோயாகும்.

849. அறிவு இல்லாதவனுக்கு அறிவிப்பான் தானே அறிவில்லாதவனாய் நிற்பான்; அறிவு இல்லாதவனோ தான் அறிந்த வகையால் அறிவுள்ளவனாய்த் தோன்றுவான்.

850. உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்ற ஒருவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகக் கருதி விலக்கப்படுவான்.

# 86. இகல்

851 இகல்-என்ப; எல்லா உயிர்க்கும் பகல்-என்னும்
பண்பு-இன்மை பாரிக்கும் நோய்.

852 பகல்-கருதிப் பற்றா-செயினும்; இகல்-கருதி,
இன்னா-செய்யாமை தலை.

853 இகல்-என்னும் எவ்வ-நோய்-நீக்கின்; தவல்-இல்லாத்
தா-இல் விளக்கம் தரும்.

854 இன்பத்துள் இன்பம் பயக்கும்; இகல்-என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

855 இகல் எதிர்-சாய்ந்து ஒழுக-வல்லாரை, யாரே,
மிகல்-ஊக்கும் தன்மையவர்?

856 இகலின் மிகல்-இனிது என்பவன் வாழ்க்கை;
தவலும், கெடலும் நணித்து.

857 மிகல்-மேவல் மெய்ப்-பொருள் காணார்; இகல்-மேவல்
இன்னா அறிவினவர்.

858 இகலிற்கு எதிர்-சாய்தல் ஆக்கம்; அதனை
மிகல்-ஊக்கின், ஊக்குமாம் கேடு.

859 இகல்-காணான், ஆக்கம் வருங்கால்; அதனை
மிகல்-காணும், கேடு தரற்கு.

860 இகலான்-ஆம், இன்னாத எல்லாம்; நகலான்-ஆம்,
நல்-நயம் என்னும் செருக்கு.

851. எல்லா உயிர்களுக்கும் மற்ற உயிர்களோடு பொருந்தாமல் வேறுபடுதலாகிய தீய பண்பை வளர்க்கும் நோய் இகல் (மாறுபாடு) என்று சொல்வர் அறிஞர்.

852. ஒருவன் தன்னோடு பொருந்தாமல் வேறுபடுதலைக் கருதி அன்பில்லாதவற்றைச் செய்தாலும், தான் இகல் கொண்டு அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் சிறந்தது.

853. ஒருவன் இகல் என்று சொல்லப்படும் துன்ப நோயை நீக்கிவிட்டால். அஃது அவனுக்கு அழிவில்லாத நிலையான புகழைக் கொடுக்கும்.

854. இகல் என்று சொல்லப்படும் துன்பங்களில் கொடிய துன்பம் கெட்டுவிட்டால், அஃது ஒருவனுக்கு இன்பங்களில் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும்.

855. இகல் என்று சொல்லப்படும் துன்பங்களில் கொடிய துன்பம் கெட்டுவிட்டால். அஃது ஒருவனுக்கு இன்பங்களில் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும்.

856. இகல் கொள்வதால் வெல்லுதல் இனியது என்று கருதுகின்றவனுடைய வாழ்க்கை தவறிப்போதலும் அழிதலும் விரைவில் உள்ளனவாம்.

857. இகலை விரும்புகின்ற தீய அறிவை உடையவர் வெற்றி பொருந்துதலுக்குக் காரணமான உண்மைப் பொருளை அறியமாட்டார்.

858. இகலுக்கு எதிரே சாய்ந்து நடத்தல் ஒருவனுக்கு ஆக்கமாகும்; அதனை எதிர்த்து வெல்லக் கருதினால் கேடு அவனிடம் வரக் கருதும்.

859. ஒருவன் தனக்கு ஆக்கம் வரும்போது இகலைக் கருதமாட்டான்; தனக்குக் கேடு தருவித்துக் கொள்ளும் போது அதனை எதிர்த்து வெல்லக் கருதுவான்.

860. ஒருவனுக்கு இகலால் துன்பமானவை எல்லாம் உண்டாகும்; அதற்கு மாறான நட்பால் நல்ல நீதியாகிய பெருமித நிலை உண்டாகும்.

# 87. பகைமாட்சி

861 வலியார்க்கு மாறு-ஏற்றல் ஓம்புக! ஓம்பா,
மெலியார்-மேல் மேக, பகை!

862 அன்பு-இலன்; ஆன்ற-துணை-இலன்; தான்-துவ்வான்;
என்-பரியும், ஏதிலான் துப்பு?

863 அஞ்சும்; அறியான்; அமைவு-இலன்; ஈகலான்;
தஞ்சம் எளியன், பகைக்கு.

864 நீங்கான் வெகுளி; நிறை-இலன்; எஞ்ஞான்றும்,
யாங்கணும், யார்க்கும், எளிது.

865 வழி-நோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழி-நோக்கான்;
பண்பு-இலன்; பற்றார்க்கு இனிது.

866 காணாச் சினத்தான், கழி-பெருங் காமத்தான்;
பேணாமை பேணப்படும்.

867 கொடுத்தும் கொளல்-வேண்டும் மன்ற; அடுத்து-இருந்து,
மாணாத செய்வான் பகை.

868 குணன் இலனாய், குற்றம் பல-ஆயின், மாற்றார்க்கு,
இனன்-இலன்-ஆம்; ஏமாப்பு உடைத்து.

869 செறுவார்க்குச் சேண், இகவா, இன்பம்; அறிவு-இலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

870 கல்லான் வெகுளும் சிறு-பொருள்; எஞ்ஞான்றும்,
ஒல்லானை ஒல்லாது, ஒளி.

861. தம்மைவிட வலியவர்க்கு மாறுபட்டு எதிர்த்தலை விட வேண்டும்; தம்மை விட மெலியவர் மேல் பகை கொள்வதை விடாமல் விரும்பி மேற்கொள்ள வேண்டும்.

862. ஒருவன் அன்புஇல்லாதவனாய், அமைந்த துணை இல்லாதவனாய், தானும் வலிமை இல்லாதவனாய் இருந்தால், அவன் பகைவனுடைய வலிமையை எவ்வாறு ஒழிக்க முடியும்?

863. ஒருவன் அஞ்சுகின்றவனாய், அறிவு இல்லாதவனாய், பொருந்தும் பண்பு இல்லாதவனாய், பிறர்க்கு ஒன்று ஈயாதவனாய் இருந்தால், அவன் பகைவர்க்கு மிக எளியவன்.

864. ஒருவன் சினம் நீங்காதவனாய், நெஞ்சத்தை நிறுத்தியாளும் தன்மை இல்லாதவனாய் இருந்தால், அவன் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவர்க்கும் எளியவன்.

865. ஒருவன் நல்வழியை நோக்காமல், பொருத்தமானவற்றைச் செய்யாமல், பழியையும் பார்க்காமல், நற்பண்பும் இல்லாமல் இருந்தால், அவன் பகைவர்க்கும் எளியனாவான்.

866. ஒருவன் உண்மை காணாத சினம் உடையவனாய், மிகப் பெரிய ஆசை உடையவனாய் இருந்தால், அவனுடைய பகை விரும்பி மேற்கொள்ளப்படும்.

867. தன்னை அடுத்துத் தன்னோடிருந்தும் பொருந்தாதவற்றைச் செய்பவனுடைய பகையைப் பொருள் கொடுத்தாவது கொள்ள வேண்டும்.

868. ஒருவன் குணம் இல்லாதவனாய்க் குற்றம் பல உடையவனானால், அவன் துணை இல்லாதவன் ஆவான்; அந்நிலைமையே அவனுடைய பகைவர்க்கு நன்மையாகும்.

869. அறிவு இல்லாத அஞ்சும் இயல்பு உடைய பகைவரைப் பெற்றால், அவரை எதிர்த்துப் பகைகொள்பவர்க்கு இன்பங்கள் தொலைவில் நீங்காமல் நிற்கும்.

870. கல்வி கற்காதவனைப் பகைத்துக் கொள்ளும் எளிய செயலைச் செய்ய இயலாத ஒருவனிடம், எக்காலத்திலும் புகழ் வந்து பொருந்தாது.

# 88. பகைத் திறம் தெரிதல்

871 பகை-என்னும் பண்பு-இலதனை, ஒருவன்
நகையேயும், வேண்டற்பாற்று அன்று.

872 வில்-ஏர் உழவர் பகை-கொளினும்; கொள்ளற்க
சொல்-ஏர் உழவர் பகை!

873 ஏமுற்ற-வரினும் ஏழை; தமியனாய்ப்
பல்லார், பகை கொள்பவன்.

874 பகை-நட்பாக் கொண்டு-ஒழுகும் பண்பு-உடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று, உலகு.

875 தன்-துணை இன்றால்; பகை-இரண்டால்; தான்-ஒருவன்
இன்-துணையாக்-கொள்க, அவற்றின் ஒன்று!

876 தேறினும், தேறா-விடினும், அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்!

877 நோவற்க, நொந்தது அறியார்க்கு! மேவற்க,
மென்மை, பகைவர்-அகத்து!

878 வகை-அறிந்து, தற்-செய்து, தற்-காப்ப மாயும்;
பகைவர்கண் பட்ட செருக்கு.

879 இளைதாக முள்-மரம் கொல்க; களையுநர்
கை-கொல்லும் காழ்த்த இடத்து!

880 உயிர்ப்ப உளர்-அல்லர் மன்ற; செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலாதார்.

871. பகை என்று சொல்லப்படும் பண்பு இல்லாத தீமையை ஒருவன் சிரித்துப் பொழுதுபோக்கும் விளையாட்டாகவும் விரும்புதலாகாது.

872. வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகை கொண்ட போதிலும், சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகைகொள்ளக்கூடாது.

873. தான் தனியாக இருந்து பலருடைய பகையைத் தேடிக் கொள்பவன், பித்துப் பிடித்தவரைவிட அறிவில்லாதவனாகக் கருதப்படுவான்.

874. பகையையும் நட்பாகச் செய்துகொண்டு நடக்கும் பண்புடையவனது பெருந்தன்மையில் உலகம் தங்கியிருப்பதாகும்.

875. தனக்கு உதவியான துணையோ இல்லை; தனக்குப் பகையோ இரண்டு; தானோ ஒருவன்; இந்நிலையில் அப்பகைகளுள் ஒன்றை இனிய துணையாகக் கொள்ள வேண்டும்

876. இதற்குமுன் ஒருவனைப்பற்றி ஆராய்ந்து தெளிந்திருந்தாலும், தெளியாவிட்டாலும், அழிவு வந்தகாலத்தில் அவனைத் தெரியாமலும் நீங்காமலும் வாளா விடவேண்டும்.

877. துன்புற்றதைத் தாமாகவே அறியாத நண்பர்க்குத் துன்பத்தைச் சொல்லக் கூடாது; பகைவரிடத்தில் மென்மை மேற்கொள்ளக்கூடாது.

878. செய்யும் வகையை அறிந்து தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு தற்காப்புத் தேடிக்கொண்டால், பகைவரிடத்தில் ஏற்பட்ட செருக்குத் தானாகவே அழியும்,

879. முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்ட வேண்டும்; காழ்ப்பு ஏறி முதிர்ந்தபோது வெட்டுகின்றவரின் கையையே அது வருத்தும்.

880. பகைத்தவருடைய தலைமையைக் கெடுக்க முடியாதவர் திண்ணமாக மூச்சுவிடும் அளவிற்கு உயிரோடு வாழ்கின்றவர் அல்லர்.

# 89. உட்பகை

881 நிழல்-நீரும் இன்னாத இன்னா; தமர்-நீரும்,
இன்னா-ஆம், இன்னா செயின்.

882 வாள்-போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக,
கேள்-போல் பகைவர் தொடர்பு.

883 உட்-பகை அஞ்சித் தற்-காக்க! உலைவு-இடத்து,
மட்பகையின் மாணத் தெறும்.

884 மனம்-மாணா உட்-பகை தோன்றின்; இனம்-மாணா
ஏதம் பலவும் தரும்.

885 உறல்-முறையான் உட்-பகை தோன்றின்; இறல்-முறையான்
ஏதம் பலவும் தரும்.

886 ஒன்றாமை ஒன்றியார்கண் படின்; எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

887 செப்பின் புணர்ச்சி-போல் கூடினும்; கூடாதே
உட்-பகை உற்ற குடி.

888 அரம்-பொருத பொன்-போல, தேயும் உரம்; பொருது
உட்-பகை உற்ற குடி.

889 எட்-பகவு அன்ன சிறுமைத்தே-ஆயினும்,
உட்-பகை, உள்ளது ஆம், கேடு.

890 உடம்பாடு இலாதவர் வாழ்க்கை; குடங்கருள்
பாம்போடு உடன்-உறைந்தற்று.

881. இன்பம் தரும் நிழலும் நீரும் நோய் செய்வனவாக இருந்தால் தீயனவே ஆகும்; அதுபோலவே, சுற்றத்தாரின் தன்மைகளும் துன்பம் தருமானால் தீயனவே ஆகும்.

882. வாளைப்போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை; ஆனால் உறவினரைப்போல இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

883. உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்; தளர்ச்சி வந்தபோது மட்கலத்தை அறுக்கும் கருவிபோல் அந்த உட்பகை தவறாமல் அழிவு செய்யும்.

884. மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமானால், அது அவனுக்குச் சுற்றம் சீர்ப்படாமைக்குக் காரணமான குற்றம் பலவற்றையும் தரும்.

885. உறவுமுறையோடு உட்பகை உண்டாகுமானால், அது ஒருவனுக்கு இறக்கும் வகையான குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

886. ஒருவனுடைய உற்றாரிடத்தில் பகைமை ஏற்படுமானால், அந்த உட்பகையால் அவன் அழியாமலிருத்தல் எப்போதும் அரிது.

887. செப்பின் இணைப்பைப்போல் புறத்தே பொருந்தி இருந்தாலும், உட்பகை உண்டான குடியில் உள்ளவர் அகத்தே பொருந்தி இருக்கமாட்டார்.

888. உட்பகை உண்டான குடி, அரத்தினால் தேய்க்கப் பட்ட இரும்புபோல் வலிமை குறைக்கப்பட்டுத் தேய்ந்து போகும்.

889. எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு உடையதே ஆனாலும், ஒரு குடியை அழிக்கவல்ல கேடு உட்பகையில் உள்ளதாகும்.

890. அகத்தின் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையிற் பாம்போடு உடன்வாழ்ந்தாற் போன்றது.

# 90. பெரியாரைப் பிழையாமை

891 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

892 பெரியாரைப் பேணாது ஒழுகின்; பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

893 கெடல்-வேண்டின், கேளாது செய்க; அடல்-வேண்டின்,
ஆற்றுபவர்கண் இழுக்கு!

894 கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்; ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.

895 யாண்டுச்-சென்று யாண்டும் உளர்-ஆகார்; வெந்-துப்பின்
வேந்து செறப்பட்டவர்.

896 எரியான் சுடப்படினும், உய்வு-உண்டாம்; உய்யார்,
பெரியார்ப் பிழைத்து-ஒழுகுவார்.

897 வகை-மாண்ட வாழ்க்கையும், வான்-பொருளும் என்-ஆம்?
தகை-மாண்ட தக்கார் செறின்?

898 குன்று-அன்னார் குன்ற மதிப்பின்; குடியொடு,
நின்று-அன்னார் மாய்வர், நிலத்து.

899 ஏந்திய கொள்கையார் சீறின்; இடை-முரிந்து
வேந்தனும், வேந்து கெடும்.

900 இறந்து-அமைந்த சார்பு-உடையர் ஆயினும் உய்யார்;
சிறந்து-அமைந்த சீரார் செறின்.

891. மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாதிருத்தல், காப்பவர் செய்து கொள்ளும் காவல் எல்லாவற்றிலும் சிறந்தது.

892. ஆற்றல் மிகுந்த பெரியாரை விரும்பி மதிக்காமல் நடந்தால், அது அப் பெரியாரால் நீங்காத துன்பத்தைத் தருவதாகும்.

893. அழிக்க வேண்டுமானால் அவ்வாறே செய்துமுடிக்க வல்லவரிடத்தில் தவறு செய்தலை, ஒருவன் கெட வேண்டுமானால் கேளாமலே செய்யலாம்.

894. ஆற்றல் உடையவர்க்கு ஆற்றல் இல்லாதவர் தீமை செய்தால், தானே வந்து அழிக்கவல்ல எமனைக் கைகாட்டி அழைத்தாற் போன்றது.

895. மிக்க வலிமை உடைய அரசனால் வெகுளப்பட்டவர், அவனிடமிருந்து தப்புவதற்காக எங்கே சென்றாலும் எங்கும் வாழ முடியாது.

896. தீயால் சுடப்பட்டாலும் ஒருகால் உயிர்பிழைத்து வாழ முடியும்; ஆற்றல் மிகுந்த பெரியாரிடத்தில் தவறு செய்து நடப்பவர் தப்பிப் பிழைக்க முடியாது.

897. தகுதியால் சிறப்புற்ற பெரியார் ஒருவனை வெகுண்டால் அவனுக்குப் பலவகையால் மாண்புற்ற வாழ்க்கையும் பெரும் பொருளும் இருந்தும் என்ன பயன்?

898. மலைபோன்ற பெரியார் கெட நினைத்தால், உலகில் அழியாமல் நிலைபெற்றாற்போல் உள்ளவரும் தம் குடியோடு அழிவர்.

899. உயர்ந்த கொள்கையுடைய பெரியார் சீறினால், நாட்டை ஆளும் அரசனும் இடைநடுவே முரிந்து அரசு இழந்து கெடுவான்.

900. மிகச் சிறப்பாக அமைந்த பெருமையுடையவர் வெகுண்டால், அளவு கடந்து அமைந்துள்ள சார்புகள் உடையவரானாலும் தப்பிப் பிழைக்க முடியாது.

# 91. பெண்வழிச் சேறல்

901 மனை-விழைவார் மாண்-பயன் எய்தார்; வினை-விழைவார்
வேண்டாப் பொருளும் அது.

902 பேணாது பெண்-விழைவான் ஆக்கம்; பெரியதோர்
நாணாக, நாணுத் தரும்.

903 இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு-இன்மை; எஞ்ஞான்றும்,
நல்லாருள் நாணுத் தரும்.

904 மனையாளை அஞ்சும் மறுமை-இலாளன்
வினை-ஆண்மை வீறு-எய்தல் இன்று.

905 இல்லாளை அஞ்சுவான், அஞ்சும் மற்று-எஞ்ஞான்றும்,
நல்லார்க்கு நல்ல செயல்.

906 இமையாரின் வாழினும், பாடு-இலரே; இல்லாள்
அமை-ஆர் தோள் அஞ்சுபவர்.

907 பெண்-ஏவல் செய்து-ஒழுகும் ஆண்மையின், நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

908 நட்டார் குறை-முடியார்; நன்று-ஆற்றார்; நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகுபவர்.

909 அற-வினையும், ஆன்ற-பொருளும், பிற-வினையும்;
பெண்-ஏவல் செய்வார்கண் இல்.

910 எண்-சேர்ந்த நெஞ்சத்து, இடன்-உடையார்க்கு;
எஞ்ஞான்றும்,
பெண்-சேர்ந்து-ஆம் பேதைமை இல்.

901. மனைவியை விரும்பி அவள் சொன்னபடி நடப்பவர் சிறந்த பயனை அடையமாட்டார்; கடமையைச் செய்தலை விரும்புகின்றவர் வேண்டாத பொருளும் அதுவே.

902. கடமையை விரும்பாமல் மனைவியின் பெண்மையை விரும்புகின்றவனுடைய ஆக்கம், பெரியதொரு நாணத்தக்க செயலாக நாணத்தைக் கொடுக்கும்.

903. மனைவியிடத்தில் தாழ்ந்து நடக்கும் இழிந்த தன்மை ஒருவனுக்கு எப்போதும் நல்லவரிடையே இருக்கும்போது நாணத்தைத் தரும்.

904. மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயன் இல்லாத ஒருவன், செயல் ஆற்றுந்தன்மை பெருமை பெற்று விளங்க முடிவதில்லை.

905. மனைவிக்கு அஞ்சி வாழ்கின்றவன் எப்போதும் நல்லவர்க்கு நன்மையான கடமையைச் செய்வதற்கு அஞ்சி நடப்பான்.

906. மனைவியின் தோளுக்கு அஞ்சி வாழ்கின்றவர் தேவரைப் போல் இவ்வுலகத்தில் சிறப்பான நிலையில் வாழ்ந்த போதிலும் பெருமை இல்லாதவரே ஆவர்.

907. மனைவியின் ஏவலைச் செய்து நடக்கின்றவனுடைய ஆண்மையைவிட, நாணத்தைத் தன் இயல்பாக உடையவளின் பெண்மையே பெருமை உடையது.

908. மனைவி விரும்பியபடி செய்து நடப்பவர், தம்முடைய நண்பர்க்கு உற்ற குறையையும் செய்து முடிக்கமாட்டார்; அறத்தையும் செய்யமாட்டார்.

909. அறச் செயலும் அதற்குக் காரணமாக அமைந்த பொருள் முயற்சியும் மற்றக் கடமைகளும் மனைவியின் ஏவலைச் செய்வோரிடத்தில் இல்லை.

910. நன்றாக எண்ணுதல் பொருந்திய நெஞ்சத்தோடு தக்க நிலையும் உடையார்க்கு எக்காலத்திலும் மனைவியின் ஏவலுக்கு இணங்கும் அறியாமை இல்லை.

## 92. வரைவு இல் மகளிர்

911 அன்பின் விழையார், பொருள்-விழையும் ஆய்தொடியார்
இன்-சொல் இழுக்குத் தரும்.

912 பயன்-தூக்கிப் பண்பு-உரைக்கும் பண்பு-இல்-மகளிர்
நயன்-தூக்கி, நள்ளா விடல்!

913 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்; இருட்டு-அறையில்
ஏதில் பிணம்-தழீ-இயற்று.

914 பொருட்பொருளார் புன்-நலம் தோயார்; அருட்பொருள்
ஆயும் அறிவினவர்.

915 பொது-நலத்தார் புன்-நலம் தோயார்; மதி-நலத்தின்
மாண்ட அறிவினவர்.

916 தம்-நலம் பாரிப்பார் தோயார்; தகை-செருக்கி,
புன்-நலம் பாரிப்பார் தோள்.

917 நிறை-நெஞ்சம் இல்லவர் தோய்வர்; பிற-நெஞ்சில்
பேணி, புணர்பவர் தோள்.

918 ‘ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு’ என்ப;
‘மாய மகளிர் முயக்கு’.

919 வரைவு-இலா மாண்-இழையார் மென்-தோள்; புரை-இலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

920 இரு-மனப்-பெண்டிரும், கள்ளும், கவறும்;
திரு-நீக்கப்பட்டார் தொடர்பு.

911. அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொதுமகளிர் பேசுகின்ற இனிய சொல் ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்.

912. கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து, அதற்கு ஏற்றவாறு இனியசொல் கூறுகின்ற பண்பற்ற பொது மகளிரின் இன்பத்தை ஆராய்ந்து பொருந்தாமல் விடவேண்டும்.

913. பொருளையே விரும்பும் பொதுமகளிரின் பொய்யான தழுவுதல், இருட்டறையில், தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவினாற் போன்றது.

914. பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொது மகளிரின் புன்மையான இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் பொருந்தமாட்டார்.

915. இயற்கை யறிவின் நன்மையால் சிறப்புற்ற அறிவுடையோர், பொருள் தருவார் எல்லார்க்கும் பொதுவாக இன்பம் தரும் மகளிரின் புன்மையான நலத்தைப் பொருந்தார்.

916. அழகு முதலியவற்றால் செருக்குக் கொண்டு தம் புன்மையான நிலையான நலத்தை விற்கும் பொதுமகளிரின் தோளை, தம் நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் பொருந்தார்.

917. நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் ஆற்றல் இல்லாதவர், தம் நெஞ்சில் வேறுபொருளை விரும்பிக் கூடும் பொது மகளிரின் தோளைப் பொருந்துவர்.

918. வஞ்சம் நிறைந்த பொதுமகளிரின் சேர்க்கை, ஆராய்ந்தறியும் அறிவு இல்லாதவர்க்கு அணங்கு தாக்கு (மோகினி மயக்கு) என்று கூறுவர்.

919. ஒழுக்க வரையறை இல்லாத பொதுமகளிரின் மெல்லிய தோள், உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

920. இருவகைப்பட்ட மனம் உடைய பொதுமகளிரும் கள்ளும் சூதுமாகிய இம் மூவகையும் திருமகளால் நீக்கப்பட்டவரின் உறவாகும்.

# 93. கள் உண்ணாமை

921 உட்கப் படாஅர், ஒளி-இழப்பர் எஞ்ஞான்றும்;
கள்-காதல் கொண்டு-ஒழுகுவார்.

922 உண்ணற்க, கள்ளை! உணில், உண்க, சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்!

923 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என், மற்றுச்
சான்றோர் முகத்துக் களி!

924 நாண் என்னும் நல்லாள் புறம்-கொடுக்கும்; கள் என்னும்
பேணாப் பெரும்-குற்றத்தார்க்கு.

925 கை அறியாமை-உடைத்தே; பொருள்-கொடுத்து,
மெய்-அறியாமை கொளல்.

926 துஞ்சினார் செத்தாரின் வேறு-அல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சு-உண்பார் கள்-உண்பவர்.

927 உள்-ஒற்றி உள்ளூர் நகப்படுவர்; எஞ்ஞான்றும்
கள்-ஒற்றிக் கண் சாய்பவர்.

928 களித்து-அறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்!

929 களித்தானைக் காரணம் காட்டுதல்; கீழ்-நீர்க்-
குளித்தானைத் தீத்-துரீ-இயற்று.

930 கள் உண்ணாப்-போழ்தில், களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல், உண்டதன் சோர்வு!

921. கள்ளின்மேல் விருப்பம் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார்; தமக்கு உள்ள புகழையும் இழந்துவிடுவார்.

922. கள்ளை உண்ணக்கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்.

923. பெற்ற தாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும்; குற்றம் கடியும் இயல்புடைய சான்றோரின் முகத்தில் அது என்னவாகும்?

924. நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப்படும் விரும்பத்தகாத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செல்வாள்.

925. விலைப்பொருள் கொடுத்துக் கள்ளுண்டு தன் உடம்பைத் தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று அறியாத அறியாமை உடையதாகும்.

926. உறங்கினவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர்.

927. கள்ளை மறைந்திருந்து குடித்து அறிவு மயங்குபவர், உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப்படுவர்.

928. கள்ளுண்பவன் 'யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன்' என்று சொல்லுவதை விடவேண்டும்: நெஞ்சில் ஒளிந்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும்.

929. கள்ளுண்டு மயங்கினவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல், நீரின்கீழ் மூழ்கின ஒருவனைத் தீவிளக்குக் கொண்டு தேடினாற் போன்றது.

930. ஒருவன் தான் கள் உண்ணாதபோது கள்ளுண்டு மயங்கினவனைக் காணுமிடத்தில் உண்டு மயங்குவதால் வரும் சோர்வை நினைக்கமாட்டானோ?

# 94. சூது

931 வேண்டற்க, வென்றிடினும்-சூதினை! வென்றதூஉம்,
தூண்டில்-பொன்-மீன் விழுங்கியற்று.

932 ஒன்று-எய்தி, நூறு-இழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்;
நன்று-எய்தி வாழ்வதோர் ஆறு?

933 உருள்-ஆயம் ஓவாது கூறின்; பொருள்-ஆயம்
போஒய்ப் புறமே படும்.

934 சிறுமை பல-செய்து, சீர்-அழிக்கும் சூதின்,
வறுமை-தருவது ஒன்று இல்.

935 கவறும், கழகமும், கையும் தருக்கி
இவறியார்; இல்லாகியார்.

936 அகடு-ஆரார்; அல்லல் உழப்பர்; சூது-என்னும்
முகடியான் மூடப்பட்டார்.

937 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்;
கழகத்துக் காலை புகின்.

938 பொருள்-கெடுத்து, பொய்-மேற்கொளீஇ, அருள்-கெடுத்து,
அல்லல் உழப்பிக்கும்; சூது.

939 உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்று ஐந்தும்
அடையாவாம்; ஆயம் கொளின்.

940 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதே-போல், துன்பம்
உழத்தொறூஉம் காதற்று, உயிர்.

931. வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.

932. ஒரு பொருள்பெற்று நூறுமடங்கு பொருளை இழந்துவிடும் சூதாடிகளுக்கும், நன்மை பெற்று வாழும் ஒரு வழி உண்டோ?

933. ஒருவன் உருளுகின்ற கருவியால் வரும் பொருளை இடைவிடாமல் கூறிச் சூதாடினால், பொருள் வருவாய் அவனைவிட்டு நீங்கிப் பகைவரிடத்தில் சேரும்

934. ஒருவனுக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

935. சூதாடு கருவியும், ஆடும் இடமும், கைத்திறமையும் மதித்துக் கைவிடாதவர், (எல்லாப் பொருள் உடையவராக இருந்தும்) இல்லாதவர் ஆய்விடுவார்.

936. சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப் பட்டவர், வயிறு நிறைய உணவும் உண்ணாதவராகிப் பல துன்பப்பட்டு வருந்துவார்.

937. சூதாடுமிடத்தில் ஒருவனுடைய காலம் கழியுமானால், அது அவனுடைய பழைமையாய் வந்த செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும்.

938. சூது, உள்ள பொருளை அழித்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து அருளையும் கெடுத்துப் பலவகையிலும் துன்பமுற்று வருந்தச் செய்யும்.

939. சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால், புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும்.

940. பொருள் வைத்து இழக்க இழக்க மேன்மேலும் விருப்பத்தை வளர்க்கும் சூதாட்டம்போல், உடல் துன்பப்பட்டு வருந்த வருந்த உயிர் மேன்மேலும் காதல் உடையதாகும்.

# 95. மருந்து

941 மிகினும் குறையினும், நோய்-செய்யும்; நூலோர்
வளி-முதலா எண்ணிய மூன்று.

942 மருந்து-என வேண்டாவாம், யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றி உணின்.

943 அற்றால், அளவு-அறிந்து உண்க! அஃது-உடம்பு
பெற்றான் நெடிது-உய்க்கும் ஆறு.

944 அற்றது-அறிந்து, கடைப்பிடித்து, மாறு-அல்ல
துய்க்க, துவரப்-பசித்து!

945 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து-உண்ணின்
ஊறுபாடு இல்லை; உயிர்க்கு.

946 இழிவு-அறிந்து உண்பான்கண் இன்பம்-போல்; நிற்கும்
கழி-பேர் இரையான்கண், நோய்.

947 தீ-அளவு-அன்றித் தெரியான் பெரிது-உண்ணின்;
நோய்-அளவு இன்றிப்-படும்.

948 நோய்-நாடி நோய்-முதல்-நாடி, அது-தணிக்கும்
வாய்-நாடி, வாய்ப்பச் செயல்!

949 உற்றான்-அளவும், பிணி-அளவும், காலமும்
கற்றான், கருதிச் செயல்!

950 உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று
அப்-பால் நாற்-கூற்றே; மருந்து.

941. மருத்துவ நூலோர் வாதம் பித்தம் சிலோத்துமம் என எண்ணிய மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும்.

942. முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

943. முன் உண்ட உணவு செரித்துவிட்டால், பின் வேண்டிய அளவு அறிந்து உண்ணவேண்டும்; அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும்.

944. முன் உண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைபிடித்து, அவற்றையும் நன்றாகப் பசித்தபிறகு உண்ணவேண்டும்.

945. மாறுபாடில்லாத உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு உண்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் இல்லை.

946. குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலை நிற்பது போல, மிகப் பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

947. பசித்தீயின் அளவின்படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டுவிடும்.

948. நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்யவேண்டும்.

949. மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

950. நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிலிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்குவகைப் பாகுபாடு உடையது.

# 96. குடிமை

951 இற் பிறந்தார்கண் அல்லது இல்லை; இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

952 ஒழுக்கமும், வாய்மையும், நாணும் இம்மூன்றும்
இழுக்கார்; குடிப்-பிறந்தார்.

953 நகை, ஈகை, இன்-சொல், இகழாமை நான்கும்
வகை-என்ப; வாய்மைக்-குடிக்கு.

954 அடுக்கிய கோடி பெறினும், குடிப்-பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

955 வழங்குவது உள்-வீழ்ந்தக்-கண்ணும், பழங்குடி
பண்பின் தலைப்-பிரிதல் இன்று.

956 சலம்-பற்றிச் சால்பு-இல-செய்யார்; 'மாசு-அற்ற
குலம்-பற்றி வாழ்தும்' என்பார்.

957 குடிப்-பிறந்தார்-கண் விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல், உயர்ந்து.

958 நலத்தின்-கண் நார்-இன்மை தோன்றின்; அவனைக்
குலத்தின்-கண் ஐயப்-படும்.

959 நிலத்தில் கிடந்தமை கால்-காட்டும்; காட்டும்,
குலத்தில் பிறந்தார் வாய்ச்-சொல்.

960 நலம்-வேண்டின், நாண்-உடைமை வேண்டும்; குலம்-வே
வேண்டின்,
வேண்டுக, யார்க்கும் பணிவு!

951. நடுவு நிலைமையும் நாணமும் உயர்குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவரிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

952. உயர்குடியில் பிறந்தவர் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றிலிருந்தும் வழுவாமல் இயல்பாகவே நன்னெறியில் வாழ்வர்.

953. உண்மையான உயர்குடியில் பிறந்தவர்க்கு முகமலர்ச்சி, ஈகை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

954. பலகோடிப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான குற்றங்களைச் செய்வதில்லை.

955. தாம் பிறர்க்குக் கொடுத்துதவும் வண்மை வறுமையால் சுருங்கிய போதிலும், பழம்பெருமை உடைய குடியில் பிறந்தவர் தம் பண்பிலிருந்து நீங்குவதில்லை.

956. மாசற்ற குடிப் பண்புடன் வாழ்வோம் என்று கருதி வாழ்வோர், வஞ்சனைகொண்டு தகுதியில்லாதவற்றைச் செய்யமாட்டார்.

957. உயர்குடியில் பிறந்தவரிடத்தில் உண்டாகும் குற்றம், ஆகாயத்தில் திங்களிடம் காணப்படும் களங்கம்போல் பலரறியத் தோன்றும்.

958. ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில் அன்பற்ற தன்மை காணப்பட்டால், அவனை அவனுடைய குடிப்பிறப்புப் பற்றி ஐயப்பட நேரும்.

959. இன்ன நிலத்தில் இருந்து முளைத்தது என்பதை முளை காட்டும்; அதுபோல் குடியிற் பிறந்தவரின் வாய்ச்சொல் அவருடைய குடிப்பிறப்பைக் காட்டும்.

960. ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையவனாக வேண்டும்; குடியின் உயர்வு வேண்டுமானால் எல்லோரிடத்தும் பணிவு வேண்டும்.

# 97. மானம்

961 இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்,
குன்ற வருப விடல்.

962 சீரினும், சீர்-அல்ல-செய்யாரே; சீரொடு
பேராண்மை வேண்டுபவர்.

963 பெருக்கத்து வேண்டும், பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும், உயர்வு.

964 தலையின் இழிந்த மயிர்-அனையர்; மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை.

965 குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய செயின்.

966 புகழ்-இன்றால்; புத்தேள்-நாட்டு-உய்யாதால்; என்-மற்று,
இகழ்வார்பின் சென்று நிலை?

967 ஒட்டார்-பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந்-நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

968 மருந்தோ, மற்று ஊன்-ஓம்பும்-வாழ்க்கை; பெருந்தகைமை
பீடு-அழிய-வந்த-இடத்து?

969 மயிர்-நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்-நீப்பர், மானம் வரின்.

970 இளி-வரின், வாழாத மானம் உடையார்;
ஒளி-தொழுது-ஏத்தும், உலகு.

961. இன்றியமையாத சிறப்பை உடைய செயல்களே ஆயினும், குடிப்பெருமை தாழுமாறு வரும் செயல்களை ஒருவன் செய்யாமல் விடவேண்டும்.

962. புகழோடு பெரிய ஆண்மையும் விரும்புகின்றவர், புகழ் தேடும் வழியிலும் குடிப்பெருமைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார்.

963. செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவனுக்குப் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து சுருங்கும் வறுமையுள்ள காலத்தில் பணியாத உயர்வு வேண்டும்.

964. மக்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையிலிருந்து தாழ்ந்த போது, தலையிலிருந்து விழுந்து தாழ்வுற்ற மயிரினைப் போன்றவர் ஆவர்.

965. மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும், தாழ்வுக்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போய்விடுவர்.

966. மதியாமல் இகழ்கின்றவரின் பின்சென்று பணிந்து நிற்கும் நிலை, ஒருவனுக்குப் புகழும் தாராது; தேவருலகிலும் செலுத்தாது; வேறு பயன் என்ன?

967. மதியாதவரின் பின்சென்று ஒருவன் உயிர் வாழ்வதை விட, அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நல்லது

968. ஒருவனுடைய பெருந்தகைமை தன் சிறப்புக்கெட நேர்ந்த போது, அவன் உடம்பை மட்டும் காத்து வாழும் வாழ்க்கை சாவாமைக்கு மருந்தோ?

969. தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவர்.

970. தமக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள்.

# 98. பெருமை

971 ஒளி, ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி-ஒருவற்கு,
'அஃது-இறந்து-வாழ்தும்' எனல்.

972 பிறப்பு-ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு-ஒவ்வா,
செய்-தொழில் வேற்றுமையான்.

973 மேல்-இருந்தும், மேல்-அல்லார் மேல்-அல்லர்; கீழ்-இருந்தும்,
கீழ்-அல்லார், கீழ்-அல்லவர்.

974 ஒருமை மகளிரே போல, பெருமையும்,
தன்னைத்தான் கொண்டு-ஒழுகின், உண்டு.

975 பெருமை-உடையவர் ஆற்றுவார்; ஆற்றின்
அருமை-உடைய செயல்.

976 சிறியார், உணர்ச்சியுள் இல்லை; 'பெரியாரைப்
பேணிக் கொள்வேம்' என்னும் நோக்கு.

977 இறப்பே புரிந்த தொழிற்று ஆம் சிறப்பும்-தான்
சீர்-அல்லவர் கண்-படின்.

978 பணியுமாம், என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம், தன்னை வியந்து.

979 பெருமை, பெருமிதம் இன்மை; சிறுமை,
பெருமிதம் ஊர்ந்து-விடல்.

980 அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமை-தான்
குற்றமே கூறி-விடும்.

971. ஒருவனுக்கு ஒளி ஊக்கமிகுதியே ஆகும்; ஒருவனுக்கு இழிவு அந்த ஊக்கம் இல்லாமலே உயிர் வாழலாம் என்று எண்ணுதலாம்.

972. எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

973. மேல்நிலையில் இருந்தாலும் மேன்மைப் பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர்; கீழ்நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ்மக்கள் அல்லர்.

974. ஒரு தன்மையான கற்புடைய மகளிரைப் போல், பெருமைப் பண்பும் ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொண்டு நடந்தால் உளதாகும்.

975. பெருமைப்பண்பு உடையவர் செய்வதற்கு அருமையான செயலைச் செய்வதற்கு உரிய நெறியில் செய்து முடிக்க வல்லவர் ஆவர்.

976. பெரியோரை விரும்பிப் போற்றுவோம் என்னும் உயர்ந்த நோக்கம், அவருடைய சிறப்பை உணராத சிறியோரின் உணர்ச்சியில் இல்லை.

977. சிறப்பு நிலையும் தனக்குப் பொருந்தாத சீரற்ற கீழ் மக்களிடம் ஏற்பட்டால், வரம்புமீறிய செயலை உடையதாகும்.

978. பெருமைப் பண்பு எக்காலத்திலும் பணிந்து நடக்கும்; ஆனால் சிறுமையோ தன்னைத்தானே வியந்து பாராட்டிக் கொள்ளும்.

979. பெருமைப் பண்பாவது செருக்கு இல்லாமல் வாழ்தல்: சிறுமையோ செருக்கே மிகுந்து அதன் எல்லையில் நின்று விடுவதாகும்.

980. பெருமைப்பண்பு பிறருடைய குறைபாட்டை மறைக்கும்; சிறுமையோ பிறருடைய குற்றத்தையே எடுத்துச் சொல்லிவிடும்.

# 99. சான்றாண்மை

981 கடன்-என்ப, நல்லவை எல்லாம்; கடன்-அறிந்து,
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு.

982 குண-நலம், சான்றோர் நலனே; பிற-நலம்
எந்-நலத்து உள்ளதூஉம் அன்று.

983 அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு
ஐந்து; சால்பு ஊன்றிய தூண்.

984 கொல்லா நலத்தது, நோன்மை; பிறர்-தீமை
சொல்லா நலத்தது, சால்பு.

985 ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது-சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

986 'சால்பிற்குக் கட்டளை யாது?' எனின்; தோல்வி
துலை அல்லார்-கண்ணும் கொளல்.

987 இன்னா-செய்தார்க்கும் இனியவே-செய்யாக்கால்,
என்ன பயத்ததோ, சால்பு?

988 இன்மை ஒருவற்கு இளிவு-அன்று; சால்பு-என்னும்
திண்மை உண்டாகப்பெறின்.

989 ஊழி பெயரினும், தாம்-பெயரார்; சான்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்.

990 சான்றவர் சான்றாண்மை குன்றின்; இரு-நிலம்-தான்
தாங்காது மன்னோ, பொறை!

981. கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

982. சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே; மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

983. அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

984. தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது; சால்பு பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது.

985. ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும். அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

986. சால்புக்கு உரைகல்போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

987. துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யாவிட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்?

988. சால்பு என்னும் வலிமை உண்டாகப் பெற்றால் ஒருவனுக்குப் பொருள் இல்லாத குறையாகிய வறுமை இழிவானது அன்று.

989. சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று புகழப் படுகின்றவர், ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பர்.

990. சான்றோரின் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால் இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய்விடும்.

# 100. பண்பு உடைமை

991 எண்-பதத்தால், எய்தல் எளிது-என்ப; யார்மாட்டும்,
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

992 அன்பு-உடைமை, ஆன்ற குடிப்-பிறத்தல்; இவ்-இரண்டும்
பண்பு-உடைமை என்னும் வழக்கு.

993 உறுப்பு-ஒத்தல் மக்கள்-ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்பு-ஒத்தல், ஒப்பது-ஆம் ஒப்பு.

994 நயனொடு நன்றி-புரிந்த பயன்-உடையார்
பண்பு பாராட்டும், உலகு.

995 நகையுள்ளும் இன்னாது, இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்பு-உள, பாடு-அறிவார் மாட்டு.

996 பண்பு-உடையார்ப் பட்டு, உண்டு-உலகம்; அது-இன்றேல்,
மண்-புக்கு மாய்வது-மன்.

997 அரம்-போலும் கூர்மையரேனும், மரம்-போல்வர்;
மக்கள்-பண்பு-இல்லாதவர்.

998 நண்பு-ஆற்றார்-ஆகி, நயம்-இல செய்வார்க்கும்,
பண்பு-ஆற்றார்-ஆதல் கடை.

999 நகல்-வல்லர் அல்லார்க்கு மா-இரு-ஞாலம்,
பகலும், பாற்-பட்டன்று, இருள்.

1000 பண்பு-இலான் பெற்ற பெருஞ்-செல்வம்; நன்-பால்
கலம்-தீமையால் திரிந்தற்று.

991. பண்பு உடையவராக வாழும் நல்வழியை, யாரிடத்திலும் எளிய செல்வியுடன் இருப்பதால் அடைவது எளியது என்று கூறுவர்.

992. அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

993. உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று; பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

994. நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன் பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

995. ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும்; பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

996. பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது; அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துபோகும்.

997. மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம்போல் கூர்மையான அறிவு உடையவராயினும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

998. நட்புக் கொள்ள முடியாதவராய்த் தீயவை செய்கின்றவரிடத்திலும் பண்பு உடையவராய் நடக்க முடியாமை இழிவானதாகும்.

999. பிறரோடு கலந்து பழகி மகிழ முடியதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

1000. பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.

# 101. நன்றி இல் செல்வம்

1001 வைத்தான், வாய்-சான்ற-பெரும்-பொருள்; அஃது-
உண்ணான்
செத்தான், செயக்கிடந்தது இல்.

1002 'பொருளான் ஆம், எல்லாம்' என்று, ஈயாது இவறும்
மருளான், ஆம், மாணாப்-பிறப்பு.

1003 ஈட்டம் இவறி, இசை-வேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

1004 எச்சம்-என்று என்-எண்ணும்-கொல்லோ; ஒருவரால்
நச்சப் படாஅதவன்!

1005 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய-
கோடி-உண்டாயினும், இல்.

1006 ஏதம், பெருஞ்-செல்வம்; தான்-துவ்வான், தக்கார்க்கு-ஒன்று
ஈதல் இயல்பு-இலாதான்.

1007 அற்றார்க்கு-ஒன்று ஆற்றாதான்-செல்வம்; மிகு-நலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று.

1008 நச்சப்படாதவன் செல்வம்; நடுவூருள்
நச்சு-மரம் பழுத்தற்று.

1009 அன்பு-ஒரீஇ, தற்-செற்று, அறம்-நோக்காது, ஈட்டிய
ஒண்-பொருள் கொள்வார், பிறர்.

1010 சீருடைச்-செல்வர் சிறு-துனி; மாரி
வறம் கூர்ந்தனையது உடைத்து.

1001. ஒருவன் இடமெல்லாம் நிறைந்த பெரும் பொருளைச் சேர்த்து வைத்து அதை உண்டு நுகராமல் இறந்துபோனால் அவன் அந்தப் பொருளால் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை

1002. பொருளால் எல்லாம் ஆகும் என்று பிறர்க்கும் ஒன்றும் கொடுக்காமல் இறுகப் பற்றிய மயக்கத்தால் சிறப்பில்லாத பிறவி உண்டாம்.

1003. சேர்த்து வைப்பதையே விரும்பிப் பற்றுள்ளம் கொண்டு புகழை விரும்பாத மக்கள் பிறந்து வாழ்தல் நிலத்திற்குப் பாரமே ஆகும்.

1004. பிறர்க்கு உதவியாக வாழாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்று எதனை எண்ணுவானோ?

1005. பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேன்மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை.

1006. தானும் நுகராமல் தக்கவர்க்கு ஒன்று கொடுத்து உதவும் இயல்பும் இல்லாமல் வாழ்கின்றவன், தன்னிடமுள்ள பெருஞ் செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான்.

1007. பொருள் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது.

1008. பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வம், ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தாற் போன்றது.

1009. பிறரிடம் செலுத்தும் அன்பையும் விட்டுத் தன்னையும் வருத்தி அறத்தையும் போற்றாமல் சேர்த்து வைத்த பெரும் பொருளைப் பெற்று நுகர்பவர் மற்றவரே.

1010. புகழ் பொருந்திய செல்வர் உற்ற சிறிய வறுமை உலகத்தைக் காக்கவல்ல மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மை உடையது.

# 102. நாண் உடைமை

1011 கருமத்தான் நாணுதல், நாணு; திருநுதல்
நல்லவர் நாணு, பிற.

1012 ஊண், உடை, எச்சம், உயிர்க்கு-எல்லாம் வேறு-அல்ல;
நாண்-உடைமை மாந்தர் சிறப்பு.

1013 ஊனைக்-குறித்த, உயிர்-எல்லாம்; நாண்-என்னும்
நன்மை குறித்தது, சால்பு.

1014 அணி-அன்றோ, நாண்-உடைமை சான்றோர்க்கு! அஃது-இன்றேல்
பிணி-அன்றோ, பீடு-நடை!

1015 'பிறர்-பழியும் தம்-பழியும் நாணுவார்; நாணுக்கு
உறைபதி' என்னும், உலகு.

1016 நாண் வேலி-கொள்ளாது-மன்னோ, வியல்-ஞாலம்
பேணலர்; மேலாயவர்.

1017 நாணால் உயிரைத்-துறப்பர்; உயிர்ப்-பொருட்டால்
நாண்-துறவார்; நாண்-ஆள்பவர்.

1018 பிறர் நாணத்-தக்கது தான்-நாணான் ஆயின்,
அறம் நாணத்-தக்கது உடைத்து.

1019 குலம்-சுடும், கொள்கை பிழைப்பின்; நலம்-சுடும்,
நாண்-இன்மை நின்றக்-கடை.

1020 நாண் அகத்து-இல்லார் இயக்கம்; மரப்பாவை
நாணால் உயிர்-மருட்டியற்று.

1011. தகாத செயல் காரணமாக நாணுவதே நாணமாகும்; பெண்களுக்கு இயல்பான மற்ற நாணங்கள் வேறு வகையானவை.

1012. உணவும் உடையும் எஞ்சி நிற்கும் மற்றவையும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை ; மக்களின் சிறப்பியல்பாக விளங்குவது நாணுடைமையே ஆகும்.

1013. எல்லா உயிர்களும் ஊனாலாகிய உடம்பை இருப்பிடமாகக் கொண்டவை; சால்பு என்பது, நாணம் என்று சொல்லபடும் நல்ல தன்மையை இருப்பிடமாகக் கொண்டது.

1014. சான்றோர்க்கு நாணுடைமை அணிகலம் அன்றோ? அந்த அணிகலம் இல்லையானால், பெருமிதமாக நடக்கும் நடை ஒரு நோய் அன்றோ?

1015. பிறர்க்கு வரும் பழிக்காகவும் தமக்கு வரும் பழிக்காவும் நாணுகின்றவர், நாணத்திற்கு உறைவிடமானவர் என்று உலகம் சொல்லும்.

1016. நாணமாகிய வேலியைத் தமக்குக் காவலாகச் செய்து கொள்ளாமல், மேலோர் பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி மேற்கொள்ளமாட்டார்.

1017. நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொள்பவர், நாணத்தால் உயிரை விடுவார்; உயிரைக் காக்கும் பொருட்டாக நாணத்தை விடமாட்டார்.

1018. ஒருவன் மற்றவர் நாணத்தக்க பழிக்குக் காரணமாக இருந்தும் தான் நாணாமலிருப்பானானால், அறம் நாணி அவனைக் கைவிடும் தன்மையுடையதாகும்.

1019. ஒருவன் கொள்கை தவறினால், அத் தவறு அவனுடைய குடிப்பிறப்பைக் கெடுக்கும். நாணில்லாத தன்மை நிலை பெற்றால் நன்மை எல்லாவற்றையும் கெடுக்கும்.

1020. மனத்தில் நாணம் இல்லாதவர் உலகத்தில் இயங்குதல் மரத்தால் செய்த பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிருள்ளதாக மயக்கினாற் போன்றது.

# 103. குடி செயல் வகை

1021 ‘கருமம் செய’, ஒருவன், ‘கைதூவேன்’ என்னும்
பெருமையின், பீடு-உடையது இல்.

1022 ஆள்வினையும், ஆன்ற-அறிவும்; என-இரண்டின்
நீள்-வினையான், நீளும் குடி.

1023 ‘குடி செய்வல்’ என்னும் ஒருவற்கு, தெய்வம்
மடி-தற்று, தான் முந்துறும்.

1024 சூழாமல் தானே முடிவு-எய்தும்; தம்-குடியைத்
தாழாது உஞற்றுபவர்க்கு.

1025 குற்றம் இலனாய், குடி-செய்து வாழ்வானைச்
சுற்றமாச்-சுற்றும், உலகு.

1026 நல்-ஆண்மை என்பது ஒருவற்குத் தான்-பிறந்த
இல்-ஆண்மை ஆக்கிக்-கொளல்.

1027 அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே, பொறை.

1028 குடி-செய்வார்க்கு இல்லை, பருவம்; மடி-செய்து,
மானம் கருத, கெடும்.

1029 இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ; குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு!

1030 இடுக்கண் கால்-கொன்றிட, வீழும்; அடுத்து-ஊன்றும்
நல்-ஆள் இலாத குடி.

1021. குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

1022. முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

1023. என் குடியை உயரச்செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணை செய்யும்.

1024. தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்வார்க்கு அவர் ஆராயாமலே அச்செயல் தானே நிறைவேறும்.

1025. குற்றம் இல்லாதவனாய்க் குடி உயர்வதற்கான செயல் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

1026. ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பைத் தனக்கு உண்டாக்கிக் கொள்வதாகும்.

1027. போர்க்களத்தில் பலரிடையில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அஞ்சாத வீரரைப்போல், குடியில் பிறந்தவரிடையிலும் தாங்கவல்லவர்மேல்தான் பொறுப்பு உள்ளது.

1028. குடி உயர்வதற்கான செயல் செய்கின்றவர்க்கு உரியகாலம் என்று ஒன்று இல்லை. சோம்பல் கொண்டு தம் மானத்தைக் கருதுவாரானால் குடிப்பெருமை கெடும்.

1029. தன் குடிக்கு வரக்கூடிய குற்றத்தை வராமல் நீக்க முயல்கின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ?

1030. துன்பம் வந்தபோது உடனிருந்து தாங்கவல்ல நல்ல ஆள் இல்லாத குடி, துன்பமாகிய கோடரி அடியில் வெட்டி வீழ்த்த விழுந்துவிடும்.

# 104. உழவு

1031 சுழன்றும் ஏர்ப்-பின்னது, உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை.

1032 உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது-ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

1033 உழுது, உண்டு, வாழ்வாரே வாழ்வார்; மற்று-எல்லாம்
தொழுது, உண்டு, பின்-செல்பவர்.

1034 பல-குடை நீழலும், தம்-குடைக்-கீழ்க் காண்பர்;
அலகு-உடை நீழலவர்.

1035 இரவார்; இரப்பார்க்கு-ஒன்று ஈவர்; கரவாது
கை-செய்து ஊண் மாலையவர்.

1036 உழவினார் கைம்மடங்கின், இல்லை; 'விழைவதூஉம்
விட்டேம்' என்பார்க்கு நிலை.

1037 தொடிப்-புழுதி கஃசா உணக்கின், பிடித்து-எருவும்
வேண்டாது, சாலப் படும்.

1038 ஏரினும் நன்றால், எரு-இடுதல்; கட்டபின்,
நீரினும் நன்று, அதன் காப்பு.

1039 செல்லான் கிழவன் இருப்பின், நிலம்-புலந்து
இல்லாளின் ஊடி-விடும்.

1040 'இலம்!' என்று அசைஇ இருப்பாரைக் காணின்,
நிலம்-என்னும் நல்லாள் நகும்.

1031. உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது; அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

1032. உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.

1033. உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

1034. நெல்வளம் உடைய தண்ணளி பொருந்திய உழவர், பல அரசரின் குடைநிழல்களையும் தம் குடையின் கீழ் காணவல்லவர் ஆவர்.

1035. கையால் தொழில்செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர் பிறரிடம்சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

1036. உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டு விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.

1037. ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒருபிடி எருவும் இட வேண்டாமல் அந்நிலத்தில் பயிர் செழித்து விளையும்.

1038. ஏர் உழுதலைவிட எரு இடுதல் நல்லது; இந்த இரண்டும் செய்து களை நீக்கிய பிறகு, நீர் பாய்ச்சுதலை விடக் காவல் காத்தல் நல்லது.

1039. நிலத்திற்கு உரியவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் வாளா இருந்தால், அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல் வெறுத்து அவனோடு பிணங்கி விடும்.

1040. எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால், நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

# 105. நல்குரவு

1041 ‘இன்மையின் இன்னாதது யாது?’ எனின், இன்மையின்
இன்மையே இன்னாதது.

1042 இன்மை என ஒரு-பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி, வரும்.

1043 தொல்-வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக;
நல்குரவு என்னும் நசை.

1044 இற்பிறந்தார்-கண்ணேயும், இன்மை; இளி-வந்த
சொல்-பிறக்கும் சோர்வு தரும்.

1045 நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்-
துன்பங்கள் சென்று படும்.

1046 நற்-பொருள் நன்கு-உணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொல்-பொருட் சோர்வு படும்.

1047 அறம் சாரா நல்குரவு, ஈன்ற-தாயானும்,
பிறன்-போல நோக்கப்படும்.

1048 இன்றும் வருவது கொல்லோ; நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு!

1049 நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாது-ஒன்றும் கண்பாடு அரிது.

1050 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

1041. வறுமையைப் போல் துன்பமானது எது என்று கேட்டால், வறுமையைப் போல் துன்பமானது வறுமை ஒன்றே ஆகும்,

1042. வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனை நெருங்கினால், அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லாமற் போகும் நிலைமை வரும்.

1043. வறுமை என்று சொல்லப்படும் ஆசைநிலை ஒருவனைப் பற்றினால் அவனுடைய பழைமையான குடிப் பண்பையும் புகழையும் ஒருசேரக் கெடுக்கும்.

1044. வறுமை என்பது, நல்ல குடியிற் பிறந்தவரிடத்திலும் இழிவு தரும் சொல் பிறப்பதற்குக் காரணமான சோர்வை உண்டாக்கிவிடும்.

1045. வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலையினுள் பலவகையாக வேறுபட்டுள்ள எல்லாத் துன்பங்களும் சென்று விளைந்திடும்.

1046. நல்ல நூற் பொருளை நன்றாக உணர்ந்து எடுத்துச் சொன்ன போதிலும் வறியவர் சொன்ன சொற்பொருள் கேட்பார் இல்லாமல் பயன்படாமல் போகும்.

1047. அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால் பெற்ற தாயாலும் அவன் அயலனைப் போல் புறக்கணித்துப் பார்க்கப்படுவான்.

1048. நேற்றும் கொலை செய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ! (என்று வறியவன் நாள்தோறும் கலங்கி வருந்துவான்,)

1049. ஒருவன் நெருப்பினுள் இருந்து தூங்குதலும் முடியும்; ஆனால் வறுமை நிலையில் எவ்வகையாலும் கண்மூடித் தூங்குதல் அரிது.

1050. நுகரும் பொருள் இல்லாத வறியவர் முற்றுந் துறக்கக் கூடியவராக இருந்தும் துறக்காத காரணம், உப்புக்கும் கஞ்சிக்கும் எமனாக இருப்பதே ஆகும்.

# 106. இரவு

1051 இரக்க, இரத்தக்கார்க் காணின்! கரப்பின்,
அவர்-பழி தம்-பழி அன்று.

1052 இன்பம் ஒருவற்கு இரத்தல்; இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

1053 கரப்பு-இலா நெஞ்சின் கடன்-அறிவார், முன்-நின்று
இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.

1054 இரத்தலும், ஈதலே போலும்; கரத்தல்
கனவினும் தேற்றாதார்-மாட்டு.

1055 கரப்பு-இலார் வையகத்து உண்மையான், கண்-நின்று,
இரப்பவர் மேற்கொள்வது.

1056 கரப்பு-இடும்பை இல்லாரைக் காணின், நிரப்பு-இடும்பை
எல்லாம் ஒருங்கு-கெடும்.

1057 இகழ்ந்து, எள்ளாது ஈவாரைக்-காணின்; மகிழ்ந்து-உள்ளம்
உள்ளுள் உவப்பது-உடைத்து.

1058 இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண் மா-ஞாலம்
மரப்பாவை சென்று-வந்தற்று.

1059 ஈவார்-கண் என்-உண்டாம், தோற்றம்; இரந்து-கோள்
மேவார் இலாஅக்கடை?

1060 இரப்பான், வெகுளாமை-வேண்டும்; நிரப்பு-இடும்பை
தானேயும் சாலும் கரி.

1051. இரந்து கேட்கத் தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும்; அவர் இல்லையென்று ஒளிப்பாரானால் அது அவர்க்குப் பழி; தமக்குப் பழி அன்று.

1052. இரந்து கேட்ட பொருள்கள் துன்பமுறாமல் கிடைக்குமானால், அவ்வாறு இரத்தலும் இன்பம் என்று சொல்லத் தக்கதாகும்.

1053. ஒளிப்பு இல்லாத நெஞ்சும் கடமையுணர்ச்சியும் உள்ளவரின் முன்னே நின்று இரந்து பொருள் கேட்பதும் ஓர் அழகு உடையதாகும்.

1054. உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் அறியாதவனிடத்தில் இரந்து கேட்பதும் பிறர்க்குக் கொடுப்பதே போன்ற சிறப்புடையது.

1055. ஒருவர்முன் நின்று இரப்பவர் அந்த இரத்தலை மேற்கொள்வது, உள்ளதை இல்லை என்று, ஒளித்துக் கூறாத நன்மக்கள் உலகத்தில் இருப்பதால்தான்.

1056. உள்ளதை ஒளிக்கும் துன்ப நிலை இல்லாதவரைக் கண்டால், இரப்பவரின் வறுமைத்துன்பம் எல்லாம் ஒருசேரக் கெடும்.

1057. இகழ்ந்து எள்ளாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளேயே உவகை அடையும் தன்மையுடையதாகும்.

1058. இரப்பவர் இல்லையானால், இப் பெரிய உலகின் இயக்கம் மரத்தால் செய்த பாவை கயிற்றினால் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும்.

1059. பொருள் இல்லை என்று இரந்து அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இல்லாதபோது, பொருள் கொடுப்பவரிடத்தில் என்ன புகழ் உண்டாகும்?

1060. இரப்பவன் எவரிடத்திலும் சினம் கொள்ளாதிருக்க வேண்டும்; அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அறிவு புகட்டும் சான்றாக அமையும்.

# 107. இரவு அச்சம்

1061 கரவாது, உவந்து-ஈயும் கண்-அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

1062 இரந்தும் உயிர்-வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக, உலகு-இயற்றியான்!

1063 ‘இன்மை இடும்பை இரந்து தீர்வாம்’ என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

1064 இடம்-எல்லாம் கொள்ளாத்-தகைத்தே; இடம்-இல்லாக்-
காலும், இரவு-ஒல்லாச் சால்பு.

1065 தெள்-நீர் அடு-புற்கை-ஆயினும், தாள்-தந்தது
உண்ணலின் ஊங்கு-இனியது இல்.

1066 ‘ஆவிற்கு நீர்’ என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

1067 இரப்பன், இரப்பாரை எல்லாம்; ’இரப்பின்,
கரப்பார் இரவன்மின்’ என்று.

1068 இரவு-என்னும் ஏமாப்பு-இல் தோணி, கரவு-என்னும்
பார்-தாக்க, பக்கு விடும்.

1069 இரவு-உள்ள, உள்ளம் உருகும்; கரவு-உள்ள,
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

1070 கரப்பவர்க்கு யாங்கு-ஒளிக்கும் கொல்லோ? இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்!

1061. உள்ளதை ஒளிக்காமல் உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண்போல் சிறந்தவரிடத்திலும் சென்று இரவாமலிருப்பதே கோடி மடங்கு நல்லது.

1062. உலகத்தைப் படைத்தவன் உலகில் சிலர் இரந்தும் உயிர்வாழுமாறு ஏற்படுத்தியிருந்தால், அவன் இரப்பவரைப் போல் எங்கும் அலைந்து கெடுவானாக!

1063. வறுமைத் துன்பத்தை இரப்பதன் வாயிலாகத் தீர்ப்போம் என்று கருதி முயற்சியைக் கைவிட்ட வன்மையைப் போல் வன்மையானது வேறு இல்லை.

1064. வாழ வழி இல்லாத போதும் இரந்துகேட்க உடன்படாத சால்பு, உலகத்தில் இடமெல்லாம் கொள்ளாத அவ்வளவு பெருமையுடையதாகும்.

1065. தெளிந்த நீர்போல் சமைத்த கூழே ஆனாலும், முயற்சியால் கிடைத்ததை உண்பதைவிட இனிமையானது வேறொன்றும் இல்லை.

1066. பசுவிற்கு நீர்வேண்டும் என்று அறம் நோக்கி இரந்து கேட்டாலும் அந்த இரத்தலை விட நாவிற்கு இழிவானது மற்றொன்று இல்லை.

1067. இரந்து கேட்பதானால் உள்ளதை ஒளிப்பவரிடத்தில் சென்று இரக்கவேண்டாம் என்று இரப்பவர் எல்லோரையும் இரந்து வேண்டுகின்றேன்.

1068. இரத்தல் என்னும் காவல் இல்லாத மரக்கலம் உள்ளதை ஒளித்துவைக்கும் தன்மையாகிய வன்னிலம் தாக்கினால் உடைந்துவிடும்.

1069. இரத்தலின் கொடுமையை நினைந்தால் உள்ளம் கரைந்து உருகும்; உள்ளதை ஒளிக்கும் கொடுமையை நினைந்தால், உருகுமளவும் இல்லாமல் அழியும்.

1070. இரப்பவர்‘இல்லை’ என்று சொல்கின்ற அளவிலேயே உயிர் போகின்றதே; உள்ளதை இல்லை என்று ஒளிப்பவர்க்கு உயிர் எங்கு ஒளிந்திருக்குமோ?

# 108. கயமை

1071 மக்களே போல்வர், கயவர்; அவர்-அன்ன
ஒப்பாரி யாம்-கண்டது இல்.

1072 நன்று-அறிவாரின் கயவர் திரு-உடையர்;
நெஞ்சத்து அவலம் இலர்!

1073 தேவர் அனையர், கயவர்; அவரும்-தாம்
மேவன செய்து, ஒழுகலான்!

1074 அகப்-பட்டி ஆவாரைக்-காணின், அவரின்
மிகப்-பட்டுச் செம்மாக்கும், கீழ்.

1075 அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவா-உண்டேல், உண்டாம் சிறிது.

1076 அறை-பறை அன்னர் கயவர்; தாம்-கேட்ட
மறை-பிறர்க்கு உய்த்து-உரைக்கலான்.

1077 ஈர்ங்-கை-விதிரார் கயவர்; கொடிறு-உடைக்கும்
கூன்-கையர் அல்லாதவர்க்கு.

1078 சொல்ல, பயன்படுவர் சான்றோர்; கரும்பு-போல்
கொல்ல, பயன்படும் கீழ்.

1079 உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்-மேல்
வடுக்-காண வற்று-ஆகும், கீழ்.

1080 எற்றிற்கு உரியர் கயவர்; ஒன்று உற்றக்கால்,
விற்றற்கு உரியர் விரைந்து.

1071. மக்களே போல் இருப்பர் கயவர்; அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமை வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் யாம் கண்டதில்லை.

1072. நன்மை அறிந்தவரைவிடக் கயவரே நல்ல பேறு உடையவர்; ஏன் என்றால், கயவர் தம் நெஞ்சில் எதைப் பற்றியும் கவலை இல்லாதவர்.

1073. கயவரும் தேவரைப் போல் தாம் விரும்புகின்றவைகளைச் செய்து மனம் போன போக்கில் நடத்தலால், கயவர் தேவரைப் போன்றவர்.

1074. கீழ்மக்கள் தமக்குக் கீழ்ப்பட்டவராய் நடப்பவரைக் கண்டால், அவரைவிடத் தாம் மேம்பாடு உடையவராய் இறுமாப்படைவர்.

1075. கீழ்மக்களின் ஆசாரத்திற்குக் காரணமாக இருப்பது அச்சமே; எஞ்சியவற்றில், அவா உண்டானால் அதனாலும் சிறிதளவு ஆசாரம் உண்டாகும்.

1076. கயவர், தாம் கேட்டறிந்த மறைபொருளைப் பிறர்க்கு வலியக்கொண்டுபோய்ச் சொல்லுவதால், அறையப்படும் பறை போன்றவர்.

1077. கயவர் தம் கன்னத்தை இடித்து உடைக்கும்படி வளைந்த கை உடையவரல்லாத மற்றவர்க்கு உண்ட எச்சில் கையையும் உதறமாட்டார்.

1078. அணுகிக்குறை சொல்லிய அளவிலேயே சான்றோர் பயன்படுவர்; கரும்புபோல் அழித்துப் பிழிந்தால்தான் கீழ்மக்கள் பயன்படுவர்.

1079. கீழ்மகன் பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டால் அவர்மேல் பொறாமைகொண்டு, வேண்டும் என்றே குற்றம் காண வல்லவனாவான்.

1080. கயவர் எதற்கு உரியவர்? ஒரு துன்பம் வந்தடைந்த காலத்தில் அதற்காகத் தம்மைப் பிறர்க்கு விலையாக விற்றுவிடுவதற்கு உரியவர் ஆவர்.